www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஒக்.19–25,1997
11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 227

## வன்னிக்கள அதிசயம்

## ஆச்சரிய மோதல்கள்

## கள அலசல்

## கிடுக்கிப்பிடி



## நடிகரைக் கட்டிவைத்த நடிகர்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

# முரசம்

## கண்களை விற்று.....

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அம்பாறையில்
தமிழ் மக்கள்மீது நடத்தப்பட்ட
தாக்குதலுக்கு
இதுவரை உரிய நடவடிக்கை
எடுக்கப்படவில்லை!

சம்பந்தப்பட்ட பொலிசாரை
இடமாற்றுவதுதான்
நடவடிக்கை என்றால்
அதன்பெயர் கண்துடைப்பு!

ஆனால், அதுதான் நடந்துள்ளது.
ஊரைக் கொளுத்தியவர்கள்
ஊர் மாற்றப்பட்டுள்ளார்கள்!

இதொன்றும்
புதுமையான நடைமுறையல்ல.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற
உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்
பல உயிர்கள் பலியாகக் காரணம்
ஒரு பொலிஸ் அதிகாரி.

அப்போது ஆட்சியில் இருந்தது
சிறீலங்கா சுதந்திரக் கட்சி.

குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிக்கு
முதலில் பதவி உயர்வும்
பின்னர் இட மாற்றமும்
வழங்கப்பட்டது!

அதன் பின்னர்
ஐ.தே.கட்சி ஆட்சியினரும்
வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு
இடமாற்றம் வழங்குவதை
வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்!

சம்பந்தப்பட்ட சிறுபான்மையினருக்கு
இடமாற்றங்கள்
ஒருவகையில் பாதுகாப்பளித்தன
என்றுதான் சொல்ல வேண்டும்!

கடந்தகால ஆட்சியாளர்கள்'
கையாண்ட அணுகுமுறைகளால்
இனப்பிரச்சனை தீவிரமடைந்தது
என்கிறார் ஜனாதிபதி சந்திரிக்கா.

அந்தக் கூற்றில்
உண்மையின் சாரமிருக்கிறது!
அதே அணுகுமுறைகள்
இன்றும் தொடர்வதில்தான்
சொல்லுக்கும் செயலுக்கும்
இடைலிலான தூரமிருக்கிறது!

அம்பாறைச் சம்பவத்தை
அரச செய்தி ஊடகங்கள்கூட
அலட்சியப்படுத்தி இருந்தன!

'பயங்கரவாதம்' பற்றி
வாய் ஓயாமல் சொல்லிவரும்
அரச செய்தி ஊடகங்களுக்கு
தமிழ்க் கிராமவாசிகள்மீதான
வன்முறை வெறியாட்டம்
பயங்கரவாதமாகத் தெரியவில்லையா?

சிங்களக் கிராமம் ஒன்றில்
இத்தகைய வெறியாட்டம் நடந்தால்
அரச வானொலி
விலாவாரியாக விபரித்திருக்கும்!
அரச தொலைக்காட்சி
படம் பிடித்துக்காட்டியிருக்கும்!

ரி.என்.எல்.போன்ற
தனியார் தொலைக்காட்சிகள்,
செய்திச் சுதந்திரம் என்ற ரீதியில்
குண்டுவெடிப்புக் கோர
அவலங்களை
ஆஸ்பத்திரிக்குள்ளும் சென்று
படம்பிடித்துக் காட்டத் தவறியதில்லை!

அதனால் ஒரு விதமான
குழப்பமான நிலை தோன்றலாம்
என்றுகூட நினைப்பதில்லை!

தமிழ் பேசும் மக்கள்
பாதிக்கப்படும் விடயங்களில் மட்டும்
பாராமுகமாக இருக்கின்றன.

அம்பாறையை
வெட்டியெடுத்துக் கொள்ளலாம்
என்று விருப்பம் தெரிவித்துள்ள
கிழக்கின் கூட்டணி எம்.பி.களும்
அறிக்கை விட்டதோடு
அமைதியாகிவிட்டனர்.

அம்பாறைத் தொகுதியில் உள்ள
சிங்கள மக்களின் பாதுகாப்பை
கருத்தில் கொண்டு
கிழக்கில் இருந்து அதனைப் பிரிக்க
அரசாங்கம் முன்வந்துள்ளது!

அதே அரசாங்கம்
அம்பாறையில்-
வேலியே பயிரை மேய்ந்ததுபோல-
சிறுபான்மையினரால் தமிழ் மக்கள்
தாக்கப்பட்ட விடயத்தில்
தகுந்த நடவடிக்கை எடுக்க
தயங்கி இருக்கிறது.

இப்படியிருக்கையில்
அம்பாறை தனியாக பிரிக்கப்பட்டால்
அங்குள்ள தமிழ் மக்களின்
பாதுகாப்புக்கு
உத்தரவாதம் யார்?


விட்டுக்கொடுப்புக்கு
உடன்பட முன்னர்
கிழக்கு கூட்டணி எம்.பிகள்
கேட்டிருக்கவேண்டும் அதை!

"கண்களை விற்றுச்
சித்திரம் வாங்குவதோ?"
என்றார் பாரதி.

நம் அரசியல்வாதிகள் சிலரும்
கண்களை விற்கச் சம்மதித்துள்ளனர்.
ஆனால் தங்கள் கண்களையல்ல;
தமிழ் பேசும் மக்களின் கண்களை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## இவ்வுலக செல்வத்தின் பயன்!

உங்களிடம் தேவைக்கு அதிகமாக செல்வம் இருக்குமானால், அதை ஏழைகளுக்கும் பகிர்ந்தளியுங்கள். அதையே கடவுளும் விரும்புகிறார்.

சிறுவயது முதலே ஆண்டவரின் கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடித்து வந்த ஒருவன் அவரை நோக்கி, "முடிவில்லாத வாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும்?" என கேட்கிறான். அதற்கு அவர் மறுமொழியாக, "போய் உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடு! வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும்!" என்கிறார். (மத் 19:16-22)

இவ்வுலகில் உங்கள் செல்வங்களை சேர்த்துக் கொள்ளாதீர்கள். மாறாக இற்றுப்போகாத பணப்பைகளையும், வானகத்தில் குறையாத செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள்! அங்கே திருடன் அண்டுவதில்லை. பூச்சி அரிப்பதுமில்லை. (லூக் 12: 33-34)

எவ்வகை பொருளாசையும் கொள்ளாதபடி கவனமாய் இருங்கள். ஏனெனில் "ஒருவனுக்கு எவ்வளவுதான் இருந்தாலும் செல்வப்பெருக்கத்தினால் வாழ்வு வந்துவிடாது" என இயேசு போதித்தார். உன் அயலில் ஏழை ஒருவன் வறுமையால் பட்டினி கிடக்கும்போது, நீ மட்டும் செல்வந்தனாய் உண்டும் குடித்தும் மகிழ்ந்திருக்காதே. எனவே சகோதரர்களே! இறைவன் உங்களைப் பார்த்து உறுதியாகக் கூறுகிறார்:

"பணக்காரன் விண்ணரசில் நுழைவதைவிட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது." (மத் 19:23-25) எனவே சிந்தித்து எமது வாழ்வை உகந்ததாக்குவோம்.

ஜே. யூட் கிலேரியன், மட்டக்களப்பு.

## உண்மையை உணர்ந்த உமர் (ரலி)

ஒரு நாள் கலீபா உமர் (ரலி) அவர்கள் பைத்துல்மால் பொறுப்பாளருக்கு ஒரு கடிதம் எழுதி தனது மகனிடம் கொடுத்தனுப்பினார்.

அக் கடிதத்தில் 'எனக்குச் சம்பளமாகக் கிடைக்கக்கூடிய இம்மாதச் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை முற்பணமாக என் மகனிடம் அனுப்பிவையுங்கள். இன்ஷா அல்லாஹ் எனது அடுத்த மாதச் சம்பளத்தில் அதனைக் கழித்துக் கொள்ளலாம்' எனக் குறிப்பிட்டு இருந்தார்.

இக் கடிதத்தைப் பார்த்த பைத்துல்மால் பொறுப்பாளர், இதற்கான பதிலை எழுதுகையில், 'தாங்கள் முற்பணமாகக் கேட்கும் பணத்தை அடுத்த மாதச் சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு நீங்கள் உயிரோடு இருப்பதற்கு உறுதியளிக்க முடியுமா?' என்று எழுதி கலீபாவின் மகனிடம் அனுப்பிவைத்தார்.

இப் பதிலைப் பார்த்த கலீபா உமர் (ரலி) அவர்கள் கண்ணீர் வடித்தவர்களாக உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.224

பரிசுக்குரிய கவிதை

### உயிர் மட்டும் மீதமாய்...

கல்மேடை பஞ்சணையாய்;
கை மடிப்பே தலையணையாய்;
நன்றியுள்ள ஒரு சீவன் நற்றுணையாய்;
தெருவோரம் உறங்குமிந்தத் தமிழனிடம்
இனி இழப்பதற்கு
அருமந்த உயிரன்றிப் பெறுமதியாய்
ஒருபொருளும் இங்கே மீதமில்லை!

திருமதி கிருஷ்ணன் ராஜேஸ்வரி-
பூவரசங்குளம், வவுனியா.



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### புகலிடம்!

தென் மேற்கில்
யாவருக்கும்
புகலிடம்!
வட கிழக்கில் யாவருக்கும்
சத்திரம்!

இ.இராஜசேகரா-கல்லடி,
மட்டக்களப்பு

### கொடை!

நிம்மதி...
நித்திரை...
ஆண்டவன் கொடை!

சுபா வரன்-கண்டி.

### நடைப்பிணமோ நாம்?

போரொன்று மட்டும்
புரையோடிப்போனதனால்
தெரு நாயாய் எம் வாழ்வு!
தெரு இருக்கை திண்ணை எல்லாம்
பரிதாபம் எம்படுக்கை!
பாழ்போன போராலே
நடைப் பிணமோ நாமிங்கு!

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி, மட்டக்களப்பு.

### என் நிலை!

ஆயிரம் சொந்த முண்டு;
ஆயினும், எனது கையில்
'ஆயிரம்' ஒன்றுமில்லை;
ஆகையால் சொந்தமில்லை!
நாயிலும் கேடு கெட்டேன்!
நடுத்தெரு உறங்குகின்றேன்!

ஏ.ஏ.அமீர் அலி- கிண்ணியா.

## கவிதைப் போட்டி இல.227



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 25.10.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.227
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

### நன்றி

கைப்பிடித்தவளோ
கைதாகி காவலிலே!
கைதுக்குப் பயந்த மகன்
கண்காணாத் தேசத்திலே!
கைப்பொருளை இழந்தபின்னே
காணவில்லை சுற்றத்தை!
நன்றியுள்ள நாய் மட்டும்
இன்றுவரை காலடியில்!

சி.மு.சுந்தரேசன், அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### தொலைந்த வாழ்வு

கைகள் தலையணையாய்
கல் மெத்தை பஞ்சணையாய்
கால் நீட்டவும் இடமின்றி
கானலிலே உறக்கமேனோ?
காலத்தின் கோலமோ?
கடவுள் இட்ட சாபமோ?
கல் மாரியெனப் பொழியும்
செல் வீச்சு செய்த வினை!

எம்.ஏ.நஜுமுதீன்-
அக்கரைப்பற்று.

### துணை

நின்றும் இருந்தும் நடந்தும் புவியில்
தேடிய பொருளெல்லாம் அழிந்தனவோ?
நன்றிநிறைந்த நாய் மட்டும் இங்கே
என்றும் துணையென்று
துயில்கின்றதோ?

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### பட்டினி

சொந்த பந்தமில்லை- இன்று
சோறுமில்லை என்று
சோர்ந்து கிடப்பவனை
அண்டி உண்ணும் பிராணிக்கும்
அன்று பட்டினியா?

எஸ்.சிவானந்தன்-திருமலை.

### 'மிருக வடிவில் மனிதம்'

காப்பாற்றக் கடமைப்பட்டோர்.
கைவிட்ட பின்னருங்கூட
விழித்திருந்து காக்கும் நாய்
மனித வடிவில் மிருகங்கள் வாழ
மிருக வடிவில் மனிதம் கண்டோம்!

செ.தாரகைச்செல்வி- ஆரையம்பதி.

# வாசக(ர்)சாலை



### தப்புக் கணக்கு!

கடந்த 23-09-97ல் அம்பாறை 4ம் கொலனியில் நடந்ததென்ன, என்பது மூடி மறைக்கப்பட்டது. அதன் உண்மைச் சம்பவத்தை நீ விபரித்துவிட்டாய். அதிரடிப் படையினர் பொலிசாரை புலிகள் என நினைத்தது தப்பு. பொலிசாரும் தப்பியோட நினைத்ததும் தப்பு. ஓடிவிட்டு குற்றத்தை புலிகள் மீது போட்டு மறைத்து விட்டனர். ஆனால் அவர்கள் கணக்கு தப்புக்கணக்கு என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டாய்.

செல்வன் எஸ்.புவனேஸ்வரன்,
சித்தானைக்குட்டிபுரம், காரைதீவு-03.

இனிய முரசே!

முரசம் சொன்ன உத்தமமான யோசனைக்கு! ஆசிரியருக்கு இனிய கை குலுக்கல்! ஏனெனில் மதகுருமீது உங்களுக்கு மதிப்பு ஏற்பட்டதற்கு! அன்று தொட்டு (1947 சோல்பரி யாப்பு நீக்கப்பட்டது முதல்) இன்றுவரை இனர்தியாக அரசியலில் செல்வாக்கு செலுத்தி வரும் அமுக்க குழுக்களான சில மதகுருமார்கள் தங்கள் உண்மை நிலையை திருவாய் மலர்ந்துள்ளமை வரவேற்கத்தக்கது. "ஆத்ம நெறியை வளர்க்க போகிறீர்களா? அல்லது ஆயுதம் ஏந்தப் போகிறீர்களா?" என அன்றுகேட்ட கேள்விக்கு இன்று சிங்களக் கமிஷன் அறிக்கையின் மூலம் பதில் கூறிவிட்டனர்.

செல்வி வி.இராஜேஸ்வரி,
குமாரவேலியார் கிராமம், செங்கலடி.

ட'ண்பு மிக்க முரசே! உனை பாராட்டாத நாளே கிடையாது. வாழ்க! உன் பணி! வளர்க! உன் வெளிப்பாடுகள். பூலான், மைத்ரேயி, சுமதி என மூன்று விதமான பெண்களை அறிமுகப்படுத்தி விட்டாய். அரசியல் அலசல் முதல் அமிழ்த்தப்பட்ட அனைத்தையும் சூட்டோடு பரிமாறும் உனக்கு வாழ்த்துக்கள்!.

திருமதி பவளராணி, வவுனியா.

பெண்களுக்கு புடவை ஆசை பற்றிய வாசகரின் கேள்விக்கு சிந்தியாவின் நெத்தியடியான பதிலும், பழங்குடியினரின் சாகச லீலைகளில் தகவல் பெட்டியுமாக முரசு அசத்திவிட்டது. சூடு, சுவை, சுவாரசியமாக செய்திகளை தொகுத்து வழங்கும் முரசுக்கு எனது பாராட்டுக்கள்!.

செல்வி சஷிகலா சிவகுரு, தெமோதரை.

அன்பின் முரசே..!

வாரம் ஒரு முறை எப்போது நீ உதயமாவாய் என்று ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு இருப்பேன். நீ அள்ளிவரும் பூலான்தேவி, உடைந்த இரவு, கனவு மெய்ப்பட வேண்டும் என்னும் தொடர் கதைகள் அனைத்தும் சூப்பர். ஆனால் மைத்ரேயியை நினைக்கும் போதுதான் கோபம் வருகிறது.

செல்வி ஆர்.ஜெஸ்வின், இறக்குவானை.

முரசு அடைந்துவரும் வளர்ச்சியினால் நீண்ட கால வாசகன் என்ற முறையில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அண்மையில் நான் கண்ட காட்சி என்னை மிகவும் கவர்ந்தது. கல்முனையில் பிரதான வீதி வழியாக நடந்து சென்றபோது ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி மத்தியான வெயிலில் குடையின் கீழ் இருந்து 'முரசு' படித்துக் கொண்டிருந்தார். செருப்புத் தைத்து சம்பாதித்த பணத்தில் 11/= ரூபாவைக் கொடுத்து தினமுரசைப் படிக்கின்றார். 'முரசை'ப் பற்றி நான் அன்று எவ்வளவு பெருமைப்பட்டேன் தெரியுமா?

யூ.முஸ்தாக் அஹமட், நிந்தவூர்-19.

துன்பங்களை அனுபவிக்க அனுபவிக்கத் தான் அதன் கொடூரம் விஸ்வரூபமெடுக்கும் என்பதை உணர்வுபூர்வமாக எம் மனக்கண் முன் கொண்டு வருகிறாள் பூலான்தேவி!

எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு-10.

### வெடிக்காத பட்டாசு

எத்தனையோ பேர் என்னமோ சொன்னார்கள். யோசனையை திட்டம் என்றார்கள். அதற்குள்ளே பற்பல அதிசயமெல்லாம் இருப்பதாகவும் சொன்னார்கள். அரசியல்வாதிகளை இன்று பதம்பார்க்கும் விமர்சகர்களும் அன்று 'இதுவல்லோ சமாதான முன்முயற்சி' என்று புகழ்ந்தார்கள். இறுதியிலே என்னாச்சு? எல்லாம்தான் பொய்யாச்சு. வெடிக்காத பட்டாசு. முரசுக்கு நன்றி. தீர்வு யோசனையின் நோக்கத்தையும் அது எங்கு போய் முடியும் என்றும் இரண்டுவருடமாக தளம்பல் இன்றி விளக்கினாயே!?

பா.விவேகானந்தன், மட்டக்களப்பு.

### யார் கொடுத்தார் ஆணை?

யாரங்கே காதிலை பூ கந்தசாமியாரா? அழைத்துவாரும் எங்கள் ஆமாம் போடும் சாமிகளை. தமிழ் மக்கள் சார்பாக பேசுவதற்கும், விருப்பம் போல விட்டுக் கொடுத்து நாடகமாடவும் யார் கொடுத்தார் ஆணை? மக்கள் மன்றத்தில் விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும்.

அ.ஜெகதீசன், காரைதீவு.

### விலாங்குமீன்

இதுவெறும் புகழ்ச்சியல்ல. முரசின் அரசியல் கண்ணோட்டம் எத்தனை துல்லியம் என்பதை பொ.ஐ.முன்னணியின் புதிய யோசனையை பத்திரிகைகள் வாயிலாக அறிந்தபோது உண்மையாகவே பிரமித்தேன். வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக்கூடியதான தீர்வை அரசால் வழங்க முடியாது என்பதை 'முரசு' அரசியல் அலசலில் உரைத்தே வந்தது. கூட்டணியினரின் பாம்புக்குத் தலை மீனுக்கு வால் என்ற விலாங்குமீன் நிலைப்பாடும் பொறுத்த நேரத்தில் வெளிப்பட்டுவிட்டது.

கே.அர்ஜுனன், திருகோணமலை.

### இரண்டுமேதான்!

அன்புள்ள முரசே!

சிங்களக் கமிஷன் அறிக்கைக்கு அரசாங்கம் பணிந்துவிட்டதா? அல்லது அதனை ஒரு பிடியாகவைத்து தமிழ்க் கட்சிகளுக்கு பூச்சாண்டி காட்டியிருக்கிறதா? இரண்டும்தான் நடந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

எம்.என்.லஸ்பர், காத்தான்குடி.

### கோணலான அணுகுமுறைகள்

அரச தரப்பினர் தீர்வு யோசனைகளை அன்று முன்வைத்தபோதே, அதிகாரப்பகிர்வு அலகு தொடர்பாக அதில் குறிப்பிடாமல் விட்டதை பிரதான பிரச்சனையாக தமிழ்க் கட்சிகள் எழுப்பியிருக்கவேண்டும். அதற்கு பதில் கிடைத்த பின்னரே, ஏனைய அதிகாரப் பகிர்வு விடயங்கள் பற்றி ஆலோசிக்க இணங்கியிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் தீர்வு யோசனை பல்லவியுடன் போர்ப் பரணியையும் கலந்து பாட முடிந்திருக்காது; இத்தனை கால இழுத்தடிப்புக்கும் அவகாசம் இருந்திருக்காது. விவேகம் இல்லாத தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறைகள் எல்லாவற்றையும் கோணலாக்கி வருகின்றன.

கே.சதாசிவம், கொழும்பு-10.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இ. 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# 'முல்லைத்தீவு சமர்' போன்ற பாரிய தாக்குதல்!

# ஐந்துநாள் மோதல் குறித்து புலிகள் விபரிப்பு

அக்டோபர் 5ம் திகதி முதல் 9ம் திகதி வரை 'ஜயசிக்குறுய்' படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான ஐந்து நாள் சமரில் 240 படையினர்வரை பலியாகியுள்ளனர் என்று சில தகவல்கள் தெரிவிக்கின்றன. 500க்கு மேற்பட்ட படையினர் மறுபடி போருக்கு செல்ல முடியாதளவில் காயங்களுக்கு உள்ளாகி இருப்பதாகவும் அத்தகவல்கள் கூறுகின்றன.

படையினர் தரப்பில் 500 பேர்வரை பலியாகி உள்ளனர் என்று புலிகள் கூறியுள்ளனர். புலிகள் தரப்பில் ஐந்துநாள் சமரில் 102 பேர் பலியாகினர்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலுக்கு ஒப்பான சமர், என்று ஐந்து நாள் சமர் குறித்து புலிகள் கூறியுள்ளனர்.

கரப்புக்குத்தி விநியோக தளத்தில் இருந்தும், கரிப்பட்ட முறிப்பில் நடத்தப்பட்ட அழித்தொழிப்பு ஊடறுப்புச் சமரிலும் தம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுதப்பட்டியலை புலிகள் வெளியிட்டுள்ளனர். படைத்தரப்பில் இருந்து பெறப்பட்டு கொழும்பு ஆங்கில பத்திரிகைகள் வெளியிட்ட பட்டியலும் புலிகள் வெளியிட்டுள்ள பட்டியலுடன் ஒத்துப் போகிறது.

### பட்டியல்

புலிகள் வெளியிட்டுள்ள பட்டியல் விபரம்:

புல்டோசர்கள் 08, பவள் கவச வாகனம்-02, ட்ரக் வண்டிகள் 02, லான்ட்ரோவர்-01, உழவு இயந்திரங்கள்-16, பிக்-அப்-02, இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட துருப்புக்காவி கவச வாகனம்-01, பாரம் தூக்கி-01, மோட்டார்சைக்கிள்கள் 06, பஸ்வண்டி 01, மற்றும் ஜெனரேட்டர்கள், குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் டாங்கி ஒன்றும் அழிக்கப்பட்டது.

**கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:** 81 எம்.எம். மோட்டார்கள்-14, 60 எம்.எம். மோட்டார்கள் 22, கலிபர் துப்பாக்கிகள்-07, ஆர்.பி.ஜி.க்கள்-04, மற்றும் கிரனேட் லோஞ்சர்கள், ரி.56 ரகத் துப்பாக்கிகள், கண்ணி வெடிகள்.

**ரவைகள், ஷெல்கள் விபரம்:** 120 எம்.எம். ஆட்டிலெறி ஷெல்கள் 1405, 120 எம்.எம்.பரா ஷெல்-138, 81 எம்.எம்.ஷெல்-6785, 81 எம்.எம்.பரா ஷெல்-83, ஆர்.பி.ஜி. ஷெல்-1677, மற்றும் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

படையினர் பாதுகாப்பு அரண் அமைத்துத் தங்கியிருக்க கொண்டு சென்ற அரிசி மூட்டைகள், சீனி மூட்டைகள், பருப்பு வகைகள் உட்பட பெருந்தொகையான உணவுப் பொருட்கள், மற்றும் மருந்துப் பொருட்கள் என்பவற்றையும் கைப்பற்றி ட்ரக் வண்டிகளில் புலிகள் ஏற்றிச் சென்றனர்.

### தாக்கப்பட்ட முகாம்

கரிப்பட்ட முறிப்பு நோக்கி படையினர் சென்றபோது புலிகளின் முகாம் ஒன்று தாக்கப்பட்டது. அதனை பிரபாகரன் தங்கும் 'வன் ஃபோர் முகாம்' என்று செய்திகளில் கூறப்பட்டன.

வன் ஃபோர் முகாம் முல்லைத்தீவில் இருக்கிறது. விஞ்ஞானகுளப் பகுதியில் பானு தலைமையிலான புலிகளின் அணி தங்கியிருந்த முகாம் ஒன்றுதான் படையினரால் தாக்கப்பட்டது. தாக்குதலுக்கு முன்பாக பானு தலைமையிலான அணி அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டது.

பின்னர் கரப்புக்குத்தியில் படையினரின் விநியோகத் தளம்மீதான தாக்குதலில் பானு தலைமையிலான அணியே பிரதான பங்கு வகித்ததாகத் தெரிகிறது.

### புலிகள் அறிக்கை

'ஜயசிக்குறுய்' படையினருடன் கரப்புக்குத்தி, கற்கிடங்கு, கரிப்பட்ட முறிப்பு பகுதிகளில் நடைபெற்ற சமர்கள் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளன. மரபுப்போர் முறையில் படையினரை எதிர்கொள்ளக் கூடிய ஆயுத தளபாட பலங்களைப் பெற்றுத் தந்துள்ளன, என்று புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரிப்பட்ட முறிப்பு காட்டுப் பகுதிகளுக்குள் தமது அணிகள் தொடர்ந்து தேடுதல் நடத்துவதாக 15.10.97ல் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை படையினர் வெளியிடாமல் உள்ளனர். காயமடைந்த படையினரைக் கவனிக்கும் அமைப்புக்கள் உண்மை நிலையை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்றும் புலிகளின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கரிப்பட்டமுறிப்பில் புலிகளின் முற்றுகையை உடைத்துக்கொண்டு வெளியேறி பெரியமடுப் பகுதியில் உள்ள படையினருடன் இணைய கரிப்பட்ட முறிப்புக் காடுகளில் உள்ள படையினர் முயன்று வருகின்றனர்.

காடுகளுக்குள் இருந்தபடி புலிகள் தம்மை நெருங்கவிடாமல் ஆட்டிலெறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை படையினர் நடத்திவருகின்றனர்.

### நகர்வு முயற்சி

கரிப்பட்டமுறிப்பில் உள்ள படையினரை மீட்க பெரியமடுப் பகுதியில் உள்ள படையினர் தரை நகர்வு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். பின்வாங்கிய பகுதிகளுக்கு மறுபடி செல்லவும் முயற்சிக்கப்படுகிறது. புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பருவமழை பெய்யத் தொடங்கிவிட்டதால் டாங்கிகள், கனரக வாகனங்கள் நகர்வதும் கடினமாக இருக்கிறது.

'ஜயசிக்குறுய்' படையினரின் புதிய தரை நகர்வுகளை பயன்படுத்தி தங்களுக்கான கனரக ஆயுதங்களைப் பெறும் வகையில் புலிகள் தாக்குதல்களுக்கு திட்டமிடுகின்றனர்.

அடர் காடுகளுக்குள் 'ஜயசிக்குறுய்' படையினர் செல்ல முனைவது அகலக் கால் வைப்பது போல் ஆகிவிடும். படையினரை உள்ளே இழுத்து புலிகள் சுற்றி வளைத்துக் கொள்ள வாய்ப்புக்கள் இருக்கும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# 'ஜயசிக்குறுய்' மேற்கொண்ட புதிய நகர்வு!

## பூகோளத் தகவல் கொடுத்தவர் யார்?

'ஜயசிக்குறுய்' படையினர் நயினாமடு ஊடாக மாங்குளத்துக்கு செல்லக்கூடிய தரைப்பாதை பற்றி தகவல் கொடுத்தவர் ஒரு தமிழ் அரசியல்வாதி என்று கூறப்படுகிறது.

பூகோள வரைபடம் மூலம் வன்னிப் பெரு நிலப்பரப்பு பற்றி படையினர் அறிந்து வைத்திருக்கலாம். ஆனால் வரைபடம் மூலம் அறிவதற்கும், குறிப்பிட்ட தரைப்பாதை அமைப்பு, காட்டுப் புற அமைப்புக்கள் பற்றிய உள் தகவல்கள் பரிச்சயமாக இருக்காது.

யாழ் குடாநாட்டில் என்றால் அங்கு முன்னர் பணியாற்றிய ஒரு அதிகாரிக்குக்கூட தரையமைப்பு நினைவில் இருக்கும்.

ஆனால் வன்னித் தரையமைப்பு மாறுபட்டது. அங்கு முன்னர் ஒரு காலத்தில் பணியாற்றிய அதிகாரிகள்கூட காட்டுப் பகுதிகள் மற்றும் உட்பகுதிகளின் தரையமைப்பை ஆழமாக அறிந்திருக்க இயலாது.

வன்னியில் உள்ள மக்களுக்கேகூட அங்குள்ள பல தகவல்கள், பல பகுதிகள் பற்றி பெரிதாகத் தெரியாது.

இந் நிலையில் மிகத் துல்லியமான தகவல்களுடன் படையினர் திட்டம் தீட்டி தரை நகர்வை மேற்கொண்டது எப்படி என்பது பலருக்கு வியப்பாக இருந்தது.

உண்மையில் படையினர் இம்முறை வகுத்திருந்த தரை நகர்வு பாதை மிகப் புத்திசாலித்தனமானது. மரபுப் படையணிக்கு சாதகமானது. ஆனால் புலிகளின் கடும் உக்கிரமும், சண்டையிடும் திறனும், புலிகளிடம் உள்ள மரபுப்படைக்கல பலமும்தான் படையினருக்கு தடையானது.

வன்னிப் பூகோள அமைப்புடன் நன்கு பரிச்சயமான ஒரு மூத்த தமிழ் அரசியல்வாதிதான் ,வவுனியா சாலை வழியாக முன்னேறத் தேவையில்லை, சுலபமான மற்றொரு பாதை உண்டு என்ற பூரண விபரங்களை தெரிவித்ததாக ஒரு தகவல் கசிந்திருக்கிறது.

குறிப்பிட்ட அரசியல்வாதிக்கு முன்னர் மாங்குளம் சார்ந்த பகுதிகளில் காணிகள் இருந்தனவாம்.

கிளிநொச்சியில் நன்கு அறியப்பட்ட, ஒரு காலத்தில் புலிகளுடனும் நன்கு தொடர்பு வைத்திருந்த கட்சி ஒன்றின் முக்கியமானவராம் அவர்.

இது பற்றி தமிழ்க் கட்சி வட்டாரங்களிலும் தெரிய வந்திருக்கிறது. "படையினருடன் ஆயுதங்களுடன் நிற்பவர்கள் என்று எங்களைத் தூற்றுகிறார்கள். ஆனால் தாங்கள் மட்டும் கெட்டித்தனமாக நடந்து கொள்கின்றனர். தங்கள் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மக்களிடம் இருந்து மறைக்கவும் முற்படுகின்றனர்" என்று தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர் 'குமுறி இருக்கிறார்.

# புலிகளுக்கு தடை! படையினருக்கு பயிற்சி!

## இலங்கையில் அமெரிக்க பயிற்சியாளர்கள்

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக மூன்றாவது தடவையாக அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்கள் குழு ஒன்று அண்மையில் கொழும்பை வந்தடைந்துள்ளது. அமெரிக்காவின் 'சர்வதேச இராணுவப் பரிவர்த்தனை மற்றும், பயிற்சி திட்டம்' என்ற அடிப்படையில் 'கிறீன் பேரட்' என்ற அமைப்பின் பயிற்சியாளர்களே இங்கு வந்துள்ளனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் இங்குவந்த 'கிறீன் பேரட்' பயிற்சியாளர்கள் தென் இலங்கையிலுள்ள வீரவில என்ற முகாமில் வைத்து சிறிலங்காப் படையினருக்குப் பயிற்சி அளித்தனர். 30 நாட்கள் மட்டும் இப்பயிற்சி இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் வந்திருந்தனர்.

சிறிலங்கா கடற்படையினருக்கு தங்காலைக் கடலில் இவர்களுக்குப் பயிற்சி அளித்துவிட்டுத் திரும்பினர். மூன்றாவது முறையாக இராணுவப் பயிற்சியை அளிப்பதற்காக மற்றுமொரு தொகுதி அமெரிக்க 'கிறீன் பேரட்' பயிற்சியாளர்கள் கடந்த வாரம் இங்கு வந்து சேர்ந்துள்ளனர் என்று தெரிகிறது.

இவ்வருடம் முடிவதற்குள்மேலும் மூன்று தடவைகள் அமெரிக்கப் பயிற்சியாளர்கள் இங்கு வருவார்கள் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு அதிகாரி லெப்.கேணல் ஹறோல்டு மைக்கேல் பூர் தெரிவித்தார். ■

# காயமடைந்த உடல்களை மீட்பதில் சிரமம்!

## கொழும்பு ஆங்கில வார இதழ் கூறுகிறது

'ஜயிக்குறுய்' படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதலில் பலியான, மற்றும் காயமடைந்த படையினரை மீட்டெடுப்பது சிரமமாக உள்ளதாம். இத்தகவல்களை சண்டே ரைம்ஸ்' 12.10.97ல் வெளியிட்டுள்ளது.

"மோட்டார் ஷெல்களை புலிகள் ஏவுவதால் படையினரின் உடல்களை ஏனைய படையினர் நெருங்கிச் சென்று எடுத்துவர முடியவில்லை.

காயமடைந்தவர்களை உடனடியாக அநுராதபுரத்துக்கோ, கொழும்புக்கோ கொண்டு செல்ல முடியாமல் இருப்பதால் காயமுற்றோர் வேதனை தாங்காமல் தவிப்பது பரிதாபத்துக்குரியதாக உள்ளது.

பருவமழையும் பொழியத் தொடங்கிவிட்டதால், போர் முனையில் இருந்து அவசர சிகிச்சை நிலையங்களுக்கு காயப்பட்டோரை கொண்டு செல்ல முடியாமல் உள்ளதாம்" இவ்வாறு சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை தமது பலியான உறுப்பினர்களது உடல்களையும், காயப்பட்டவர்களையும் போர்முனையில் இருந்து புலிகள் எப்படி விரைவாக கொண்டு செல்கின்றனர் என்பது வியப்பாக உள்ளது.

ஒரு அரசாங்கமே காயப்பட்டவர்களை சிகிச்சை அளிக்கவும், அழைத்துச் செல்லவும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கும்போது, புலிகள் தங்கள் குறைந்த வசதியுடன் எப்படிச் சமாளிக்கிறார்கள் என்று ஆச்சரியமாக உள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர். ■

# அந்த நபரை அகற்றுக

மட்டக்களப்பு-முறக் கொட்டாஞ்சேனையிலுள்ள படைமுகாமினாலும், அங்கு படையினருக்கு உதவியளிக்கும் சபாநாயகம் என்னும் நபர் ஒருவரினாலும் தாம் பருத்த நெருக்கடியை எதிர்நோக்குவதாகவும், தினமும் அச்சமும் பீதியும் கொண்டு வாழ வேண்டியிருப்பதாகவும் அங்குள்ள மக்கள் ஜனாதிபதி, பிரதி பாதுகாப்பு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பிரதேச செயலாளர், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்குக் கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

படையினருக்கு உதவிக்காக இருந்துவரும் சபாநாயகம் என்பவர் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் மீது மேற்கொண்டுவரும் அடாத்தான நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டியுள்ளதோடு அவரை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்துமாறும், அப்பகுதி மக்கள் அனுபவித்துவரும் நிம்மதியற்ற வாழ்க்கைக்கு அவரது முறைகேடான நடவடிக்கைகளே காரணம் என்றும் பொது மக்கள் சிலரால் கையொப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். ■

# மகா சங்கத்திடம் நாட்டை தாருங்கள்

"இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தால் முடியாவிட்டால் நிர்வாகத்தை மகாசங்கத்தினரிடம் ஒப்படைத்து விடுங்கள்!" என்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பாலி மற்றும் புத்த சமய உயர்தர விரிவுரையாளரான மீகொட ஸ்ரீ பன்னலோக தேரர் அறைகூவல் விடுத்துள்ளார். இரத்மலானையிலுள்ள ஒரு தர்ம போதனைப் பாடசாலையின் 74வது ஆண்டு பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு நிகழ்த்திய உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

பன்னலோக தேரர் தொடர்ந்து பேசுகையில், சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மகாசங்கத்திடம் தான் ஆற்றல் உள்ளது. சரியான பாதையில் நாட்டை இட்டுச் செல்ல பௌத்த பிக்குகளால் மட்டும்தான் முடியும்.

நாட்டிலுள்ள காணிகள் முழுவதும் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்குப் பெரும் அநீதி விளைவிக்கப்பட்டுவிடும். இன்றுள்ள நிலையிலேயே சிங்கள் மக்கள் பெரும் அநீதிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. வட-கிழக்குப் பிரதேசம் வேற்று இனத்தவர்களின் கைக்கு மாறுமானால் பெரும்பான்மைச் சமூகம் சீரழிந்து போவது நிச்சயம்!" இவ்வாறு பன்னலோக தேரர் குறிப்பிட்டார். ■

# ஹெலி மூலம் பூத்தூவ விருப்பம்

வடமராச்சியில் உள்ள அல்வாய் ஆழ்வார் ஆலயத்தில் தேர்த்திருவிழா 14.10.97 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத் திருவிழாவுக்காக சைக்கிள் பாதுகாப்பு நிறுவுவதில் கோயில் நிர்வாகத்தினருக்கும், வடமராட்சி படை அதிகாரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதாம்.

தான் கூறும் நபருக்குத்தான் சைக்கிள் பாதுகாப்பு வழங்குமாறு படை அதிகாரி கூறினாராம். கோயில் நிர்வாக சபைத் தலைவரும், யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளருமான தேவதாஸ் அதனை ஏற்கவில்லை.

இதன்பின்னர் இரண்டு சைக்கிள் பாதுகாப்புக்கள் போடப்பட்டன. 'சுத்துமாத்து நைலோன்' என்று அழைக்கப்படுவோருக்கு படை அதிகாரி அனுமதி கொடுத்திருந்தார்.

தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஹெலிகொப்டர் மூலம் வானில் இருந்து பூத்தூவ ஏற்பாடு செய்யப்போவதாக படை அதிகாரி அனுமதி கோரினார். "இங்கே எங்கள் விடயங்களையே நாங்கள் சுயமாகசெய்ய முடியவில்லை. அதெல்லாம் வேண்டாம்" என்று விரிவுரையாளர் தேவதாஸ் கூறிவிட்டாராம்.

# யாழில் இராணுவ தினம்

இலங்கை இராணுவத்தின் 48வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடெங்கும் படையினர் இரத்ததானம் வழங்குவதில் ஈடுபட்டனர்.

யாழ் குடாநாட்டிலும் 15 படையினர் யாழ் அரச வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர். மருத்துவமனை ஊழியர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்பட்டது.

தென்மராட்சி-வடமராட்சி போன்ற பகுதிகளில்உள்ள தேவாலயங்களில் விசேட பிரார்த்தனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

# காணாமல் போன மோட்டார்க் குண்டுகள்!

## பணம் கொடுக்க அரசு மறுப்பு!

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கு யுத்தத்துக்கான ஆயுதங்களை அவ்வப்போது உற்பத்தி செய்து அனுப்பி வைத்த ஸிம்பாப்வே இராணுவத் தொழிற்சாலை நிர்வாகம், தங்களுக்குத் தருமதியான 20 கோடி ரூபாவை பாதுகாப்பு அமைச்சு தர மறுப்பதாகக் குற்றம் சுமத்தியிருக்கிறது. இத்தொகையினைப் பெறுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

ஸிம்பாப்வே நிறுவனம், ஏற்கனவே 7.62 ரக வெடி பொருட்கள் 500,000 மற்றும் கிளைமோர் கண்ணிவெடிகள் 2,000 ஆகியவற்றையும் விமானம் மூலம் அனுப்பி வைத்திருக்கிறது. இவை தவிர கடந்த ஜூலை இறுதியில் 120 எம்.எம்.ரக. மோட்டார்கள் 17,500 அனுப்பப்பட்டிருக்கிறது. இவற்றுக்கான பெறுமதியான 20 கோடி ரூபாவையே சிறிலங்கா தரமறுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸிம்பாப்வே நிறுவனம் 1 கோடி 80 இலட்சம் டொலர் பெறுமதியான, 81 எம்.எம்.ரக மோட்டார் குண்டுகள் 32,400 கொண்ட 12 கொள்கலன்களை சிறிலங்காவுக்கு ஜூலை மாத முற்பகுதியில் கப்பலில் அனுப்பி வைத்தது. இந்தக் கப்பலும் குண்டுகளும் மாயமாக மறைந்ததும் தெரிந்ததே.

இக்கப்பலை எல்.ரி.ரி.ஈ.கடத்தி குண்டுகளை அபகரித்து விட்டதாக நம்பகமான தகவல்கள் வெளிவந்தன. சர்வதேசப் பொலிசார் 'இண்டர்போல்' தலையிட்டும் மர்மம் துலங்கவில்லை. இந்தக் கப்பலுக்கும் குண்டுகளுக்கும் உண்மையில் என்ன நடந்தது என்று நிரூபிக்கப் படாதமையினால் தாங்கள் ஏனைய உபகரணங்களுக்குரிய பணத்தைத் தர முடியாதென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கூறியிருப்பதாகத் தெரிகிறது.

காணாமற்போன குண்டுகளுக்கான பெறுமதி ஒரு கோடி எண்பது இலட்சம் டொலரை ஸிம்பாப்வே நிறுவனம் பாதுகாப்பு அமைச்சிடம் கோரவில்லை. தவிர காணாமற்போன குண்டுகளுக்காக ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் அந்நிறுவனம் மேலும் 3,600 மோட்டார் குண்டுகளை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கு விமானம் மூலம் இலவசமாகவே அனுப்பியிருக்கிறது என்று தெரிகிறது. ■

# புலிகளிடம் தப்பியோட்டம்

கடந்த வாரம் மட்டக்களப்பு-செங்கலடியுள்ள புளொட் இயக்க அங்கத்தவர்கள் இருவர் இரு ரைபிள்கள், ஒன்பது கைக்குண்டுகள், நான்கு மகசின்கள் சகிதம் புலி இயக்கத்தினரிடம் ஓடிச் சென்றுள்ளனர். சகோதர முறையான இவ்விருவரில் ஒருவர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் புலிகள் இயக்கத்திலிருந்து வந்து புளொட் இயக்கத்தில் சேர்ந்து கொண்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. புலிகளிடம் ஆயுதங்களுடன் ஓடிச் சென்ற மற்றவரின் சொந்த சகோதரர் ஒருவர் ரெலோ இயக்கத்தில் அங்கத்தவராக உள்ளார்.

இவர்கள் இருவரும் புலிகள் இயக்கத்தினரிடம் ஓடிச் சென்றதைச் சகிக்காத புளொட் இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் தப்பியோடியவர்களது வீட்டிற்குச் சென்று அவர்களது உறவினர்களை எச்சரித்துள்ளனர்.

படையினருடன் இணைந்து செயற்படும் அனைத்து இயக்கத்தவர்களும் படையினரின் முகாம்களுக்குள் பூரண சலுகைகளுடன் நடமாடித் திரிவதுண்டு. அந்த வகையில் தப்பியோடிய அந்த இருவரும்கூட அவ்வாறே இருந்தார்கள். அவர்களிருவரும் செங்கலடிப் பகுதியிலுள்ள புளொட், ரெலோ, படையினர், பொலிஸார் ஆகியோர் பற்றிய போதிய விபரங்களைத் திரட்டிக் கொண்டு தப்பியதாகவே சொல்லப்படுகிறது.

ஒரு வேளை புலிகளே வேண்டுமென்று புளொட் இயக்கத்தில் சேர்ந்து தகவல்களைத் திரட்டுமாறு தம்மிடம் தற்பொழுது புளொட் இயக்கத்திலிருந்து தப்பி வந்துள்ள தமது முன்னாள் அங்கத்தவருக்குக் கட்டளையிட்டிருக்கக்கூடும் என்றும் ஊர் மக்களால் ஊகம் தெரிவிக்கப்படுகிறது. ■

# காட்டிக் கொடுத்த காதலி

மட்டக்களப்பு கொம்மாதுறையைச் சேர்ந்தவர் இன்பசாகரன். இவர் பல வருடங்களுக்கு முன்னர் படையினரால் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூஸா தடுப்பு முகாமில் சிறைவைக்கப்பட்டிருந்து விடுதலை பெற்று வந்தவர். புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டதாகவும் பின்னர் புலிகள் இயக்கத்திலிருந்து விலக முற்படும்போது அவர்கள் இவருக்குத் தண்டனை வழங்கினராம்.

இயக்கத்திலிருந்தும் விலகி சவூதி அரேபியாவுக்குச் சென்று ஆறு வருடங்கள் தொழில் புரிந்துவிட்டு இலங்கை திரும்பியபோது கொழும்பில் தனது ஆடையாள அட்டையைத் தொலைத்திருக்கிறார். எப்படியோ தனது வீட்டுக்கு வந்து சேர்ந்த அவர் அடையாள அட்டை தொலைந்த விடயமாக ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது 06.10.97 அன்று கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்படும்போது திருமணம் முடித்து 4 நாட்களே என்று கூறப்படுகிறது. இவரைத் திருமணம் செய்ய முதலில் விரும்பியிருந்த பெண் கொடுத்த தகவலிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. வெளிநாடு சென்று திரும்பியவுடன் இவர் வேறொரு பெண்ணைத் திருமணம் முடித்து விட்டாராம். ■



படிப்பகம்

www.padippakam.com

## ரூபவாஹினியில் தரமற்ற நாடகம்

ரூபவாஹினியில் 30.09.97 செவ்வாய்க்கிழமை இரவு 7.25 க்கு ஒளிபரப்பு செய்யப்பட்ட 'அருங்கல்' எனும் தொலைக்காட்சி நாடகம் தரமற்ற ஒன்றாக அமைந்திருந்தது.

இலங்கையில் திறமையான தமிழ் கலைஞர்கள் எண்ணற்ற அளவில் இருக்கும்போது அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்காது, சிங்களக் கலைஞர்களை கொண்டு அந்த பாத்திரங்களை நடிக்க வைப்பது ஏன்? தமிழ் மொழி உச்சரிப்புக்கள் கேட்க சகிக்க முடியாமல் இருக்கிறது.

அத்துடன் தமிழர்கள் எனும்போது அவர்களை நாகரிகமற்றவர்களாக காட்டுவது தொலைக்காட்சி நாடகங்களின் முக்கிய பண்பாகவே காணப்படுகிறது.

'அருங்கல்' தொலைக்காட்சி நாடகத்திலும் தமிழ் தம்பதியினரை வெற்றிலை போட்டு எச்சில் துப்புபவர்களாகவும், வாசற்படியிலேயே நாகரிகமற்று அமர்ந்திருப்பவர்களாகவும் காட்டப்பட்டுள்ளது.

இவற்றினைக் காணும்போது' தமிழர்களையும், தமிழ் மொழியையும் இழிவு செய்வதனை விட தமிழர்களை கருவாக கொண்டு நிகழ்ச்சிகளைத் தயாரிக்காமல் இருப்பதே மேல் என எண்ணத் தோன்றுகிறது.

எனவே இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ நிகழ்ச்சிப் பிரிவினர் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எஸ்.ஸ்ரீதேவி, பதுளை.

## நாலாம் கொலனி அகதிகளின் நிலவரம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நாலாம் கொலனி தமிழ் மக்கள் அகதிகளாகி இரு வாரங்கள் கழிந்துவிட்டன. சேனைக்குடியிருப்பு கணேச வித்தியாலயத்தில் 396 குடும்பங்கள் உள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

**உண்மை நிலவரம் என்ன?**

* 23ம் திகதி அனர்த்தத்தில் உண்மையில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 185 தான்.

* கல்முனை பிரதேச செயலாளர் ஒரு வாரம் கழித்தே அரச உலர் உணவை வழங்கினாராம்.

* எம்.பி.என்று வந்த பொ.செல்வராசா 'யுனிசெவ்'விடம் பெற்ற 'ரென்ற்'ஐ கொடுத்துவிட்டு பத்திரிகைகளில் விளம்பரம் பெற்றுக் கொண்டார்.

* மக்கள் அதிரடிப்படையை பூரணமாக நம்புவது பொலிசாருக்கும், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் விருப்பமில்லையாம்.

* அகதிகளை வைத்து ஒரு பொது நல அமைப்பு விளையாடிவருகிறதாம்.

* அம்பாறை மாவட்டத்தில் நடந்த சம்பவம் மாவட்டத்தை பிரதி பலிக்கும் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒருவார்த்தைகூட அமைச்சரால் கூறப்படாததன் மர்மம் என்ன?

* 4ம் கொலனிக்குரிய இருகிராம சேவகர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.எஸ். காரைதீவு.

## பாதை மாற்றத்தால் சாரதிகள் அவதி!

1990ம் ஆண்டு கலவரம் காரணமாக இடம் பெயர்ந்த குச்சவெளி மக்கள் மீண்டும் 1992ம் ஆண்டு மீளக் குடியமர்த்தப்பட்டனர். பிரதான கற்பாதை குச்சவெளி இராணுவ முகாமின் ஊடாகச் செல்வதால் அதனூடாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டது.

பின்னர் பாதுகாப்பு ஒழுங்கு கருதி அப்பாதை மூடப்பட்டு ஏற்கனவே உடைக்கப்பட்டிருந்த சந்தை காணியினூடாக புதிய பாதை அமைக்கப்பட்டு வாகனங்கள் சென்றன. தற்போது அப்பாதையும் பாதுகாப்பு நலன் கருதி மூடப்பட்டுள்ளது. தற்போது வேறு ஒரு- சுமார் முக்கால் கிலோ மீட்டர் நீளமான சிறு வீதியூடாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வீதி சுமார் எட்டடி அகலம் கொண்டதாகும். இப்பாதையூடாக எதிர் எதிராக இரண்டு வாகனம் வரும்போது சாரதிகளும், பயணிகளும் பல கஷ்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

ஏ.ஏ.சிபுனிஸ்.

## பாண்டிருப்பில் தீ மிதிப்பு

(காரைதீவு நிருபர்)

வரலாற்றுப்புகழ் பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மனாலய வருடாந்த தீ மிதிப்பு விழா அக்.17ல் நடைபெறும். அதற்காக பாதுகாப்பு, போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலய பக்கமே பொலிஸார் தலை காட்டமாட்டார்கள். ஏனென்று விளங்கும் தானே? பஞ்சும் நெருப்பும் சந்திக்காமலிருக்க இந்த ஏற்பாடு.

பிரதான வீதியிலுள்ள நீலாவணை, கல்முனை,காரைதீவு முகாம்களுக்கு முன்னால் இரவு 7 மணியுடன் வீதிப்போக்குவரத்து மூடப்படுவது வழமை. விழாக் காலத்தில்கூட அதை திறந்து விடமுடியாது என படை அதிகாரிகள் கூறுகின்றனர்.

அக்.15 அன்று வனவாசத்தில் 3000 பேர் மட்டில் கலந்துகொள்வர். அவர்களை தாளவெட்டுவான் சோதனைச் சாவடியூடாக சோதனையில்லாமல் செல்ல பி.ப. 4.00 மணிவரை அனுமதிக்கப்பட்டுள்ளது.

சூடுகண்ட பூனையல்லவா அவர்கள்? கடந்தவருடம் இதே காலப் பகுதியில்தான் மருதமுனை-பாண்டிருப்பு வன்முறை இடம்பெற்றது. அதற்காக இம்முறை சகலதும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## அடையாள அட்டை பெற ஒரு வாரம் அவகாசம்

திருமலை மாவட்டத்தில் குச்சவெளியில் 5 கிராம சேவகர் பிரிவுகளில் தற்போது 3 பிரிவுகள் இயங்குகின்றன. இப்பிரிவுகளுக்கு கடந்த பல மாதங்களாக இராணுவத்தினரால் மாவட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அண்மைக்காலம் வரை இம்மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் சுமார் 1100 மாவட்ட அடையாள அட்டைகள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் குச்சவெளியில் சுற்றிவளைப்பு நடைபெற்ற போக மாவட்ட அடையாள அட்டை பெற்றவர்களையும், பெறாதவர்களையும் இரண்டாக பிரித்து அடையாள அட்டை பெறாதவர்களுக்கு எச்சரிக்கையும், ஒருவார கால அவகாசமும் வழங்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் இவ்வடையாள அட்டை பெறாதவர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்' என்றும் இனி மேல் விறகு எடுக்க காட்டுக்குச் செல்பவர்கள் தங்கள் பெயர்களை இராணுவமுகாமில் பதிந்து விட்டே செல்ல வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஏ.ஏ.சிபுனிஸ்.-குச்சவெளி.

## தொடர் சுற்றிவளைப்புகள்

### வீதியில் குந்த வைப்பு

06.10.97 அன்று மன்னார் கூட்டுறவு செயலகத்தில் வர்த்தகர்களுடனான சந்திப்பொன்றினை மன்னார் இராணுவ இணைப்பதிகாரி ஏற்பாடு செய்திருந்தார். பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது. அண்மையில் மன்னாரில் வர்த்தகர்கள் பலர் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் பேசப்பட்டது. இன்னும் 6 மாதங்களுக்குள் லக்ஸபான மின்சாரம் மன்னாருக்கு வந்துவிடும் என இங்கு தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நகரில் அடிக்கடி சுற்றிவளைப்புக்கள் இடம் பெற்று பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்ற சம்பவம் தொடர்கிறது.

சுற்றிவளைப்பில் அகப்படுவோர் அந்த இடத்திலேயே குந்தி இருக்க வேண்டும். கடும் வெயிலிலும் இவ்வாறு இருக்க வேண்டி ஏற்படுகிறது. கடந்த 05.10.97 அன்று சந்தை வீதியின் இரு புறமும் சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்று, பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

## அஞ்சல்தின கடிதப்போட்டி

உலக அஞ்சல் தினத்தையொட்டி இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நாடு தழுவிய ஆங்கில மொழியிலான கடிதம் எழுதும் போட்டியில் திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவி செல்வி.ரி.பிரதீபா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

15 வயது மாணவர்களுக்கான இப்போட்டியில் முதலாம் இடத்தை கம்பஹா ரட்ணவாலி மகளிர் வித்தியாலய மாணவி செல்வி கயானி சிறிவர்த்தனவும் மூன்றாம் இடத்தை களுத்துறை மகளிர் மகா வித்தியாலய மாணவி செல்வி சசித்ரா டி அல்விஸும் பெற்றுக் கொண்டனர்.

## மீண்டும் செயற்படுகிறது!

(காரைதீவு நிருபர்)

கடந்த ஒருவாரகாலமாக மூடப்பட்டுக் கிடந்த காரைதீவு ஆஸ்பத்திரி, அம்பாறை பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.எம்.நக்கீஸ்துவின் நடவடிக்கையால் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

தற்போது புதிய டாக்டராக திருமதி கதிர்மலர் மகேசன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். ஏலவே இருந்த வைத்திய அதிகாரி மீது ஏகப்பட்ட குற்றச் சாட்டுக்களை பொதுமக்கள் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பணிப்பாளர் நக்கீஸ்து ஆஸ்பத்திரிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டார். உடனடியாக- இருந்த வைத்தியரை இடமாற்றம் செய்வதாகக் கூறினார். விரைவில் ஒரு புதிய வைத்திய அதிகாரியை நியமித்து தருவதாகவும் கூறியுள்ளார். தற்போது ஆஸ்பத்திரி சுமுகமாக இயங்குகிறது.

## கொண்டாடப்படாத ஆசிரியர் தினம்

உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் இம்முறை கிழக்கு மாகாணத்தில் களை கட்டவில்லை. கொண்டாட்ட பகிஷ்கரிப்புக்களே பெருமளவு இடம்பெற்றன.

மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்கள், பட்டதாரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்தனர்.

இடர்கால கொடுப்பனவுகள் வழங்கப்படாமையே ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரது அதிருப்திகளுக்கு பிரதான காரணமாகும். அதிபர்களுக்கு அரசால் தீர்மானிக்கப்பட்ட சம்பள உயர்வுகள் உட்பட அதற்கான நிலுவைகளும் வழங்கப்படவேண்டும் என்று அதிபர்கள் கோரியுள்ளனர்.

16.10.97 அன்று திருமலை கல்வி வலய அதிபர்களும், ஆசிரியர்களும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதம் நடத்த முடிவு செய்துள்ளனர்.


## இலவசக் கருத்தரங்கு

சுவிற்ஸர்லாந்திலுள்ள சுவிஸ் ஹொட்டல் நிர்வாகப் பள்ளியிலோ இந்தியாவில் கேரளா மாநிலம் பெரியாறு ஹொட்டல் வளாகத்திலோ டிப்ளோமாப்பயிற்சி நெறியில் சேருங்கள்.

**ஹொட்டல் நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த உயர்தர டிப்ளோமா-3ஆண்டுப் படிப்பு.**

சுவிஸ் ஹொட்டல் நிர்வாகப் பள்ளியின் இலங்கைப் பிரதிநிதிகளும் இந்தியாவிலுள்ள பெரியாறு சுவிஸ் நிர்வாகப்பள்ளி வளாகமும் இணைந்து மேற்படி படிப்புத் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை

**கொழும்பு- வெள்ளவத்தையிலுள்ள**
**ஹொட்டல் ச.:பயரில்**
**ஒக்டோபர் 23ம் திகதி**
**காலை 9.30 முதல் பகல் 1.00 மணிவரை**
**நடத்தவிருக்கின்றனர்.**

18 வயதுக்கு மேற்பட்டோர் ஜி.சீ.ஈ.(சா/த) ஆங்கிலத்தை ஒருபாடமாக எடுத்துச் சித்தியெய்தியிருந்தால், இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு அன்பாக அழைக்கிறோம். தெரிவு செய்வ.தற்கு வேண்டிய சான்றிதழ்களை ஆயத்தமாக்க் கொண்டுவரவும். பெற்றாரும் பங்கேற்கலாம்.

குறிப்பு: இந்தியாவில் கேரள மாநிலத்திலுள்ள பெரியாறு ஹொட்டல் வளாகத்தில் படிப்பது செலவுகுறைவானது.

**தலுவத்த & ஜா.:.பே அசோசியேற்ஸ்,**
**L.G. 15, பீப்பிள்ஸ் பார்க்,**
**கொழும்பு-11.**
தொலைபேசி: 320139

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY)

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்: மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு, விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388**

**கொழும்பில் ஒக்டோபர் 20 முதல் 30 வரை**

**Dr. P. Arumugam. AHAMED TOURIST INN.**
BANG BANG BUILDING. No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall St., Opposite Renjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி நவம்பர் 5, 6ம் தினங்களில்**

Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி.

**கல்முனையில் நவம்பர் 8, 9, 10, 11ம் தினங்களில்**

T.M.M. பாமசியிலும் T.P. 072/609388
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

## MYOWN COMPUTER SYSTEM

இவ்வருடமும் வழங்கும்

**1000 புலமைப் பரிசில்கள்**

எமது புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நடப்பவை:

- Diploma in Systems Engineering (1 வருடம்)
- Diploma in Information Technology (6 மாதம்)
- Diploma in Hardware Engineering (6 மாதம்)

ஆகிய மூன்று பாடநெறிகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவுத் திகதி-

**25 ஒக்டோபர் 1997 வரை நீடிக்கப்பட்டுள்ளது**

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் எமது பிராந்தியக் கிளைகளில் நேரடியாகவோ அல்லது கீழுள்ள முகவரிக்கு 20.10.1997க்கு முன் உங்கள் முகவரியை எழுதி அனுப்பி தபாலிலோ பெற்றுக்கொள்ளலாம்.

Director-
1000 SCHOLARSHIP PROGRAMME,
MYOWN
Computer System (Pvt.) Ltd.
500, Galle Road, Colombo-06.
Tel:- 580347
MYOWN GROUP

புதுமைப் பொலிவுடன் வண்ண வண்ண அமைப்பில் தீந் தமிழ் வசன நடையுடன்

**நியூ கலா கிரியேசன்ஸ் தீபாவளி வாழ்த்து மடல்கள்**

மும்முரமாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன 192, செட்டியார் தெரு, கொழும்பு - 11. தொலைபேசி : 332465




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பொறியும் – சமரும்!

வன்னியில் பருவ மழை கொட்டத் தொடங்கிவிட்டது. அடர் காடுகள், அடை மழை. இவற்றின் மத்தியில் ஷெல் மழை, சடசடக்கும் துப்பாக்கிகளின் ரவை மழை என்று மாபெரும் போர்க்களமாக மாறி இருக்கிறது வன்னிப் பிராந்தியம்.

கடந்தவாரம் இப் பகுதியில் குறிப்பிட்டது போலவே, கனகராயன் குளத்தையோ, மாங்குளத்தையோ படையினர் கைப்பற்ற முடியாமல்தான் உள்ளது.

பருவ மழைக்கு முன்பாக 'ஜயசிக்குறுய்' படைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வியூகங்களை வகுத்து முடிக்க படையினர் திட்டமிட்டனர்.

ஜயசிக்குறுய் படையினர் வன்னியில் இரு பிரதான முனைகளில் நிலை கொண்டுள்ளனர்.

வவுனியா-யாழ் சாலையில் புளியங்குளத்தை அண்மித்த பகுதிவரை நிலை கொண்டிருப்பது 55வது படையணி.

மணலாற்று படை முகாமில் இருந்து புறப்பட்டு நெடுங்கேணியில் நிலைகொண்டிருப்பது 53வது படையணி.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையின் பிரதான நகர்வுகள் வவுனியா-யாழ் சாலையில் 55வது படையணியால்தான் முன்னெடுக்கப்பட்டன.

புளியங்குளம் சந்தியைக் கைப்பற்ற கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக 55வது படையணி தரை நகர்வுகளை மேற்கொண்டது.

புளியங்குளத்தை . விட்டு புலிகளின் பலத்தை பல கூறுகளாகப் பிரித்து திசை திருப்ப 53வது படையணியின் முயற்சிகள் பயனளிக்கவில்லை.

அதே நேரம் புதூர் பகுதி ஊடாகவும், புளியங்குளம் நெடுங்கேணி சாலை ஊடாகவும் உள் நுழையும் புலிகளின் அணிகள் 55வது படையணியின் இருபுறப் பக்கவாட்டுப் பகுதிகளிலும் தாக்குதல்களை தொடுத்து சேதங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

55வது படையணிமீது புலிகள் மற்றொரு ஊடறுப்பை நடத்தினால் புளியங்குளப் பகுதியில் 55வது படையணியின் தலைப்பகுதி தனியாக துண்டிக்கப்படும் அபாயம் இருந்தது.

அதனால் புளியங்குள சந்தியை கைப்பற்றும் முயற்சியை கைவிட்ட 55வது படைப்பிரிவின் ஒரு அணி புளியங்குளத்துக்கு வடமேற்காக நகர்ந்து புதூர் நோக்கி முன்னேறியது.

புளியங்குளத்தில் நிலைகொண்டுள்ள புலிகளின் ஒரு பகுதியினரை அத் திசையில் இழுப்பதும், புலிகளின் ஊடறுப்பில் இருந்து 55வது படைப்பிரிவின் தலைப்பகுதியை பாதுகாப்பதும்தான் அந்த தரை நகர்வின் முதல் நோக்கங்கள்.

புளியங்குளத்தை வவுனியா-யாழ் சாலையில் சென்று கைப்பற்றுவது இயலாத காரியம். அங்குள்ள புலிகளின் அணிகளை திசை திருப்பி வேறு புறம் நோக்கி இழுக்க வேண்டுமானால், வவுனியா-யாழ் சாலையில் உள்ள புலிகளின் பிரதான மையமான மாங்குளத்தை குறிவைக்க வேண்டும்.

மாங்குளம் படையினரின் கையில் விழுந்தால் கிட்டத்தட்ட வவுனியா. யாழ் சாலை கைக்கு வந்தது மாதிரித்தான்.

கிளிநொச்சியில் இருந்தும் படைகள் மாங்குளம் நோக்கி தரை நகர்வு நடத்தலாம். மாங்குளத்தை கைப்பற்றினால் அதற்கும் புளியங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளில் உள்ள புலிகளின் அணிகள் மாட்டிக்கொள்ளும். அந்த அணிகள் ஒன்றில் சாலையைவிட்டு விலகி அருகிலுள்ள காடுகளுக்குள் செல்ல வேண்டும். அல்லது மோதலில் சிக்கி அழிய நேரிடும்.

அவைதான் புதிய திட்டங்கள். திட்டம் நல்லதுதான். ஆனால் மாங்குளத்துக்கு செல்வது எப்படி?

வரைபடம் விரிந்தது. நயினாமடுவில் நிலை கொண்டுள்ள 53வது படையணிக்கு உதவியாக வவுனியா-யாழ் சாலையில் நிலைகொண்டுள்ள 55வது படைப்பிரிவின் அணி ஒன்றை அனுப்புவது முதற்கட்டம்.

புளியங்குளத்துக்கு கீழே உள்ள மல்லிகை, சாமளாங்குளம் போன்ற கிராமங்கள் ஊடாக உட்பாதையில் நயினா மடுவுக்கு 55வது படைப்பிரிவின் பெரிய அணி ஒன்று போய்ச் சேரும்.

நயினாமடுவில் இருந்து கரப்புக்குட்டி, சின்ன அடம்பன், பெரிய அடம்பன் வழியாக மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியை சென்றடையலாம்.

அங்கிருந்து மாங்குளம் நோக்கிச் செல்லலாம். அங்கே படை நகர்வை தடுக்க புலிகளின் அணிகள் குவிக்கப்பட்டால், புளியங்குளப் பகுதியில் உள்ள படைகள் சாலை வழியாக முன்னேறி புளியங்குளத்தையும் பிடித்துவிடலாம் என்று கணக்குப் போட்டனர்.

இன்னொரு அணி கரப்புக்குட்டி ஊடாக கனகராயன் குளம் நோக்கி செல்லலாம். புளியங்குளத்துக்கும், மாங்குளத்துக்கும் இடையில் இருப்பதுதான் கனகராயன் குளம்.

இவ்வாறான படை நகர்வு தந்திரம் மூலம் புலிகள் பிரதான மூன்று முனைகளில் கவனம் செலுத்த வேண்டி ஏற்படும் என்று நினைத்தது படைத்தரப்பு.

**1) மாங்குளம் நோக்கி முன்னேறும் படைகளை தடுத்து நிறுத்துவது.**

**2) கனகராயன் குளத்தை கைப்பற்றும் முயற்சியை முறியடிப்பது.**

**3) புளியங்குளப் பகுதியில் உள்ள படைகள் முன்னேற விடாமல் தடுத்து நிற்பது.**

## முற்றுகையிடப்பட்ட படையணி

அதேவேளை புளியங்குளம் நெடுங்கேணி சாலை வழியாக புலிகளின் அணிகள் உள்ளே நுழைந்து 55வது படையணியின் மற்றொரு பக்கவாட்டில் கிழக்குப் புறமிருந்து தாக்கலாம்.

அதைத் தடுக்க இரண்டு வழிகள் படையினரிடம் இருந்தன.

**1) நெடுங்கேணியில் உள்ள 53வது படையணி புளியங்குளம் நெடுங்கேணி சாலையைக் கைப் பற்றி பாதுகாப்பு அரண் நிறுவுவது.**

**ஆனால் புலிகளின் கடும் எதிர்ப்பால் சாலையை நேராக கைப்பற்றும் முயற்சி கைகூடவில்லை.**

**2) நெடுங்கேணியில் இருந்து 53வது படையணி உட்பாதைகள் வழியாக நகர்ந்து மதியாமடு, நயினாமடு ஊடாக 55வது படைப்பிரிவுடன் தொடர்பை ஏற்படுத்துவது.**

இப் பாதையில் சிங்களக் கிராமங்கள் உள்ளன. அங்கு தமிழ்க் கிராமங்களில் இருந்தவர்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர்.

எனவே இந்த இரண்டாவது வழிமூலமாக இணைப்பை ஏற்படுத்த 53வது படையணி முயன்றது.

ஆனால் இவ்வாறான இணைப்பை ஏற்படுத்தினால்கூட புலிகள் கனகராயன் குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்தும், முல்லைத்தீவில் உள்ள தளங்களில் இருந்தும் அணியாக திரண்டுவந்து ஊடறுப்பு நடத்த முடியும்.

பருவமழை பேய் மழையாக பொழியும் காலத்தில் தாக்குப்பிடிக்க இந்த ஏற்பாடுகள் மட்டும்போதாது.

**இக் கட்டத்தில்தான் படைத்தரப்பு தலைமைப் பீடத்துக்கு உளவுப் பிரிவினரிடம் இருந்து அந்த திட்டம் கிடைத்தது.**

உண்மையில் இது ஒரு சிறந்த திட்டம்தான். வன்னி நிலப்பரப்புப் பற்றி நன்கு அறிந்த ஒருவர் மூலம் திரட்டப்பட்ட தகவல்களை வைத்து தீட்டப்பட்ட திட்டம்தான்.

வவுனியா-யாழ் சாலையில்தான் படைகள் நகரும் என்று எதிர்பார்த்து புளியங்குளத்தில் இருந்து மிகப் பலமான பாதுகாப்பு பதுங்கு நிலைகளை புலிகள் அமைத்து வைத்துள்ளனர்.

புளியங்குளத்தில் மேலும் இரண்டு மூன்று கிலோ மீட்டர் தூரத்தை கடந்தால் புளியங்குளம் சந்தி வந்துவிடும். அந்தத் தூரத்தை கடக்க மூன்று மாதம் அடிமேல் அடி அடித்தும் முடியாமல் போய்விட்டது.

எனவே சாலை வழியாக செல்வதைவிட நயினா மடுவில் இருந்து தரைப்பாதை ஊடாக டாங்கிகளையும், துருப்புக் காவிகளையும், ஆட்டிலெறிகளையும், புல்டோசர்களையும் நகர்த்திச் செல்வது சுலபம் என்பது படைத்தரப்பின் எண்ணம்.

ஆக, திட்டம் ரெடியானதும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மேலதிகத் துருப்புக்கள் நெடுங்கேணிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து நயினாமடு சென்றன.

**மிக இரகசியமாக படைக் குவிப்பு நடந்து கொண்டிருக்க, 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை நிறுத்தப்பட்டது என்ற தகவலையும் மெல்லக் கசியவிட்டனர். பத்திரிகைகளிலும் அச் செய்தி வெளியானது. புலிகளின் உஷார் நிலையைச் சற்று தளர்த்துவதற்கான தந்திரம் அதுவாக இருக்கலாம்.**

ஆனால் புலிகள் அந்த செய்திகளை நம்பவில்லை. 'ஜயசிக்குறுய்' படையினரை ஓய்வு பெறவிடாமல் தொடர்ந்து சிறு தாக்குதல்களை நடத்தினர். மோட்டார் ஷெல்களை ஏவினர்.

இறுதியாக தம் திட்டத்தை நிறைவேற்ற 'ஜயசிக்குறுய்' படைகள் களத்தில் இறங்கின. 55வது படைப்பிரிவின் ஒரு பெரிய அணியும் முன்பு திட்டமிட்டபடி நயினாமடு சென்று 53வது படைப்பிரிவுடன் ஒன்று சேர்ந்தது.


**புதிதாக இறக்குமதியான ஆயுதத் தளபாடங்கள், பல்லாயிரக்கணக்கான ஆட்டிலெறி மற்றும் மோட்டார் குண்டுகள், மிக நவீன குளிரூட்டப்பட்ட துருப்புக் காவிகள், மிக நவீன புல்டோசர்கள், காட்டுப் பகுதியில் சுலபமாக நகரும் டாங்கிகள் அனைத்தும் படையினருக்கு நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருந்தன.**

ஒக்டோபர் 2ம் திகதி நயினாமடுவில் இருந்து முன்னேறி பாதுகாப்பு அரண்களை விரிவாக்க முற்பட்ட படையினரை புலிகளின் அணிகள் தாக்கத் தொடங்கின.

புலிகளின் தாக்குதலில் 48 படையினர் பலியாகினர். 20 பேர் காணாமல் போயினர். 308 பேர் காயமடைந்தனர். ஒக்டோபர் 2ம் திகதி முதல் சண்டை உக்கிரமடையத் தொடங்கியது.

அதன்பின்னர் பாரிய ஆட்டிலெறித் தாக்குதல்கள், புல்டோசர்கள், கனரக வாகனங்களின் உதவியுடன் படையினர் கரப்புக்குட்டி நோக்கி முன்னேற முயன்றனர்.

கனகராயன் குளத்தில் இருந்து நாலரை




கிலோமீட்டர் தூரத்தில் வடக்கில் இருக்கும் பகுதிதான் கற்கிடங்கு. அதன் தென்கிழக்கில் 3 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பது கரப்புக்குத்தி.

**கரப்புக்குத்திவரை படையினர் முன்னேற அனுமதிக்கும்படி களத்தில் நின்ற புலிகளுக்கு உத்தரவு பறந்தது. படையினருக்கு சந்தேகம் வராதவகையில் அடையாள எதிர்ப்பை காட்டியபடி படையினரை கற்கிடங்கு, கரப்புக்குத்தி பகுதிகளுக்குள் உள்வாங்கினர் புலிகள்.**

ஆனால் கனகராயன் குளத்தை நோக்கி படையினர் முன்னேறமட்டும் புலிகள் அனுமதிக்கவில்லை.

கள நிலவரத்தை அவதானித்து புலிகள் உத்திகளை வகுத்துவிட்டனர் என்பதை ஊகிக்காத படைத்தரப்பு, கரப்புக்குத்தியில் தங்கள் விநியோக தளத்தை நிறுவியது.

கரப்புக்குத்தியில் இருந்து கனகராயன் குளம் நோக்கியும், மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் உள்ள கரிப்பட்ட முறிவு நோக்கியும் முன்னேறும் படைகளுக்கான விநியோக மையம் கரப்புக்குத்தியில் நிறுவப்பட்டது.

**படையினர் இன்னொரு தந்திரத்தையும் மேற்கொண்டனர். காடுகள் வழியாக சிறு குழுக்களாக புலிகளின் கண்களில் படாமல் சத்தமில்லாத நகர்வொன்றை மேற்கொண்டு பதுங்கிப் பதுங்கி ஒட்டிசுட்டான் மாங்குளம் வீதியில் உள்ள கரிப்பட்ட முறிவு வரை சென்றனர்.**

படை நகர்வுக்கு முன்னரான நோட்டம் பார்க்கும் முயற்சியே அதுவாகும். ஏனெனில் கரிப்பட்ட முறிப்புக்கு செல்வதற்கு முன்னர் அடர் காடுகளை தாண்டவேண்டும்.

எனவே காடுகளுக்குள் புலிகளின் நிலைகளை கண்டறியும், படை நகர்வுக்கு தோதான பாதையை மோப்பம் பிடிக்கவுமே சிறு குழுக்களாக படையினர் சென்றனர்.

அவ்வாறு சென்ற குழுவினர்தான் மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் வந்த லொறி ஒன்றை மறித்து, அதில் இருந்தவர்களையும் பிடித்து காட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பாதை கண்டபின்னர் கரப்புக்குத்தியில் இருந்தும் நயினாமடுவில் இருந்தும் பாரிய படையணிகள் கரிப்பட்ட முறிவை நோக்கி முன்னேறின.

படை நகர்வை புலிகளும் அவதானித்தனர். உள்ளே விடும்படி கிடைத்த உத்தரவுப்படி பாரிய எதிர்ப்பை புலிகள் காட்டவில்லை.

**கரிப்பட்ட முறிப்பு வரை படைகளை அனுமதித்தால் படை பலம் நீண்டு பரவலாகும். கரப்புக்குத்தியில் உள்ள படை பலம் குறையும். விநியோக மையத்தை கைப்பற்றலாம், பின்னர் கரிப்பட்ட முறிப்பில் வைத்து படையினரை முற்றுகை இடலாம் என்பது புலிகளின் திட்டம்.**

கரிப்பட்ட முறிப்பு என்ற இடம் மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் இருக்கிறது. ஒட்டிசுட்டானில் சண்டை என்ற செய்திகள் வந்தன அல்லவா. ஒட்டிசுட்டானில் இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதுதான் கரிப்பட்ட முறிப்பு. மாங்குளத்தில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் கிழக்கில் இருக்கிறது.

கரப்புக்குத்தியில் இருந்து கிட்டத்தட்ட எட்டு கிலோமீட்டர் தூரம் சென்றுதான் கரிப்பட்ட முறிப்பை அடைந்தனர் படையினர்.

கரிப்பட்ட முறிப்பில் வைத்து படையினரை மாங்குளம் நோக்கி முன்னேற விடாமல் புலிகள் தடுத்து தாக்கத் தொடங்கினர்.

கரிப்பட்ட முறிப்புவரை படையினரின் ஒரு பகுதியினரை முன்னேற அனுமதித்து, கரப்புக்குத்தியில் உள்ள படைபலத்தை குறைத்த புலிகள், தங்கள் நோக்கம் நிறைவேறியதும், அழித்தொழிப்பு தாக்குதலை ஆரம்பித்தனர்.

யாழ் மாவட்ட முன்னாள் புலிகளின் தளபதி பானு தலைமையில் கரப்புக்குத்தி, கற்கிடங்கு, விஞ்ஞான குளப் பகுதிகளில் புலிகளின் அணிகள் கடந்த ஞாயிறு இரவு புகுந்தன.

அதற்கு முன்னர் சுமார் அரைமணி நேரம் புலிகளின் 120 எம்.எம் ஆட்டிலெறிகளும், நீண்டதூர மோட்டார்களும் படை நிலைகளை நோக்கி ஷெல்களை தொடர்ச்சியாக ஏவின.

**காயமடைந்த ஒரு இராணுவ மேஜரின் தகவலின்படி புதுவருடப் பிறப்பு நேரத்தில் பட்டாசுகள் தொடர்ச்சியாக வெடிப்பதுபோல இருந்ததாம். காதுகள் அதிர்ந்தனவாம்.**

ஷெல் அடி ஓய்ந்ததும் புலிகளின் தாக்குதல் அணிகள் பாதுகாப்பு அரண்களை உடைத்துக் கொண்டு ஊடுருவிச் சென்றன.

கரப்புக்குத்தி விநியோக தளம் புலிகளின் கைக்கு சென்றன. அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருந்த முகாம்கள் இரண்டு புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஆட்டிலெறி நிலைகளையும் புலிகள் தாக்கினர். உதவிக்கு விரைந்த எம்.ஐ.24 ஹெலி கொப்டர் புலிகளால் சுடப்பட்டது. சேதமடைந்த நிலையில் உடன் திரும்பியது.

மறுநாள் திங்கள் அதிகாலை வரை புலிகளின் அழித்தொழிப்புச் சமர் தொடர்ந்தது. ஆட்டிலெறிகளை புலிகளின் கைகளுக்கு செல்ல விடாமல் பாதுகாக்க வேண்டும். அல்லது அழித்துவிடவேண்டும் என்பதுதான் படையினருக்கு இடப்பட்டுள்ள உத்தரவு.

**ஆட்டிலெறிகளுடன் பின்வாங்கிய படையினர் நெடுங்கேணிக்கு அருகிலுள்ள பெரியமடுவுக்குச் சென்றனர். பெரியமடுவில் இருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது கரப்புக்குத்தி.**

கரப்புக்குத்தியில் இருந்த படையினரின் விநியோக மையம் புலிகளால் அழித்தொழிக்கப்பட்டது. அதற்கு முன்னர் அங்கிருந்த பாரிய ஆயுதத் தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

**மரபுப்போரில் புலிகள் பலம் பெறக்கூடிய ஆயுதங்களை படையினர் புலிகளிடம் பறிகொடுத்தனர்.**

புல்டோசர்கள்-08, குளிரூட்டப்பட்ட நவீன துருப்புக்காவி கவச வாகனம்-01, பவள் கவச வாகனம்-02, பாரம் தூக்கி-01, போன்றவை புலிகள் மரபுப்போர் முறையில் பலம் பெற பெரிதும் உதவக்கூடியவை.

'ஜயசிக்குறுய்' சமரில் டாங்கிகள், துருப்புக் காவி கவச வாகனம் என்பவை முன்னர் கைப்பற்றப்பட்டன. ஆனால் புல்டோசர்கள் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் முறை. மிக நவீனரக புல்டோசர்கள் படையினரின் பாரிய பாதுகாப்பு அரண்களை உடைத்து தள்ளக் கூடியவை. ஏற்கனவே புலிகளிடம் மூன்று புல்டோசர்கள் இருந்தன. அவற்றைவிட நவீனமான எட்டு புல்டோசர்கள் இப்போது கிடைத்துள்ளன.

**கற்கிடங்கு, கரப்புக்குத்தி, விஞ்ஞான குளப் பகுதிகளில் இருந்து பெரியமடு நோக்கி படையினர் பின்வாங்கிக் கொண்டிருக்க, மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் கரிப்பட்ட முறிப்பில் நின்ற படையினரை புலிகளின் சிறப்புப் படையணிகள் சுற்றிவளைத்து தாக்குதலை ஆரம்பித்தன.**

கரிப்பட்ட முறிப்புவரை படையினரை உள் நுழைய அனுமதித்து, அழித்தொழிப்பு தாக்குதல் நடத்த பிரபாகரன் உத்தரவிட்டார்.

புலிகளின் அணிகள் கரிப்பட்ட முறிப்பு படையினரை இரு பாதியாக பிரிவடையச் செய்து ஊடறுத்தன.

ஒரு புறம் பிளவுபட்ட படையினர் சின்ன அடம்பன் நோக்கி பின்வாங்கி பெரியமடுப் படையினருடன் இணைப்பை ஏற்படுத்தி தற்காப்பு நிலை எடுத்தனர்.

மறுபுறம் பிளவுபட்ட படையினர் தனிமைப்பட்டனர். அவர்களை முற்றாக அழித் தொழிக்க புலிகள் முற்றுகைத் தாக்குதலை ஆரம்பித்தனர்.

ஆட்டிலெறிகள், கவச வாகனங்கள் சகிதம் கரிப்பட்ட முறிப்பு, மணவாளன்பட்ட முறிப்பு போன்ற பகுதிகளில் உள்ள கிட்டத்தட்ட ஒரு மைல் சுற்றளவான காட்டுப் பகுதிக்குள் படையினர் மறைந்துள்ளனர்.

**மூவாயிரம் படையினர்வரை அவ்வாறு தனிமைப்பட்டு உள்ளனர். ஒரு வாரத்துக்கு தேவையான உணவு மற்றும் ஒருவாரம் தாக்குப் பிடிக்கக்கூடிய ரவைகள், ஷெல்கள் என்பன அவர்களிடம் உள்ளன.**

புலிகள் காடுகளுக்குள் தேடி அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பருவமழை கொட்டத் தொடங்கி விட்டது.

கரிப்பட்ட முறிப்பு காட்டுக்குள் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள படையினரை மீட்பதுதான் படைத் தலைமைக்குள்ள பாரிய பிரச்சனையாகும்.

பெரிய மடு, சின்ன அடம்பன் பகுதிகளில் இருந்து கரிப்பட்ட முறிப்புக்கு படையணி ஒன்றை அனுப்ப படைத்தரப்பு பலத்த முயற்சி செய்கிறது.

ஆனால் 14.10.97 செவ்வாய் வரை படையினரின் முயற்சிகள் கைகூடவில்லை.

காட்டுக்குள் சிக்கியுள்ள படையினரை மீட்கத் தவறினால் பயங்கரமான ஆட்பல இழப்பு மட்டுமல்லாமல், கனரக ஆயுத பல இழப்பும் காத்திருக்கிறது.

**இப்போது மாங்குளத்தை பிடிப்பதோ, புளியங்குளத்தை சுற்றி வளைப்பதோ அல்ல பிரச்சனை. புலிகளை சுற்றி வளைக்கச் சென்று, புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கியுள்ள படை யினரை மீட்பதுதான் படையினரின் தலையாய பணியாகிவிட்டது. ஆனால் இத் தகவல்கள் அமுக்கப்பட்டுள்ளன.**

படையினர் முற்றுகைக்கு உள்ளாகியுள்ளதை கரிப்பட்ட முறிப்பில் இருந்து மாங்குளம் நோக்கி முன்னேற முயற்சி என்கிறார்கள். அது மட்டுமல்ல கனகராயன் குளத்தை படையினர் எட்டவில்லை. கரப்புக்குத்தியில் இருந்துகூட படையினர் பின்வாங்கிக் கொண்டிருந்தபோது, கனகராயன் குளம் வீழ்ந்தது என்று செய்தி வாசிக்கப்பட்டதுதான் வேடிக்கை.

படையினர் போட்ட திட்டத்தில் குறையில்லை. ஆனால் தங்கள் ஆட்பலம், ஆயுத பலம் என்பவற்றையும் புலிகளின் ஆட்பல, ஆயுத பலத்தையும் ஒப்பிட்டு படையினர் தங்கள் திட்டத்தை வகுப்பது தான் சறுக்கல்.

புலிகளின் பிரதான பலம் உளவியல் உத்வேகம். வன்னி மண்ணுடன் உள்ள பரிச்சயம். கிட்டத்தட்ட 14 வருட கெரில்லாப் போர் அனுபவம் கொண்ட தலைமை ஆகிய அம்சங்களை படையினர் கவனிக்கத் தவறுகின்றனர். கணக்குகள் தவறுவது அதனால்தான்! ■

நாரதர்

# அதிரடி அப்பாத்துரை



**கூட்டான கட்சியில்** மாவிட்டபுரத்தைச் சேர்ந்த அந்த முன்னாள் இளம் தலைவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஒருவர் சந்தித்தாராம். யாழ்ப்பாண நிலவரங்களை அவரிடம் கேட்டறிந்த அந்த 'முன்னாள் இளம் தலைவர்' "உங்களுக்கு என் நண்பர் ஒருவரை அறிமுகம் செய்கிறேன். அவரிடம் யாழ் நிலை பற்றி விளக்குங்கள்" என்று கூறினாராம். விளக்கம் கேட்க வந்தவர் ஆங்கிலத்தில் கதைத்தார். எல்லா நிலவரங்களையும் கேட்டறிந்துவிட்டு கடைசியாக தன்னை அறி... செய்தாராம். யாழ்ப்பாண ஆள் கலங்கிப்போனார். முன்னாள் ... தலைவரால் அறிமுகம் செய்யப்பட்டவர் உளவறியும் அதிகாரியாம். ...ய தமிழ்க் கட்சிகள் படையுடன் நிற்கினம் என்டு தமிழ் சனத்திடம் ...லும் கூட்டான கட்சி நாசூக்காக இப்படியான பல காரியங்களைச் ...த் தொடங்கியிருப்பது யாருக்குத் தெரியப்போகிறது?!

**...னக்கு வேண்டிய சில** பத்திரிகையாளர்களை அழைத்து புதிய ...னை பற்றி விலாவாரியாக விளக்கினாராம் நிலமானவர். "தயவு ... யோசனை சரியில்லை என்டு விமர்சனம் செய்யவேண்டாம். ...க் கணிப்பு நடத்துவது மட்டும் பிழையென்டு எழுதுவதானால் ...ங்கோ," என்டாராம். அதுதான் சிலர் புதிய யோசனை பற்றி 'டச்' ...ாமல் இருந்தவையாம். கருத்துக் கணிப்பு மட்டும்தான் பிரச்சனை. ...டக்காவிட்டால் சரி என்ற மாதிரியான எண்ணத்தை ஏற்படுத்தப் ...ினம். எல்லை மீள நிர்ணயக் கமிஷன் ஒன்று வரப்போகும் ...தை கூட தெரிந்தும் தெரியாத மாதிரி விட்டிருக்கினம். மாபுசார் ...ிகளுக்கு ரெண்டு எழுத்தாரையும் பிடிக்காது! ஏனைய தமிழ்க் ...ளையும் பிடிக்காது. 'கெட்ட ...' என்டதுதான் அபிப்பிராயம். ...ன கட்சி பிழைவிட்டால் கண்டும் காணாமல் இருப்பதன் மர்மம் அதுதானுங்கோ!

**அமெரிக்கக் கழுகு** கில்லாடிதான். முன்னர் அமெரிக்கா இங்கே கால்வைக்க இடதுசாரிகள் கண்டித்தவை. ஜே.வி.பியும் முன்னர் குண்டு வீசினது. சிங்கள மக்களிடம் நல்ல பெயர் எடுக்க இதுதான் தருணம். ரெண்டு எழுத்தாருக்கு எதிரியாகக் காட்டினால் எதிர்ப்புக் குரல்கள் எடுபடாது! இங்கே நினைச்சதைச் செய்யலாம். கால் வைக்கலாம்! சோழியன் குடுமி சும்மா ஆடுமோ? தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமில்லை, சிங்கள மக்களுக்கும் அல்வா கொடுக்கும் கழுகு! இந்த அல்வா இனிக்கும். ஆனால் மயக்கும். மயங்கி இருக்க கழுகு கண்களையும் கொத்திக் கொண்டு போயிடும். ஜாக்கிரதை!

**ரெண்டு எழுத்தாரை** அமெரிக்கா தடுத்துப்போட்டுது. நம் நாட்டில் மட்டும் தடுக்கமாட்டினமாம். அது பேச்சுக்குத் தடையாம். அப்படியென்றால் என்ன அர்த்தம்? உலக நெருக்கடி மூலம் ரெண்டு எழுத்தாரை மட்டுமல்ல, சகல தமிழ் பேசும் தரப்பையும் ஒரு அழுத்து அழுத்தி தாங்கள் கொடுக்கும் தீர்வை வாங்கவைக்கக் கூடிய பேச்சை நாடுகினம் என்டுதானே அர்த்தம். இந்த விஷயம் புரியாமல், ரெண்டு எழுத்தார் மீதான தடை பற்றி என்ன நினைக்கிறியள் என்டு கேட்டால், "அவைக்கு நிதி சேர்க்க கஷ்டம் வரும். உலகில் நடமாட கால் சுளுக்கும்" என்ட மாதிரி கருத்துச் சொல்லுகினம். சில தமிழ் அரசியல்வாதிகள். கத்தி தங்கள் தலைக்கு மேலும் தொங்குவது தெரியாமல், தடையின் நோக்கம் புரியாமல், "எங்களுக்கு ஒன்றும் இல்லை. அவர்தான் விழுந்துபோனார்! என்டு நினைக்கிற ஆட்களின் விவேகத்தை மியுசியத்தில்தான் வைக்க வேணும்!"

**வெகுஜன சபையில்** ஆட்கள் போதாது என்டு கூட்டத்தையே ஒத்தி வைத்த கதை தெரியும்தானே? அதிலும் தமிழ் வெகுஜனப் பிரதிநிதிகள் பேசினால் யாரும் ஒழுங்காகக் கேட்கிறதும் இல்லை. குறுக்கிட்டு சுவையாகச் சண்டை பிடிக்கிறதும் இல்லை. வெகுஜன சபை உரைகளை வைத்து, 'எல்லைக் காவலர்', 'மண்ணின் காவலர்' என்டெல்லாம் பட்டம் கொடுத்தது அந்தக் காலம். எல்லைக் காவலர் இருக்க எல்லைகள் காணாமல் போனதுதான் கண்ட பலன். இப்போது 'சம்பந்தமான' பிரதிநிதி தனது உரைகளை அரசியல் ஞான வெளிச்சமாகக் காண்பிக்கத் தொடங்கியிருக்கிறாராம்.

**மலையகத் தொண்டர்** இப்போது காரசாரமாகக் கருத்துச் சொல்வதில்லை. மலைப்பகுதி உள்ளக கட்டமைப்பை கவனிக்கும் பொறுப்பும், நிதியும் ஒதுக்கப்பட்ட பின்னர்தான் அடக்கம் காட்டுகிறார் என்டு கேள்வி. சிஷ்யரை ஓரம் கட்டின சந்தோசத்தில் இருக்கிறாரோ தெரியவில்லை.

**காணாமல் போனோருக்காக** கழகத்தினர் யாழ் குடாநாட்டுக்கு வெளியே போராட்டம் நடத்தினவை. அதைப் பார்த்துப் போட்டு முன்னாள் மாகாண சபை கட்சியும் தேனகத்தில் போராட்டம் நடத்தியது. சிங்களக் கமிஷன், 'தீர்வுத் திட்டத்தை' சீர்குலைக்க முற்படுகிறதாம்–' துண்டுப் பிரசுரம் வெளியிட்டு இருந்தவை. எந்தத் தீர்வுத் திட்டத்தை?! "எங்கள் போராட்டம் உங்களுக்கு சார்பானது" என்டு அதிகாரத் தரப்பாருக்கு காண்பிக்கத்தான் போராட்டமாக்கும்! ஆலோசகர் பதவிக்கு கைமாறோ? கமிஷன் பரபரப்பை பாவித்து புதிய தீர்வு யோசனையும் வைக்கப்பட்டாச்சு. அதை ஆதரிச்சோ அல்லது எதிர்த்தோ போராட்டம் நடத்தியிருந்தால் காலத்தை ஒட்டிய போராட்டம் என்டு பாராட்டியிருக்கலாம். காலம் அறிந்து பயிர் செய்ய எப்போது பழகப்போகினம்?

இந்த வாரம் கவிஞர் மு.மேத்தாவின் கவிதை:

"கண்ணாமூச்சி ஆட்டம் நடக்குது
காணாமல் போச்சு நம் தேசம்
மேடை போட்டுத் தேடும் தலைவரைப்
பாருங்க எல்லாம் பொய் வேஷம்!" ■



படிப்பகம்

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான பத்திரிகைகளில் ஒன்று 'ஈழமுரசு'. இப் பத்திரிகையின் உரிமையாளர் மயில்வாகனம் அமிர்தலிங்கம்.

'ஈழமுரசு' பத்திரிகை ஆசிரியராக முதலில் இருந்தவர் திருச்செல்வம். மயில்வாகனம் அமிர்தலிங்கம் ஐ.தே.கட்சி அமைப்பாளராக இருந்தவர். கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராகவும் பதவி வகித்தவர். திருச்செல்வம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளராக இருந்தவர்.

நல்லூர் எம்.பி. அருளம்பலத்தின் வலது கையாகவும் இருந்தவர் திருச்செல்வம்.

'ஈழமுரசு' பத்திரிகைக்கு உரிமையாளர் ம. அமிர்தலிங்கத்துக்கும், திருச்செல்வத்துக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது.

திருச்செல்வத்தை 'ஈழமுரசு' பத்திரிகையை விட்டு வெறியேற்றினார் அமிர்தலிங்கம். அதன்பின்னர் கோபாலரத்னம் என்பவர் ஆசிரியராக இருந்தார். 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றியவர் கோபாலரத்னம்.

திருச்செல்வம் வெளியே வந்ததும் 'ஈழமுரசு' உரிமையாளரான அமிர்தலிங்கம் மேற்கொண்ட மோசடிகள் பற்றி அம்பலப்பத்த தொடங்கினார்.

"அகதிகளுக்கு உதவுவது என்ற பெயரில் வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுகிறார். இலங்கை அரசின் உளவு நிறுவனங்களுக்கு உதவுகிறார். தகவல்கள் கொடுக்கிறார்." என்றெல்லாம் திருச்செல்வம் புகார் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரிடம் சென்ற திருச்செல்வம் அமிர்தலிங்கத்தின் மோசடிகள் பற்றிக் கூறியதுடன், நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார்.

திருச்செல்வம் கூறிய புகார்கள் பல உண்மையாக இருந்தன. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடனும் அமிர்தலிங்கம் நெருக்கமாக இருந்தமையும் தெரியவந்தது.

திருச்செல்வம் கூறிய புகார்கள் ரமேஷ் மூலமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்தியக் கமிட்டிக்கு தெரிவிக்கப்பட்டது. அமிர்தலிங்கத்துக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் என்று ரமேஷ் அனுமதி கோரினார். யாழ் பிராந்திய கமிட்டி உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இது நடந்தது 1986 நடுப்பகுதியில்.

152

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரிடம் தெரிவித்த புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாததால், புலிகள் இயக்கத்தினரிடம் சென்றார் திருச்செல்வம். திலீபன், கிட்டு ஆகியோரிடம் அமிர்தலிங்கத்தின் மோசடிகள் பற்றிக் கூறப்பட்டது.

முக்கு காய்கறிகள் வெளியே இருந்துதான் செல்வது வழக்கம்.

அதனை அவதானித்த புலிகள் குறிப்பிட்ட முகாமுக்கு கொண்டுசெல்லப்படும் மரக்கறிகளில் பொட்டாஷியம் சயனைட் என்ற நஞ்சை செலுத்திவிட்டனர்.

முகாமில் சமையல் செய்வதற்காக மரக்கறிகளை வெட்டி, கழுவிச் சுத்தம் செய்ததால் நஞ்சின் செறிவு குறைந்து போனது.

சமையல் முடிந்தபின்னர் முகாமில் இருந்தவர்கள் உணவை உண்டனர். 42 பேர் உடனடியாக மயக்கம் அடைந்தனர். அவர்களில் 14 பேர் மிக ஆபத்தான நிலையில் இந்தியப் படை விமானம் மூலமாக

சுபத்திரன் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி மறுபடி ஒன்றாக இயங்கச் செய்ய முயன்றார்.

எனினும் அது கைகூடவில்லை. பின்னர் சுபத்திரனும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். மூத்த உறுப்பினரான சிறிதரன், மோகன் ஆகியோரும் யாழ் சென்றனர்.

அவர்கள் மூவருமே ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையால் சந்தேகக் கண்ணோடு நோக்கப்பட்டனர். ஈ.பி.டி.பியுடன் கதைத்து இரகசிய ஏற்பாடுடன்தான் வந்திருப்பார்களோ? என்று சந்தேகம்.

அதன் காரணமாக சுபத்திரன் சாவகச்சேரி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

வெளியேற முயன்றனர் புலிகள்.

இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல்கள் ஏற்பட்டன. மோதலின் முடிவில் புலிகள் முகாமைவிட்டு வெளியேறினார்கள்.

முகாமுக்குள் இருந்த புலிகள் அனைவரையும் சுற்றிவளைப்புக்குள் சிக்க வைப்பதே இந்திய படையினரின் நோக்கமாக இருந்தது.

'அலம்பில் முகாமில் பிரபாகரனும், மாத்தையாவும் தங்குவது உண்டு' என்ற இரகசியத் தகவலை அடுத்தே இந்தியப் படையினர் அந்த முகாமை சுற்றி வளைத்தனர்.

ஆனால் நோக்கம் நிறைவேறவில்லை. இந்தியப் படையினர் தரப்பில் 7 பேர் பலியாகினர். புலிகள் தரப்பில் ஆறுபேர் பலியானார்கள்.

1989 ஜனவரியில் மட்டும் 70 இந்தியப் படையினர் சண்டைகளில் பலியாகினர்.

அந்தச் சண்டைகளில் புலிகள் தரப்பில் 15 பேர் பலியாகினர்.

இப்போது தங்கள் புலி எதிர்ப்பை நியாயப்படுத்த அமெரிக்காவை நல் புத்தி சொல்லும் புனிதராகக் கூறவும் தயாராகி விட்டார்கள்.

எக் கொள்கையிலும் உறுதியற்ற தளம்பலும்,தாங்கள் முன்வைத்த கொள்கைகளையே சரியாக புரிந்து கொள்ளாமல் பெறும் வாய் வீச்சுக்களாக கூறித் திரிந்தமையுமே பல இயக்கங்களின் பாணியாக இருந்திருக்கிறது.

அமெரிக்கா புலிகளை ஆதரித்தால் ஏகாதிபத்திய சக்தி என்பர். அமெரிக்கா புலிகளை எதிர்த்தால், அமெரிக்கா சொல்வதை புலிகள் கேட்கவேண்டும் என்பர்.

சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரை இயக்கங்கள் தோன்றியதில் இருந்தே இருவிதமான போக்குகள் காணப்பட்டன.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் அமெரிக்க எதிர்ப்பு, உலக அரங்கில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை உரத்துக் கூறிவந்தன.

அமெரிக்காவுடனோ, அதன் கூட்டாளி நாடுகளுடனோ ஒட்டும் இல்லை உறவும் இல்லை. அவ்வாறு ஒட்டுதல் வைப்போர் ஏகாதிபத்திய கைக்கூலிகள் என்று கூறிவந்தனர்.

புலிகளும், ரெலோவும் 'தமிழீழம் உருவாக யார் உதவி செய்தாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்பது போலவே நடந்து கொண்டனர்.

அதனால் புலிகளும், ரெலோவும் குறுகிய நலன் கொண்ட இயக்கங்கள் என்றும், சர்வதேச ரீதியில் முற்போக்கான சக்திகளுடன் கைகோர்த்து செயற்படாதவர்கள் என்றும் ஏனைய மூன்று இயக்கங்களும் கூறிவந்தன.

இவற்றில் புளொட்டுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்கும் இடையே கடும் போட்டி. சர்வதேச ரீதியாக அமெரிக்க எதிர்ப்பில் தீவிரமாக இருப்பதும், சர்வதேச போராட்ட அமைப்புக்களுடன் உறவு வைத்திருப்பதும் யார் என்பதே போட்டி.

புலிகளுக்கு அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் சிலர் உதவியபோது, அவர்கள் அமெரிக்க சி.ஐ.ஏ. ஆட்கள். ஆகவே புலிகளுக்கு சி.ஐ.ஏ. தொடர்பு உண்டு. புலிகள் ஊடாக ஈழப் போராட்டத்தை சிதைப்பதுதான் அமெரிக்காவின் நோக்கம் என்றனர் ஏனைய இயக்கத்தினர்.

இதற்கிடையே புளொட் இயக்கத்தில் சேர்லி கந்தப்பா என்பவர் அவர்களது 'தமிழீழ வானொலி' ஒலிபரப்பை கவனிக்க இந்தியா வந்திருந்தார்.

உடனே, சேர்லி கந்தர்ப்பா ஒரு சி.ஐ.ஏ. உளவாளி என்று கூறியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

இவ்வாறு தம்மை முற்போக்குவாதிகளாகக் காட்ட இயக்கங்கள் முட்டி மோதிக் கொண்ட காலம் ஒன்று இருந்தது.

புலிகள் மட்டும் சற்று ஒதுங்கியே

# அமெரிக்கஎதிர்ப்பில் முண்டியடித்த இயக்கங்கள்!



சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாணவர் அமைப்பு (G.U.E.S) 1985 இல் நடத்திய ஆர்ப்பாட்டம்.

## அமெரிக்காவின் கைப்பாவைகள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் மேதின ஊர்வலங்களை கிழக்கில் நடத்தினார்கள். சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில், அந்த இயக்கத்தின் தலைவர் பத்மநாபாவின் படமும் இடம் பெற்றிருந்தது.

'உழைக்கும் கரங்களின் ஒளிவிளக்கு' என்ற பத்மநாபாவின் படத்தின் மேல் குறிப்பிடப்பட்டிருந்தது.

'அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தென்னாசியாவில் ஆதிக்கம்பெற அனுமதியோம்' என்றும் தங்கள் பாதாதைகளில் எழுதிவைத் திருந்தனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரதான ஷரத்துக்களில் ஒன்று, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இலங்கையில் பிறநாடுகள் தளம் அமைக்க அனுமதிக்கக் கூடாது என்பது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை தாம் ஏன் ஆதரிக்கிறோம் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் விளக்கப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர்.

"தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க விஸ்தரிப்புக்கு இந்த ஒப்பந்தம் முற்றுப் புள்ளியிடுகிறது.

உள்நாட்டில் மட்டுமல்லாமல், உலக அரங்கில் ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களிலும் நாம் இணைந்து நிற்கிறோம்.

இந்தியா எதிர்க்கும் புலிகள் தவிர்க்க முடியாமல் அமெரிக்காவின் கைக்குள் செல்வார்கள். அமெரிக்காவின் கைப்பாவைகளாகி தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள பிற்போக்கு இயக்கங்களில் ஒன்றாக மாறிநிற்பர்." என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். புலிகளை சாடியிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இந்தியாவின் கைக்கூலி என்று புலிகள் சொன்னதால், அதற்கு பதிலடியாக புலிகளை அமெரிக்காவின் கைப்பாவைகள் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். குற்றம் சாட்டியிருந்தது.

அதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன்று தலைகீழாக மாறி நிற்கிறது. புலிகள் இயக்கத்தினரை தடை செய்துள்ளது மூலம் புலிகள் தங்கள் கைப்பாவைகள் அல்ல என்று அமெரிக்கா வெளிப்படுத்திவிட்டது.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் பிரேமச்சந்திரன் 12.10.97 அன்று ஒரு கருத்துக் கூறியுள்ளார்.

"அமெரிக்கா புலிகளை தடைசெய்து விட்டதால், புலிகள் தங்கள் கொள்கைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும். சமாதானப் பாதைக்கு திருப்ப வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

அதன் அர்த்தம், அமெரிக்கா ஒரு உலக பொலிஸ்காரன். தென்னாசியப் பிராந்தியத்தில் தலையிடவும், அங்குள்ள விவகாரங்களில் மூக்கை நுழைத்து நல்வழிப்படுத்தவும் தகுதி உள்ள போதகர் என்பதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இப்போது அங்கீகரித்து விட்டது.

இத் தொடரில் இயக்கங்களின் நிலை தடுமாறும் போக்கை அவ்வப்போது சுட்டிக் காட்டி வந்திருக்கிறேன்.

தங்களை உலகப் புரட்சியாளர்கள் என்று காண்பிப்பதற்காகவும், இந்தியாவுக்கு நண்பர்களாகக்காட்டி ஏனைய இயக்கங்களைவிட அதிக உதவிகளைப் பெறவும் தான் அன்று அமெரிக்க பூச்சாண்டி காட்டியிருக்கிறார்கள்.

நின்றனர். "சர்வதேச அரங்கில் யாருடன் வேண்டுமானால் நட்பாக இருக்கலாம். ஆனால் எங்கள் மக்களின் தலைவிதியை நாங்கள்தான் தீர்மானிக்க முடியும். உதவிகள் செய்வதற்காக எங்கள்மீது தங்கள் முடிவுகளை அவர்கள் திணிக்க முடியாது." என்பதோடு புலிகள் நிறுத்திக் கொண்டனர்.

"தமிழீழம் கிடைக்கும் என்றால் எந்தப் பேயுடனும் சேரலாம் என்பது போல் அல்லவா இருக்கிறது. இது படு பிற்போக்குத்தனம். தென்னாசிய மக்களின் நலனைப் பற்றி சிந்திக்க வேண்டமா? தமிழீழத்தோடு மட்டும் பார்வையை குறுக்கிக் கொல்வதா? அமெரிக்கா நிக்கரக்குவாவுக்குள் புகுந்தால் நாம் மௌனமாக இருப்பதா? கியூபாவை மிரட்டினால் பார்த்து கொண்டிருப்பதா? சர்வதேச சமூகத்தோடு கைகோர்க்க வேண்டாமா? முற்போக்கு சக்திகளுடன் மட்டுமே நட்பாக இருக்க வேண்டும்" என்று கூறியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க வெளியீடான 'ஈழமுழக்கம்' அப்படிச் சாடியிருந்த

## இன்று மாற்றம்

இன்று காலம் மாறிவிட்டது. ஆன அமெரிக்கா மாறவில்லை. உல பொலிஸ்காரனாக சண்டித்தனம் செய் அதன் நோக்கம் மாறவில்லை. ஆன அமெரிக்காவை எதிர்த்த இயக்கங் மாறிவிட்டன. அமெரிக்கா சொன்ன அதுதான் வேதவாக்கு என்று கூற கூறுகின்றன.

எந்தப் பேய் புலிகளை எதிர்த்தா அந்தப் பேயை வரவேற்போம் என் இன்றைய நிலைப்பாடாகிவிட்டது.

அமெரிக்கா சொல்வதை பு கேட்காவிட்டால் பெரும்பாதகங்கள் வாகும் என்பது போல கருத்து வெளியிடுகிறார்கள்.

இது நல்ல மாற்றமா? தீய மாற் நீங்களே முடிவு செய்து கொள்ளு

நாம் இந்தியப் படை கால நிகழ்வுகளுக்கு செல்வோம்.

(தொடர்ந்து

வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஏனையோர் முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தியப் படையினர் விரைவாக உதவியதால் பாரிய உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

முல்லைத்தீவில் புலிகள் இயக்கத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினர் இந்தியப் படையினருக்கு உதவினர்.

ஈ.என்.டி.எல்.எஃப். தலைவர் பரந்தன் ராஜன் முன்னர் கூட்டணியின் கிளிநொச்சி முன்னாள் எம்.பி. ஆனந்த சங்கரிக்கு வலதுகரமாக இருந்தவர்களில் ஒருவர். வன்னிப் பிராந்தியம் பரந்தன் ராஜனுக்கு பரிச்சயமாக இருந்தது.

அதனால் வன்னிப் பிராந்தியத்தில் புலிகளுக்கு எதிரான இந்தியப்படை நடவடிக்கைகளுக்கு ஈ.என்.டி.எல்.எஃப். உதவி வந்தது.

இந்தியப் படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்கு நல்ல பெயர் இருந்த ஒரே இடம் சாவகச்சேரிதான். புலிகளுக்கு எதிரான பல தாக்குதல்களும் சுபத்திரன் தலைமையில் சாவகச்சேரியில் நடத்தப்பட்டன.

அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்தவர் ராபிக். சொந்தப் பெயர் ரவீந்திரன். அவரை இயக்கத்தில் சேர்த்தவர்கள் சுபத்திரனும், ரமேசும்தான்.

ராபிக்கின் கீழ் சுபத்திரனை செயற்பட வைத்தனர்.

தற்போது ராபிக் இயக்கத்தை விட்டு வெளியேறிவிட்டார். சுபத்திரன், சிறிதரன், மோகன் ஆகியோர் இப்போதும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில்தான் இருக்கின்றனர்.

சரியான நபர்களை இனம் காணுதல், திறமையானவர்களிடம் உரிய பொறுப்புக்களை ஒப்படைத்தல் என்பன தலைமைக்குரிய

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பழிக்குப் பழி வேட்டைகள்

## முரசொலி

இக் காலகட்டத்தில் 'முரசொலி' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அப் பத்திரிகையின் ஆசிரியராக திருச்செல்வம் பொறுப்பேற்றார். ஈழமுரசுக்கு போட்டியாகவே 'முரசொலி' வெளிவந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் புலிகளால் தடை செய்யப்பட்டபோது "இந்திய கைக்கூலிகளுக்குத் தடை" என்று தலைப்புச் செய்தி வெளியிட்டார் திருச்செல்வம்.

இதனை மனதில் வைத்துத்தான் இந்திய அமைதிப்படைக் காலத்தில் திருச்செல்வத்தை தீர்த்துக்கட்ட தேடித் திரிந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். ஆனால் திருச்செல்வத்துக்கு பதிலாக அவரது மகனைச் சுட்டுக்கொன்றதுதான் பெரிய கொடுமை. திருச்செல்வம் தப்பிவிட்டார்.

'ஈழமுரசு' அமிர்தலிங்கம் ஒருநாள் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார்.

அவரைக் கடத்திச் சென்றவர்கள் புலிகள். அவர்மீதான புகார்கள் தொடர்பாக விசாரித்துவிட்டு பின்னர் மரண தண்டனை விதித்தனர்.

சீட்டுக் கம்பனி ஒன்றும் நடத்தினார் அமிர்தலிங்கம். பல இலட்ச ரூபாய்கள் சீட்டுக் கம்பனி ஊடாக மோசடி செய்திருந்தார். யாழ் நகரில் உள்ள பிரபல வர்த்தகர் முருகேசு உட்பட பலருக்கு பல இலட்ச ரூபாய்கள் அமிர்தலிங்கம் கொடுக்க வேண்டியிருந்தது.

அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப் பலத்த கண்டனம் தெரிவித்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான யோகசங்கரியின் மைத்துனரான காசிநாதன் என்பவரையும் யாழ்ப்பாணத்தில் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

## உணவில் நஞ்சு

முல்லைத் தீவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க முகாம் இருந்தது. அந்த முகா

முல்லைத்தீவில் இந்தியப்படை நடவடிக்கைக்கு உதவுவதற்காக ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்கள் ஒரு வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

அந்த வழியாக வழக்கமாக அவர்கள் சென்றுவருவதை அவதானித்திருந்த புலிகள் இயக்கத்தினர் நிலக்கண்ணி வெடியை புதைத்து வைத்திருந்தனர். அவ் வழியாக சென்ற ஈ.என்.டி.எல்.எஃப். வாகனம் நிலக்கண்ணி வெடியில் சிக்கியது. ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்கள் மூவர் பலியாகினர்.

## பழிக்கு பழி

புலிகள் இயக்க உறுப்பினர்கள், மற்றும் ஆதரவாளர்கள் சிலரது குடும்பத்தினர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் கொல்லப்பட்டனர்.

அதற்கு பழிவாங்கும் விதமாக புலிகளும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப்பினர்களின் குடும்பங்கள்மீது கைவைக்கத் தொடங்கினர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மேற்கொண்ட நடவடிக்கையும், புலிகள் மேற்கொண்ட நடவடிக்கையும் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

சாவகச்சேரியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொறுப்பாளராக இருந்தவர் சுபத்திரன். இவர்தான் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்தவர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க ஆரம்பகால இராணுவ நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தவர்.

ஆனாலும் இந்திய அமைதிப்படை காலத்தில் சுபத்திரனை சாவகச்சேரி பொறுப்பாளராகவே நியமித்தனர். அப்போது ஈ.பி.டி.பி.யில் இருந்த ரமேசுக்கும், சுபத்திரனுக்கும் இடையில் நிலவிய நல்லுறவு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க தலைமைக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி இருந்தது.

நீண்ட காலமாக சிறையில் இருந்த சுபத்திரன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காரணமாக விடுதலையானார். கிண்ணியா வங்கிக் கொள்ளை உட்பட பல்வேறு வழக்குகள் அவர்மேல் இருந்தன.

சிறையில் இருந்து வெளியே வந்த

ஒரு கலையாகும். அக் கலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட பல இயக்கத் தலைமைகள் விட்ட தவறுகளும் அந்த இயக்கங்களின் வீழ்ச்சிகளுக்கு முக்கிய காரணமாகும்.

## விடுதலை

சாவகச்சேரியிலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களால் புலிகள் இயக்க உறுப்பினர்களின் தந்தைமார்பலர் பிடிக்கப்பட்டனர்.

'அனைவரையும் போடவேண்டும்' என்று சொன்னார்கள் சில உறுப்பினர்கள்.

"யார்மீதும் கைவைக்கக்கூடாது" என்று கூறிவிட்டார் சுபத்திரன். அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்தியப்படை வெளியேறிய பின்னர் சுபத்திரனின் தந்தையாரை புலிகள் வெட்டிக் கொன்றுவிட்டனர்.

ஏனைய பகுதிகளில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் கட்டாய ஆட்சேர்ப்புக்களால் மக்களிடம் வெறுப்பைச் சம்பாதித்த போது, சாவகச்சேரியில் கட்டாய ஆட்சேர்ப்புக்களும் பெருமளவில் இடம்பெறவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப். காலத்தில் கொள்ளைகள் நடத்தப்படாத இடமும் சாவகச்சேரிதான்.

'முறிந்தபனை' ஆவனத்திலும் சாவகச்சேரியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடவடிக்கைகள் பற்றி புகார்கள் பெரிதாக வரவில்லை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ போன்ற இயக்கங்களில் திறமையான, கட்டுப்பாடான எத்தனையோ உறுப்பினர்கள் இருந்தனர். இந்தியப் படை காலத்திலும் அவர்களில் பலர் மக்களுடன் நல்ல முறையிலேயே நடந்து கொண்டனர்.

ஆனால், வழிநடத்தும் பொறுப்புக்களில் இருந்தவர்களது பலவீனங்களும், தவறான ஆட்களை முக்கிய பொறுப்புக்களில் நியமித்து வைத்திருந்தமையுமே மிக மோசமான பின் விளைவுகளுக்கு காரணமாக அமைந்தன.

## அலம்பில் மோதல்

முல்லைத்தீவு அலம்பில் என்ற இடத்தில் இருந்த புலிகள் இயக்க முகாமை இந்தியப் படையினர் சுற்றி வளைத்தனர்.

சுற்றிவளைப்பை உடைத்துக் கொண்டு



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# மாறுபடும் அமெரிக்க நிலைப்பாடுகள்

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை அமெரிக்க அரசு பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தியுள்ளது.

**இலங்கை அரசின் நீண்டநாள் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றியுள்ளது மூலம், இலங்கை அரசுடனான தனது உறவை மேலும் இறுக்கமாக்கிக் கொள்வதே அமெரிக்க வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்களின் நோக்கமாக அமைந்துள்ளது.**

இந்திய அரசு ராஜீவ் கொலையை காரணம் காட்டியே புலிகள் இயக்கத்தின்மீது தடை விதித்திருந்தது. ஆனால், அமெரிக்க அரசுக்கு புலிகளை தடுக்க அதன் உள்நாட்டு நிலவரங்கள் சார்ந்த எந்தவொரு காரணமும் இருக்கவில்லை.

அமெரிக்காவுக்குள் புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் எதுவும் அந்த நாட்டின் சட்டம், ஒழுங்கு விதிகளுக்கு புறம்பாக அமைந்திருக்கவும் இல்லை.

உலகத்தில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுதல் என்ற ரீதியில்தான் பல்வேறு இயக்கங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

**அமெரிக்காவுக்கு உலக பயங்கரவாதம் பற்றிப் பேசுவதற்கு யோக்கியதை உண்டா என்பதே முக்கியமான கேள்வியாகும்.**

அமெரிக்காவால் தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள இயக்கங்களில் கம்போடியாவில் இயங்கும் 'கெமர்ச்' இயக்கமும் ஒன்றாகும்.

கம்போடியாவில் பல்லாயிரம் மக்களை ஈவிரக்கமற்று படுகொலை செய்தவன் பொல்பொட். கம்போடியாவில் பொல்பொட் ஆட்சியில் இருந்தபோது மனித வேட்டைகள் தலைவிரித்தாடின.

அப்போது பொல்பொட் ஆட்சிக்கு பக்கபலமாக இருந்தது அமெரிக்கா. வியட்நாம் போரில் படுதோல்வி கண்டிருந்த அமெரிக்கா, கம்போடியா மூலமாக வியட்நாமை அச்சுறுத்த முயன்றது. அதனால் தனது பொம்மை அரசாக பொல்பொட் ஆட்சியை சீராட்டி வளர்ந்திருந்தது.

பின்னர் வியட்நாம் படையினர் கம்போடியாவுக்குள் புகுந்து பொல்பொட் ஆட்சிக்கு முடிவு கட்டியிருந்தனர்.

தற்போது பொல்பொட் தலைமறைவாக இருந்து வருகிறான். கெமர்ரூச் இயக்கம் பல துண்டுகளாக உடைந்து போய் இருக்கிறது.

பொல்பொட் கால படுகொலைகள் இப்போது வெட்ட வெளிச்சமாகி வருகின்றன. அதனால் பொல்பொட் ஆட்சியாளருடன் தமக்கிருந்த உறவை உலகின் கண்களில் இருந்து மறைக்க அமெரிக்கா முயன்று வருகிறது.

அதன் காரணமாகவே கெமர்ரூச் இயக்கத்தை தடை செய்தது மூலம், தமது இரத்தக் கறை படிந்த கரங்களை உலகின் கண்களில் இருந்து மறைக்கத் துணிந்துள்ளனர் அமெரிக்க ஆட்சியாளர்கள்.

வியட்நாம் விடுதலைப் போராட்டம், பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் உட்பட உலகின் பல பாகங்களில் இடம்பெற்ற போராட்டங்களை பயங்கரவாதப் போராட்டங்கள் என்றே அமெரிக்கா விபரித்து வந்திருக்கிறது என்பது வரலாறு.

தனது வெளிநாட்டு நலன்கள் சார்ந்த வகையில் ஏனைய நாடுகளில் நடைபெறும் உள்நாட்டு யுத்தங்கள், உள்நாட்டு குழப்பங்கள், ஆட்சிக் கவிழ்ப்புக்கள் போன்றவற்றை மட்டுமே அமெரிக்கா நீதியான போராட்டங்களாக அங்கீகரித்து வந்திருக்கிறது.

பாலஸ்தீனப் போராட்டத்தை நசுக்க இஸ்ரேல் அரசு மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கைகளுடன் அமெரிக்கா உடன்பாடு கொண்டிருந்தது.

**பாலஸ்தீன அகதி முகாம்கள் இஸ்ரேலிய விமானங்களால் குண்டுவீசித் தாக்கப்பட்டபோது அதனை பயங்கரவாதம் என்று கண்டிக்க அமெரிக்கா முன்வரவில்லை. அதற்கு மாறாக பாலஸ்தீன விடுதலை இயக்கங்களை 'சர்வதேசப் பயங்கரவாதிகள்' என்று அமெரிக்கா பகிரங்கமாகச் சாடி வந்தது.**

தென்னாபிரிக்காவில் வெள்ளையின நிறவெறி அரசுக்கு உலகெங்கும் இருந்து எதிர்ப்புக்கள் கிளர்ந்து எழுந்தபோது, அமெரிக்கா மட்டுமே நிறவெறி அரசுக்கு துணை நின்றது.

நெல்சன் மண்டேலா போன்றவர்களை சிறையில் போடவும், ஆயிரக்கணக்கான கறுப்பின போராளிகள் வேட்டையாடப்படவும் அமெரிக்காதான் ஆசிர்வாதம் வழங்கிக் கொண்டிருந்தது.

**தென்னாபிரிக்காவில் மனித உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டபோது உலகெங்கும் கண்டனங்கள் எழுந்தன. அமெரிக்கா மட்டுமே மௌனம் சாதித்தது.**

கறுப்பின மக்களின் போராட்டமும் அமெரிக்காவின் கண்களுக்கு பயங்கரவாதமாகவே அன்று தெரிந்தது.

**பாலஸ்தீனப் போராட்டம், தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் போராட்டம், வியட்நாம் போராட்டம் என்று உலகின் மிக முக்கியமான போராட்டங்கள் அனைத்துமே அமெரிக்காவின் குறுக்கீடுகள், தலையீடுகள், நேரடித் தலையீடுகள், அடக்குமுறை அரசுகளுக்கான அமெரிக்க உதவிகள் என்பவற்றை முகம் கொடுத்தே வெற்றிப்பாதையில் சென்றன.**

அதன் காரணமாகவே, பின்னர் அமெரிக்காகூட விழுந்தும் 'மீசையில் மண்படவில்லை' என்பதுபோல பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைத் அங்கீகரிக்க வேண்டியதாகிவிட்டது. நெல்சன் மண்டேலாவுடன் கை குலுக்க வேண்டியும் நேர்ந்துள்ளது.

தற்போதுகூட தன்காலடியில் உள்ள கியூபாவை பணியவைக்க, பொருளாதாரத்தடை உட்பட பல்வேறு நெருக்கடிகளை அமெரிக்க ஆட்சியாளர்கள் ஏற்படுத்தி வருவதையே காணக்கூடியதாகவுள்ளது.

கியூபா அதிபர் பிடல் காஸ்ரோவும், கியூபா மக்களும் மனம் தளராமல் இருப்பதன் காரணமாக, சின்னஞ் சிறு கியூபாவை தமது இரும்புக் கரங்களால் திருகும் வேலையை அமெரிக்க ஆட்சியாளர்களால் செய்ய இயலவில்லை.

தற்போது கியூபாவின் புரட்சியாளரான சேகுவேராவின் 30வது நினைவு தினம் இலங்கை உட்பட பல நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கொழும்பிலும் இலங்கை-கியூபா, நட்புறவுச் சங்கத்தினரால் சேகுவேரா தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

**அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.தான் சேகுவேராவை கொலை செய்தது. சிலி நாட்டில் அப்போதிருந்த கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக கெரில்லாப் போர் நடத்தச் சென்ற சேகுவேராவை கைது செய்து ஒரு பாடசாலையில் வைத்து இரகசியமாகச் சுட்டுக் கொன்றனர்.**

'உலக விடுதலைப் போராட்டங்களின் கொலைகாரன்' என்றே தேசிய விடுதலை இயக்கங்களால் அமெரிக்கா அழைக்கப்பட்டு வந்தது.



## சாத்தான் ஓதிய வேதம்

இலங்கையில் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கிய இயக்கங்கள் அமெரிக்க எதிர்ப்பையும் பிரதானமாகக் கொண்டிருந்தன.

இவற்றில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரே அன்று முன்னணியில் நின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வைத்து அமெரிக்கர்களான அலன் தம்பதிகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் சி.ஐ.ஏ. உளவாளிகள் என்று சந்தேகிக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டனர்.

தற்போது உலக அரங்கில் சோவியத் யூனியன் தகர்ந்து போய்விட்டது. அதனால் அமெரிக்கா தட்டிக் கேட்க ஆளில்லாத சண்டப் பிரசண்டன் ஆகிவிட்டது.

இன்று உலக அளவில் அமெரிக்காவுக்கு சமமான இன்னொரு சக்தி இல்லாமல் போயிருக்கலாம். அதன்காரணமாக அமெரிக்காவின் சுயரூபம் மாறிவிட்டது என்றோ, அதன் சொந்த நலன்களுக்காக வகுக்கப்படும் வெளிநாட்டுக் கொள்கைகள் கைவிடப்பட்டுவிட்டது என்றோ அர்த்தமல்ல.

**இங்குள்ள தமிழ்ப் போராளி இயக்கங்கள் உட்பட சர்வதேச அமைப்புக்கள் அமெரிக்காவை அன்று எதிர்ப்பதற்கு எவையெல்லாம் காரணமாக இருந்தனவோ, அதே காரணங்கள் இன்றும் அப்படியே உள்ளன.**

உலகில் பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்த நாடாகவே அமெரிக்க வல்லரசு விளங்கி வருகிறது. அதன் பயனை இப்போது அந்த நாடே அனுபவித்து வருகிறது. நியூயோர்க்கில்கூட குண்டுகள் வெடித்தன.

**எனவே- உலக பயங்கரவாதத்தைப் பற்றி பேசுகின்ற தகுதியோ, உரிமையோ அமெரிக்க வல்லரசுக்கு இருக்க முடியாது.**

இந்தியாவில் காஷ்மீர் தீவிரவாதிகளை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது. இந்திய அரசு பயங்கரவாதிகள் என்று கூறுகின்ற காஷ்மீர் தீவிரவாதிகளை அமெரிக்கா தட்டிக் கொடுக்கிறது.

காஷ்மீர் பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்றும் அமெரிக்கா அறிவித்திருந்தது. காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்து இருக்க வேண்டுமா? தனியாக பிரிந்து செல்ல வேண்டுமா? என்று காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று அமெரிக்கா கூறிவருகிறது.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு காஷ்மீர் மக்கள்மீது கொண்ட பாசத்தினால் ஏற்பட்ட ஒன்றல்ல.

**அமெரிக்காவால் பயங்கரவாதம் என்று வர்ணிக்கப்படும் நடவடிக்கைகளில் காஷ்மீர் தீவிரவாதிகளும் ஈடுபட்டுள்ளனர். வெளிநாட்டுப் பயணிகள் உட்பட பலரை பணயக் கைதிகளாகக் கடத்தியுள்ளனர். பலரது தலைகளைச் சீவியுமுள்ளனர்.**

தென்ஆசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்கப் போட்டியாக உள்ள இந்தியாவை பல துண்டுகளாகப் பிரிப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக இருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை படுகொலை செய்த சீக்கிய தீவிரவாத இயக்கங்களுக்கும் அமெரிக்கா புகலிடம் கொடுத்து வைத்திருந்தது.

"இந்திரா கொலையில் வெளிநாட்டு சக்தி ஒன்று பின்னணியில் உள்ளது." என்று ராஜீவ் காந்தியும் அமெரிக்காவை மறைமுகமாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

**எனவே கேடுகெட்ட பயங்கரவாதமானாலும் அது தனது நலனுக்கு சாதகமாக அமையுமானால் அதனை அமெரிக்கா ஊக்குவித்தே வந்திருக்கிறது. இப்போதும் அதனையே செய்து வருகிறது.**

தென் ஆசியாவில் இந்தியாவைச் சூழ உள்ள நாடுகளை தன் கைக்குள்போட்டு வைத்துக்கொள்ளும் அமெரிக்காவின் திட்டத்தின் ஒருகட்டமாகவே, இலங்கை அரசுடன் நட்பை உறுதிப்படுத்தும் விதமான காய் நகர்த்தல்களில் இறங்கியுள்ளது அமெரிக்கா.

இலங்கை அரசைப் பொறுத்தவரை அதன் வெளிநாட்டு கொள்கைக்கு கிடைத்துள்ள வெற்றியாக இதனைக் கொண்டாடலாம். ஆனால் இதற்காக அமெரிக்காவுக்கு எதிர்காலத்தில் இலங்கை கொடுக்கப்போகும் விலை என்ன என்பதுதான் இந்த கொண்டாட்ட அமளியில் கவனிக்கப்படாமல் போயுள்ளது.

புலிகளுக்கு இதனால் பெரிய பாதிப்புக்கள் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. இந்திய உறவு முறிந்ததால் ஏற்பட்ட பாதிப்புக்களைவிட, அமெரிக்காவின் பிரகடனம் பெரும் தாக்கமுடையதல்ல.

அமெரிக்காவின் நேச நாடுகளும் புலிகளை தடைசெய்ய முற்படலாம் என்பதும் நடக்கக்கூடியதல்ல. ஏனெனில் நேச நாடுகளுக்குள்ளேயே பிரச்சனைகள் உள்ளன.

ஃபிரான்ஸ் அணுகுண்டு செய்வதை அமெரிக்கா நிறுத்தச் சொல்லி உத்தரவிட்டது. "முதலில் நீ நிறுத்து, பின்னர் நான் நிறுத்துகிறேன்" என்று சொல்லி இருக்கிறது ஃபிரான்ஸ்.

பிரிட்டனின் இன்றைய ஆட்சியாளர்கள் சுயநிர்யண உரிமைகள் விடயத்தில் சாதகமான மனப்போக்கு கொண்டவர்களாகவே உள்ளனர்.

இதேவேளை அமெரிக்காவின் பிரகடனம் புலிகள் என்ற பெயரில் நேரடியாக அங்கு இயங்குவதைத்தான் தடைசெய்ய இயலும் என்பதையும் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

**அமெரிக்கத் தடையை சில தமிழ்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. அமெரிக்காவும், உலக வல்லரசுகளும் அங்கீகாரம் செய்த பின்னரே தாங்கள் போராட ஆரம்பித்தது போன்று, அக் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடுகள் வேடிக்கையாகவுள்ளன.**

குறிப்பிட்ட தமிழ்க் கட்சிகள் ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டிருந்தபோதும் பயங்கரவாத இயக்கங்கள் என்றே அமெரிக்காவால் அவை கணிக்கப்பட்டன. இலங்கை அரசுக்கு அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களை எதிர்த்தே அவை போரிட்டன.

புலிகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கு பல அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஏனைய தமிழ்க் கட்சிகள் விடயத்தில் புலிகளின் அணுகுமுறைகள் விரோதத் தன்மையுடன் அமைவதால்; அதற்கு பதிலான பிரதிபலிப்புகள் அக் கட்சிகளுக்கிடையே நிலவுவதும் தவிர்க்க முடியாததே.

**ஆனால், புலி எதிர்ப்பு என்ற ரீதியில் தங்கள் அடிப்படைக் கோட்பாடுகளை கைவிடுவதும், சர்வதேச அரங்கில் ஒட்டு மொத்தமாக தமிழர் தரப்பினர்மீதான அனுதாபத்தை இல்லாதொழிக்க வழிவகுக்கும் நடவடிக்கைகளை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பதும் சரியான கண்ணோட்டமாகாது.**

உலக ஆதரவு தன் பக்கம் என்று தமிழ்க் கட்சிகளுக்கே அரசாங்கம் பூச்சாண்டி காட்டி மிரட்டலாம். உலகம் என் பக்கம் இருக்கிறது, நான் தருவதை வாங்குங்கள் என்று நிர்ப்பந்திக்கலாம் என்பதையும் கவனித்தாக வேண்டும்.

**"புலிகளை தடை செய்துள்ளீர்கள் சரிதான். இங்கு தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று ஒரு தமிழ்க் கட்சிக்குக்கூட அமெரிக்காவிடம் கேட்கத் தோன்றவில்லை.**

தமிழ்பேசும் தரப்பின் அரசியல் கட்சிகள் உள்நாட்டில் மட்டுமல்ல, உலக அரங்கிலும் கைகட்டி, வாய்பொத்தி நின்று, பிறர் சொல்வதற்கு தலையாட்டும் அளவுக்கு தாழ்ந்து போய்விட்டன என்றே நினைக்கத் தோன்றுகிறது. ■

# திரை மறைவில் சுழியோட்டங்கள்

பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக
புதிய யோசனையை சமர்ப்பிக்கப்
தாக அரசாங்கம் கூறியிருந்தது.
.10.97 அன்று பாராளுமன்ற தெரி
கூடியபோது வெறுங்கையுடன்தான்
ார் நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.
திய யோசனைகள் பற்றி அரசாங்க
குள்கூட ஜனாதிபதியையும், நீதியமைச்
ம் தவிர வேறு யாருக்கும் போதிய
ம் இல்லையாம்.
ாதிபதியையும், நீதியமைச்சரையும்
தியயோசனைகள் பற்றி அக்குவேறு
றாக அறிந்து வைத்திருந்தவர் ஒருவர்
ார். அவர் கலாநிதி நீலன் திருச்செல்வம்.
ாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்
ை தமிழ்க் கட்சிகள் பக்கம் தட்டி
ார்த்தது எதிர்க்கட்சி.
கள் புதிய யோசனைகளை தமிழ்க்
ா ஏற்கவில்லையே. இதில் நாங்கள்
சொல்ல இருக்கிறது?' என்று
சி தரப்பிலிருந்து கூறப்பட்டதாம்.
போது கூட்டணி எம்.பி.சம்பந்தர்
பார்ட்டீஸ் (சில தமிழ்க் கட்சிகள்)
டுள்ளார்கள்" என்று கூறினாராம்.
போது குறுக்கிட்ட ஈ.பி.டி.பி தலை
ாஸ் தேவானந்தா எம்.பி. "சம்
என்றால் யாரைச் சொல்லு
வடக்கு-கிழக்கு பிரிப்பை அடிப்
கொண்ட யோசனையை ஈ.பி.டி.பி.
ல" என்றாராம்.
தருக்கு முகம் கறுத்துவிட்டது.
முஸ்லிம் காங்கிரசும் உடன்
ாம் அதைத்தான் சொன்னேன்."
ளித்தாராம்.
ம் காங்கிரஸ் சார்பில் கலந்து
லுப் ரஹீம் எம்.பி., "கிழக்கில் தனி
லகை ஏற்க மறுப்பதன் மூலமும்,
தொகுதியை விட்டுக் கொடுக்க
மூலமும் தமிழ்க்கட்சிகள் கடும்
ச் சந்திக்க வேண்டி வரும்"
ரித்தாராம்.
முஸ்லிம் கட்சிகளின் இந்த முரண்
ந.கட்சிக்கு ருசிகரக் காட்சிகளாகி
ன்று நினைத்த நீதியமைச்சர்
ம். "தமிழ்க்கட்சிகளுடன் தொடர்ந்து

பேசிக்கொண்டிருக்கிறோம். உடன்பாட்டுக்கு முயல்கிறோம்." என்றிருக்கிறார்.

நீதியமைச்சரின் முகத்தை முறிப்பானேன் என்று ஈ.பி.டி.பி, புளொட் பிரதிநிதிகள் அமைதியாக இருந்துவிட்டனர். "இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்புக்கு நாங்கள் ஒத்துக் கொண்டோம். இப்போது அதில் ஏன் மாற்றம் செய்துள்ளீர்கள்? வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதற்கான கருத்துக் கணிப்பை அம்பாறையைத் தவிர்த்துவிட்டு நடத்துவதை ஏற்கமாட்டோம். எதற்கும் உங்கள் புதிய யோசனையை எழுத்தில் தாருங்கள். எமது கட்சிக்குள் ஆராய்ந்துவிட்டுச் சொல்கிறோம்." என்றுவிட்டார் ஐ.தே.கட்சி சார்பில் கலந்து கொண்ட ஹமீட் எம்.பி.

அடுத்த தெரிவுக்குழுக் கூட்டத்தில் புதிய யோசனையை எழுத்து மூலம் தருவதாக உறுதியளித்தார் நீதியமைச்சர்.

இதில் வேடிக்கை என்ன தெரியுமா? தமிழ்பேசும் கட்சிகள் எதுவுமே அரசின் புதிய யோசனையை எழுத்தில் தருமாறு கேட்கவேயில்லை.

தமிழ்பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய விடயங்களில் எத்தனை பொறுப்பாக செயற்படுகின்றன தமிழ்க் கட்சிகள் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

எழுத்து மூலமாக தெளிவாக தம் முன்னால் வைக்கப்படாத ஒரு ஆவணம் பற்றி தமிழ் பேசும் கட்சிகள் எப்படி ஆராய்கிறார்கள்?

தனது யோசனையை தமிழ் பேசும் கட்சிகளிடம் ஆவணமாக முன்வைக்க வேண்டும் என்றுகூட அரசாங்கமும் நினைக்கவில்லை. அந்தளவுக்கு தமிழ்பேசும் கட்சிகள் பற்றி எடைபோட்டு வைத்திருக்கிறார்கள்.

ஆயுதங்களைக் கைவிட்டு வந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈரோஸ் போன்ற முன்னாள் போராளிக் குழுக்களுக்கு பட்டை நாமம் சாத்தப்பட்டிருக்கிறது. ஒரு மரியாதைக்குக்கூட அரசாங்கம் கூப்பிட்டுப் பேசவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். முன்னைய அரசாங்க காலத்திலேயே பொதுஜன முன்னணியை ஆதரித்த கட்சி. அதற்கு நன்றிக் கடனாக அக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவியைக் கொடுத்ததோடு சரி. அதுகூட முன்னாள் மீன்பிடி அமைச்சர் இந்திக குணவர்த்தனாவாகப் பார்த்துக் கொடுத்ததுதான்.

ஆனால் புலிகள் சமாதானப் பாதைக்கு வந்து அரசுடன் பேச்சு நடத்துமாறு சுரேஸ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். அழைப்பது இருக்கட்டும்; ஏற்கனவே சமாதானப்பாதைக்கு வந்துவிட்ட தங்களுக்குள்ள இடம் மறுக்கப்படுவதை எதிர்த்து முதலில் குரல் கொடுக்க வேண்டாமா?

இதற்கிடையே பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டத்தில் தமிழ்க்கட்சிகள் ஒரே கருத்தை வெளியிட வேண்டும் என்று ஓடுபட்டுத் திரிகிறார் நீலன் திருச்செல்வம்.

நீலன் திருச்செல்வத்துக்கு பக்கபலமாக பிரதான பாத்திரம் ஏற்றுள்ளார் இரா. சம்பந்தன்.

"அம்பாறைத் தொகுதியை விட்டுக் கொடுக்காவிட்டால் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் சிறுபான்மையாகிவிடுவார்கள். சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையாகிவிடுவர்" என்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பில் முன்னின்று விளக்கம் கொடுத்தவரே சம்பந்தர்தான்.

ஈ.பி.டி.பி, புளொட், இ.தொ.கா. ஆகிய கட்சிகளை கூட்டத்துக்காக அழைக்க நீலனின் அலுவலகத்தில் இருந்துதான் 'பக்ஸ்' மூலம் கடிதங்கள் பறந்து திரிகின்றன. (ஆதாரம் உண்டு)

எப்படியாவது தமிழ்க்கட்சிகளை புதிய யோசனைகளுக்கு இணங்கவைக்கிறேன் என்று டாக்டர் நீலன் அரச தரப்புக்கு உறுதி கூறிவிட்டார் போலிருக்கிறது. அது தான் காலில் சக்கரம் கட்டிக் கொண்ட மாதிரி ஓடித்திரிகிறார் என்றார் ஒரு தமிழ்க் கட்சி பிரமுகர்.



07.10.97 அன்று பாராளுமன்றக் கட்டடத்தில் நீலன் திருச்செல்வத்தின் அழைப்பின் பேரில் கூட்டணி இ.தொ.கா, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் புதிய யோசனை பற்றி கலந்தாலோசனை நடத்தின.

இச்செய்தி 'முரசு' தவிர ஏனைய பத்திரிகைகளில் வெளிவரவில்லை. இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. ஏனெனில், கூட்ட ஆரம்பத்திலேயே இரா.சம்பந்தன் "இந்தக் கூட்டம் பற்றி பத்திரிகைகளுக்கு அறிவிப்பது என்றால் இப்போதே சொல்லிப்போடுங்கோ, நாங்கள் வாயே திறக்காமல் இருக்கிறோம்." என்று கூறிவிட்டுத்தான் பின்னர் கருத்துக் கூறவே தொடங்கினாராம்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சி என்ற ரீதியில் இ.தொ.கா.வுக்கும் அழைப்பு விடுத்த நீலன், மற்றொரு மலையக அரசியல் கட்சியான மலையக மக்கள் முன்னணிக்கு இதுவரை அழைப்பு விடுக்கவில்லை.

நீதியமைச்சர் பீரிஸ் பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளை அழைத்துப் பேசும்போதுகூட மலையக மக்கள் முன்னணியை கருத்தில் எடுக்கவில்லை.

காரணம் இல்லாமல் இல்லை. மலையகப் பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு தனியான சுயாட்சி அலகு ஒன்று தேவை என்பது மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு.

கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு தனியான அலகு கொடுக்கலாம் என்பது அரசின் யோசனையில் உள்ள விடயம். அம்பாறைத் தொகுதி சிங்கள மக்கள் தங்கள் விருப்பப்படி பிரிந்து செல்லவும் அரசின் யோசனை அனுமதிக்கிறது.

அப்படியானால் மலையகத்தில் உள்ள தமிழ் பேசும் மக்கள் அங்குள்ள சிங்கள பிராந்திய சபைகளுடன் சேர்ந்திருக்கப் போகிறார்களா இல்லையா என்பதை கண்டறியவும் கருத்துக்கணிப்பு நடத்துமாறு ம.ம.முன்னணி கேட்டால் என்ன செய்வது? அதுதான் மெல்ல ஓரம் கட்டி விட்டார்கள்.

அரச தரப்பின் நாடித்துடிப்பை அறிந்துதான் டாக்டர் நீலனும் மலையக மக்கள் முன்னணியை கலந்துபேச அழைக்கவில்லையோ?

மக்களுக்குத் தெரியாமல் திரைமறைவில் எத்தனை சுழியோட்டங்கள்! எத்தனை கண்ணாமுச்சிகள்!

கட்சி கட்சியாக அழைத்து அரசின் புதிய யோசனைக்கு ஆதரவு திரட்டும் கூட்டணியினர், தாங்கள் புதிய யோசனையை ஆதரிப்பதை மக்களிடம் ஏன் விளக்கத் தயங்குகிறார்கள்?

அரசின் புதிய யோசனையில் கருத்துக் கணிப்பு நடத்துவது தவிர ஏனைய விடயங்களில் கூட்டணியினருக்கு முழு உடன்பாடு உண்டு.

ஏனைய தமிழ்க் கட்சிகள் மத்தியில் தாங்கள் கூறும் அந்த நிலைப்பாட்டை, மக்களிடம் ஏன் மூடுமந்திரமாக வைத்திருக்கிறார்கள். அதுதான் சந்தேகங்களை தோற்றுவித்திருக்கிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

**கடந்த வாரம்**

**பிரபல கொள்ளைக் கோஷ்டித் தலைவனான பாபா முஸ்தக்குவீமை சந்திக்கிறாள் பூலான் தேவி. தேவையான உதவிகள் செய்வதாகவும் பூலானை தனியான குழு ஒன்றை உருவாக்குமாறும் கூறுகிறான் பாபா. பாபாவுடன் பூலான் சேர்ந்துவிட்டதை அறிந்த ஸ்ரீராம் கோபமடைகிறான். இனி...**

# கொள்ளை ராணி

# பூலான்தேவி

**65**

**தருவது ரசிகன்**



பூலான்

தன் குழுவில் உள்ளவர்களில் நம்பிக்கையான சிலரை பூலான் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று பாபா கூறியிருந்தார்.

பாபா முஸ்தக்குவீம் என்ற பெயரைக் கேட்டாலே உத்தரப்பிரதேசத்தில் உள்ள கொள்ளைக் கோஷ்டிகளுக்கு சிம்ம சொப்பனம்.

பயங்கரமான கொள்ளைக் கோஷ்டித் தலைவன் என்று வர்ணிக்கப்பட்ட பாபாவிடம் உள்ள குணங்கள்தான் ஏனைய கொள்ளைக் கோஷ்டிகளில் இருந்து அவரை வேறு படுத்திக்காட்டியது.

கொடுத்த வாக்கை மீறுவதில்லை. பெண்கள் விஷயத்தில் அத்துமீறி நடப்பதில்லை. ஏழைகளிடம் கொள்ளையடிப்பதில்லை, ஏனைய கோஷ்டிகள் தம்முடன் வம்புக்கு வந்தால்மட்டும்தான் பதிலடி கொடுப்பது என்ற கொள்கைகளை பாபா என்றும் கைவிட்டதில்லை.

விக்கிரம் மல்லாவும் தன்னைப் போன்ற கொள்கைகளுடன் இருந்ததால் தான் அவன்மீது அன்பு கொண்டிருந்தார் பாபா.

பூலானுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற மறுநாளே ஒரு காரியம் செய்தார்.

பாபா அழைப்பதாகவும், அவளுக்காக காத்திருப்பதாகவும் மான் சிங் வந்து பூலானிடம் தெரிவித்தான்.

அன்று காலையிலேயே எழுந்து குளித்து முடித்து அவளுக்காக மான் சிங் கொடுத்த புதிய காக்கிச் சீருடை அணிந்து பளிச்சென்று இருந்தாள் பூலான்.

பழைய தெம்பு மறுபடி அவளிடம் வந்துவிட்டது. அவள் முகத்திலும், நின்ற தோரணையிலும் கம்பீரம் குடிகொண்டிருந்தது. தலைக்கு சிகப்புத் துணியை மடித்து குறுக்காக கட்டியிருந்தாள். கூந்தல் பறந்து கொண்டிருந்தது. சீருடை அவளுக்கு பொருந்தியிருந்தது. புதிய பூட்சுகளும் வழங்கப்பட்டிருந்தன.

பூலானின் புதிய தோற்றத்தைப் பார்த்ததும் மான் சிங் பிரமித்தான். சீருடையை மீறிவிடுவதுபோல திமிறிக்கொண்டிருந்த எழில்களில் மான் சிங்கின் கண்கள் அவனை அறியாமலேயே தாவிச் சென்றன.

அங்கிருந்து தன் கண்களை மீட்க மான் சிங் சிரமப்பட்டான். பூலானை கண்டதில் இருந்து தன் மனம் அவள்மீது ஈர்க்கப்படுவதும், அவளைக் காணும் போதெல்லாம் தன் இதயம் வேகமாய் துடிப்பதுபோல உணர்வதும் மான் சிங்குக்கு விநோதமான அனுபவமாக இருந்தது.

பாபா அவளை அழைப்பதாகச் சொன்னபோது மான் சிங்கின் குரல் பிசிறடித்தது. இயல்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் எச்சரிக்கை உணர்ச்சியே அவன் தடுமாற்றத்துக்கும் காரணமாக அமைந்தது.

பாபா அழைப்பதாகச் சொன்ன உடன் தன் ரைபிளையும் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் பூலான்.

பாபா ஒரு மரத்தடியில் தனியாக அமர்ந்திருந்தார். கால்களை நீட்டிக் கொண்டு ஓய்வாக இருந்தார்.

பூலானையும், மான் சிங்கையும் கண்டதும் தன் எதிரே அமரும்படி சைகை செய்தார்.

பூலானை நோக்கிய பாபாவின் விழிகளில் சின்னதாக ஒரு வியப்புத் தோன்றி மறைந்தது. தன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பாபா பேசினார்:

"ஸ்ரீராம் உன்னை கிராமம், கிராமமாக இழுத்துப் போனான் என்று சொன்னாய் அல்லவா?" என்று கேட்டுவிட்டு நிறுத்தினார்.

பூலான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். ரைபிளை தன் மடியில் ஒரு குழந்தைபோல வைத்திருந்தாள். பாபா அடுத்துச் சொன்ன சேதி பூலானுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"அந்தக் கிராமங்களில் ஒன்றில் இன்றிரவு உன் தலைமையில் கொள்ளை நடக்கும். உன் எதிரிகளை நீ ஒழித்துக் கட்டலாம். மான் சிங் உனக்குத் துணையாக இருப்பான். என் ஆட்களில் இருபது பேர் கூட வருவார்கள்!"

தான் சொன்னதைக் கேட்டதும் பூலானின் கண்களில் தெரிந்த உணர்ச்சிகளை பாபா கவனிக்கத் தவறவில்லை.

"என் குழுவில் இருந்து உனக்கு நம்பிக்கையான ஆட்களை தெரிவு செய்ய இவ்வாறான சந்தர்ப்பங்கள் உதவும்." என்றார் பாபா.

அடுத்து மான் சிங்கை நோக்கின பாபாவின் விழிகள்.

"பூலானுக்கு இன்று முதல் நீதான் தளபதி. பூலான் தேவியின் கட்டளைகளுக்கு நீ மதிப்புக் கொடுக்கவேண்டும். பூலான்! மான் சிங்கை நீ நம்பலாம். எதிரிகளுக்குத்தான் மான் சிங் பயங்கரமானவன். நம்பிக்கை வைத்தவர்களுக்கு இவனைப் போல ஒரு தோழன் வேறெங்கும் கிடைக்கமாட்டார்கள்."

தன்னைப் பற்றிய பாபாவின் புகழ்ச்சியால் இருந்த இடத்திலேயே சங்கடமாக அசைந்தான் மான் சிங்.

அன்று மாலையே புறப்பட ஆயத்தமானார்கள். புறப்பட முன்னர் அனைவரையும் அழைத்து பாபா விளக்கம் கொடுத்தார். பூலானின் ஆணைப்படி நடக்குமாறு கட்டளையிட்டார்.

"பூலான் தேவிக்கு ஜே" என்று அனைவரும் தங்கள் துப்பாக்கிகளைத் தலைக்கு மேல் உயர்த்தி கோஷமிட்டனர்.

ரைபிள் தோட்டாக்கள் அடங்கிய பட்டியை பூலானிடம் கொடுத்தார் பாபா. அதனை வாங்கி தன் சீருடைக்கு மேலாகக் கட்டிக்கொண்டாள் பூலான்.

கைத்துப்பாக்கி ஒன்றையும் பூலானுக்குக் கொடுத்தார் பாபா. அதனை இடுப்பில் அணியக்கூடியதாக உறை ஒன்றும் வழங்கப்பட்டது.

பூலானை திருப்தியாகப் பார்த்த பாபா "போர்க்கோலம் பூண்டு விட்டாள் பூலான்தேவி!" என்றார்.

பாபாவின் உற்சாகமும், அங்கிருந்த சூழ்நிலையும் பூலானுக்கு தன் உயிர் அணுக்கள் ஒவ்வொன்றும் உத்வேகம் கொண்டு விட்டதைப்போல இருந்தன.

அனைவரும் புறப்பட்டனர். பாபாவின் பாதங்களைத் தொட்ட பூலானை, அவள் தலையில் தொட்டு ஆசிர்வதித்தார் பாபா முஸ்தக்குவீம்.

அன்றிரவே அவர்கள் குறிவைத்த கிராமத்துக்குச் சென்றுவிட்டார்கள்.

மல்லா இறந்ததும் பூலானை ஸ்ரீராம் கோஷ்டியினர் கொண்டுவந்த கிராமம் அதுதான்.

தன்னை அடைத்து வைத்திருந்த குடிசையை பூலான் தேடிச் சென்றாள். அவள் பின்னால் மான் சிங்கும், மற்றவர்களும் தொடர்ந்தனர்.

இருளில் நாய் ஒன்றை கோஷ்டியில் உள்ள யாரோ மிதித்துவிட, அது வீல் என்று அலறிக்கொண்டு ஓடி, குரைக்கத் தொடங்கியது.

தொடர்ந்து நாய்கள் குரைக்கத் தொடங்க, அந்தக் கிராமத்தில் நடக்கப்போகும் விபரீதத்தை முன்னறிவிப்புச் செய்வதுபோல இருந்தது.

அந்தக் குடிசையை கண்டதும் பூலான் புயல்வேகத்தில் சென்று உதைத்த உதையில் குடிசைக் கதவு பொத்துக் கொண்டது.

உள்ளே அப்போதுதான் தன் மனைவி மீது படரத் தொடங்கிய ஸ்ரீராமின் கையாட்களில் ஒருவனான 'நீல்' என்பவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

மான் சிங் தன் ரைபிளால் அவனது தோள்பட்டையில் அடித்த அடியில் "அய்யோ.. அம்மா.." என்று கத்தினான்.

கீழே கிடந்தவளை முடியைப் பற்றி கோழிக்குஞ்சுபோல தூக்கினாள் பூலான். அவள் உடலின் மேற்புறம் வெறுமையாக இருந்தது. கைகளால் மறைக்க முயல, பூலான் அவள் கன்னத்தில் அறைந்தாள்.

"என்னைத் தெரிகிறதாடி நாயே.?" என்று கேட்டாள். அவளுக்கு உடனே அடையாளம் தெரியவில்லை. பின்னர் புரிந்தபோது பயத்தில் முகம் வெளிறியது.

பூலானை குடிசைக்கு வெளியே வைத்து துணியில்லாமல் ஓடவைத்தபோது கைகொட்டிச் சிரித்தவள் அவள். சீருடையுடன் வந்த பூலானை உடனே அடையாளம் தெரியாவிட்டாலும், பூலானின் முகத்தை கூர்ந்து பார்த்தபோது அடையாளம் தெரிந்து விட்டது.

பூலானுக்கு அவள் முகம் ஆணியடித்து மாட்டியதுபோல மனதில் இருந்தது. அவளும், அவளுடன் நின்ற பெண்களும் பல்லை இளித்த காட்சி அப்படியே மனதில் நின்றது.

"அடியே நாயே! உன் உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் இந்த கிராமத்தை சுற்றி ஓட வைக்கட்டுமா? சொல்லடி!" என்றாள் பூலான்.

அவள் பூலானின் கால்களில் விழுந்து, கால்களைக் கட்டிக்கொண்டு மன்றாடத் தொடங்கினாள்.

"ஏனடி அழுகிறாய்? சிரித்தாயேடி, கொக்கட்டம் போட்டுச் சிரித்தாயேடி! உன்னிடம் இல்லாத எதைக் கண்டடி சிரித்தாய் நாயே?" என்று உதைத்துத் தள்ளினாள் பூலான்.

"உன்னை அப்படிச் செய்யமாட்டேன். நானும் ஒரு பெண். ஆனால் நீ பெண்ணே அல்ல! பேய். இன்னொரு பெண்ணின் அவலத்தைக் கண்டு கைகொட்டிச் சிரிப்பவளும் ஒரு பெண்ணா? ச்சே.. நாயே, நீ தொலைந்து போ!"

பூலான் காறித்துப்பினாள். அடுத்து அவளது ரைபிள் நீண்டது.

'டுமில்'

அவள் மார்பில் இரத்தப் பொத்தல். மடங்கி விழுந்து செத்துப் போனாள்.

பூலானின் பார்வை மான் சிங்கின் பிடியில் இருந்த ஸ்ரீராமின் கையாள் பக்கம் திரும்பியது.

பூலானின் விழிகளில் கொலைவெறி. இந்திப் படங்களில் அம்மனின் கண்களில் இருந்து தீப்பிளம்புகள் புறப்படுவது போல காண்பிப்பார்களே! அக் காட்சிதான் ஸ்ரீராமின் கையாளுக்கு நினைவில் வந்தது.

அவன் உடல் புயல் காற்றில் சடசடக்கும் மரம்போல ஆடியது. பயத்தில் தன் இடுப்புக்கு கீழே இருந்த உடையை நனைத்து விட்டான். மான் சிங் முகம் சுளித்தான்.

"எங்கேயடா ஸ்ரீராம்?"

"சத்தியமாக தெரியாது தாயி" கையெடுத்துக் கும்பிட்டான்.

மான் சிங்கின் பிடிவேறு மரணப்பிடியாக இருந்தது. பலியாடுமாதிரி முழித்தான் ஸ்ரீராமின் கையாள்.

"ஸ்ரீராமின் உறவினர்களது வீடுகளைக் காட்டு, உன்னைச் சுடமாட்டேன்!" என்றாள் பூலான்.

"கா.... கா.. காட்டு.. காட்டுகிறேன்"

அழைத்துப் போனார்கள். "மவனே, தப்பியோட நினைத்தாய், மிதித்தே கொன்றுபோடுவேன்!" என்றான் மான் சிங்.

ஸ்ரீராமின் கையாள் அடையாளம் காட்டிய பண்ணையார்களின் வீட்டுக் கதவுகள் தட்டப்பட்டன.

நாய்கள் குரைக்கும் சத்தம், துப்பாக்கி வெடிச் சத்தம் எல்லாம் கேட்டதும், ஏதோ விபரீதம் ஆரம்பமாகிவிட்டது என்று தெரிந்து யாரும் கதவுகளைத் திறக்கவில்லை.

மான் சிங் உடனே ஒரு தந்திரம் செய்தான். துப்பாக்கியால் வானை நோக்கி சுட்டுவிட்டு அடித்தொண்டையால் கத்தினான்.

"யாரும் பயப்படவேண்டாம். நாங்கள் ஸ்ரீராமின் ஆட்கள்தான் வந்திருக்கிறோம்!"

அவனது தந்திரம் பூலானுக்கு புரிந்ததும், சட்டென்று அவளும், "அய்யோ.. அய்யோ... என்னை விடுங்களடா... என்னை ஒன்றும் செய்யாதீர்கள்.." என்று கத்தத் தொடங்க, மான் சிங்கூட அதனை எதிர்பாராமல், பூலானைப் பார்த்துப் பிரமித்து நின்றான்.

பெண் குரல் கேட்டதும், பண்ணையாளர்கள் அந்த ருசியான காட்சியைக் காண வீட்டுக் கதவுகளைத் திறந்தனர்.

மான் சிங் குரல் கொடுக்க, மின்னல் வேகத்தில் பாய்ந்த அவன் ஆட்கள் திறக்கப்பட்ட கதவுகள் வழியாக வீடுகளுக்குள் புகுந்தனர்.

தடுக்க முயன்றவர்கள் ரைபிள்களால் தாக்கப்பட்டு மண்டை பிளந்து கத்தினார்கள். உள்ளே புகுந்தவர்களைக் கண்டு பண்ணையாளர் வீட்டுப் பெண்கள் அவலக்குரல் எழுப்பி கூச்சலிட்டார்கள்.

சில வீட்டுக் கதவுகள் உடைத்துத் திறக்கப்பட்டன. உள்ளே பெட்டகங்கள் உடைத்தெறியப்பட்டு பணமும், நகைகளும் அள்ளப்பட்டன.

ஸ்ரீராமின் நெருங்கிய உறவினர்களான பண்ணையாளர்கள் ஐந்து பேரை பூலான் நிர்வாணமாக்கினாள். உடையைக் களைய தயங்கியபோது பூலானின் கையில் இருந்த ரைபிள் சுழன்றது. தாடை வெடித்தது.

களைந்து போட்டுவிட்டு கை கூப்பிக் கொண்டு நின்றார்கள்.

"இப்போது சிரியுங்கடா" என்றாள்.

தங்கள் கனத்த உடம்போடு அப்படியே தரையில் குப்புற விழுந்து மன்றாடினார்கள்.

"கையாலாகாத நாய்களே! நீங்கள் எல்லாம் உண்மையான ஆம்பிளைகளாடா?" என்று புழுதியை பூட்ஸ் காலால் கிளறித் தள்ளினாள் பூலான்.

"எழும்புங்கடா!" எழுந்தார்கள். தோல் உரித்த எருமைகள் மாதிரி தெரிந்தார்கள்.

"ஓடுங்கடா!"

உடம்பை அசைக்கக் கஷ்டப்பட்டு ஓடினார்கள்.

'டுமீல்' பூலான் சுட்டாள்.

'டுமீல்' மான் சிங் சுட்டான்.

டுமீல், டுமீல், டுமீல்

ஐந்து பேரும் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர்.


"பொலிஸ்"

ஒருவன் ஓடிவந்து பதட்டமாய் அறிவித்தான்.

(தொடர்ந்து வரும்)

## அப்பளக் காருக்கு 4 கோடி

டயானா கடைசியாகப் பயணம் செய்த கார் 'மெர்சிடஸ் பென்ஸ்' கார். டயானா



விபத்தானதும் அந்தக் காரின் பெயரும் செய்திகளில் அடிபட்டது. அதனால் எங்கே தங்கள் காரின் தரம் பற்றி குறைவாக எடை போடப்போகிறார்களோ? என்று பென்ஸ்கார் நிறுவனம் கதி கலங்கிப் போய் இருக்கிறது.

'மெர்சிடஸ் பென்ஸ்' காரை வாங்க நினைத்த பெரும் புள்ளிகளும் 'ராசியில்லாத கார்' என்று ஓரம்கட்டிவிட்டால் வியாபாரம் படுத்துவிடும்.

பென்ஸ் கார் நிறுவனத்தின் கவலை ஒரு புறமிருக்க, டயானா விபத்தானதில் உடைந்து அப்பளமான காருக்கு ஏகப்பட்ட மவுசு.

'எனக்குத் தாருங்கள்– எவ்வளவு கோடியும் தருகிறேன்' என்று பல பெரும் புள்ளிகள் கியூவில் நிற்கிறார்கள். நினைவுச் சின்னமாக பாதுகாத்து வைக்கப்போகிறார்களாம்.

"அதோ இருக்கிறது பாருங்கள் டயானா பயணம் செய்த கார். நான்தான் வாங்கினேன்!" என்று கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளத்தான் போட்டி. நான்கு கோடி ரூபாய்கள் வரை கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் யாருக்கும் இதுவரை கொடுக்கப்படவில்லையாம்.

## அமைச்சர்களுக்கு எய்ட்ஸ்

இந்திய அரசியல்வாதிகள் பலர்மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் விதம் விதமான அஸ்திரங்களாகப் பாய்ந்து கொண்டிருக்கின்றன.



இது ஒருபுறமிருக்க, இந்திய எய்ட்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் ஒரு தகவல் கசிந்திருக்கிறது. இந்திய மத்திய அரசின் நிதி உதவியில் இயங்கும் இந்த நிறுவனம் தமிழக முன்னாள் அமைச்சர்கள் மூவருக்கு 'எய்ட்ஸ்' இருப்பதாக பதிவு செய்துள்ளது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர்களாம் அவர்கள். சினிமா நடிகைகள் உட்பட பல பெண்களுடன் இவர்களுக்கு தொடர்புகள் இருந்ததாம்.

அமைச்சர்களிடம் காரியம் ஆகவேண்டுமானால் பிரபல நடிகைகளை தூது அனுப்பும் தொழிலதிபர்கள் இருக்கிறார்கள்.

முன்னாள் அமைச்சர் கண்ணப்பனுக்கும் நடிகை சுகன்யாவுக்கும் இடையே தொடர்பு இருந்தது பற்றியும் அப்போது பரவலாகப் பேசப்பட்டது.

எனினும் அந்த மூன்று முன்னாள் அமைச்சர்களும் யார் யார் என்ற தகவல்கள் வெளியாகவில்லை. இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

## கோடி கோடியாய்...!

பொழுதுபோக்கு சமாச்சாரங்கள் மூலம் உலகில் அதிகம் சம்பாதித்துள்ளவர்களின் பட்டியலை 'ஃபோர்ப்ஸ்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. சம்பாதிக்கப்பட்ட தொகையைக் கேட்டால் தலை 'கிர்' என்று சுற்றும்.

'ஜுராசிக் பார்க்' படம் எடுத்த ஸ்பீபன் ஸ்பீல்பெர்க்தான் முதல் இடத்தில் இருக்கிறார். டைனோசர் போன்ற சமாச்சாரங்களை பிரமாண்டமாகக் காட்டிக் காட்டி மனிதர் சம்பாதித்த தொகை 313 மில்லியன் டொலர். ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 800 கோடி ரூபாய்கள். (அடேங்கப்பா!).



இரண்டாவது இடத்தில் இருப்பவர் 'ஸ்டார் வோர்ஸ்' போன்ற படங்களைத் தயாரித்த ஜோர்ஜ் லுகாஸ். இவரது சம்பாத்தியம் 241 மில்லியன் டொலர். அதாகப்பட்டது ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 600 கோடி ரூபாய்கள்.

மூன்றாவது இடத்தில் இருப்பவர் ஒரு பெண்மணி. அவர் பெயர் ஒப்ரா. இவர் வாயை வைத்தே சம்பாதித்து முடித்துவிட்டார். அதாவது அறிவிப்பாளரினி.

முன்னர் ஈ.ரி.வியில் 'டாக்ஷோ' என்ற நிகழ்ச்சியில் ஒப்ராவைப் பார்த்திருப்பீர்கள். (தற்போது ஈ.ரி.வி. இங்கு ஒளிபரப்பாவதில்லை) செக்ஸ் உட்பட சகல சமாச்சாரங்களையும் 'டாக்ஷோ'வில் அலசுவார் ஒப்ரா. இது தவிர பல்வேறு பிரபலமான நிகழ்ச்சிகளும் நடத்தி வருகிறார். ஒப்ராவின் சம்பாத்தியம் 241 மில்லியன் டொலர். அதாவது ஒரு இலட்சத்து 2[illegible] ஆயிரம் கோடி.

இந்தப் பணத்தை எ[illegible]லாம் எங்கே வைத்துத் தொலைக்கிறா[illegible]களோ?!

## சின்ன எம்.ஜி.ஆர். திருகுதாளங்கள்



முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன். இந்த சுதாகரனுக்கு உலக சாதனைத் திருமணம் நடத்தித்தான் தனது ஆட்சிக்கு குழிபறித்தார் ஜெயலலிதா.

இப்போது முன்னாள் வளர்ப்புத்தாய்க்கு குழிபறித்துக் கொண்டிருக்கிறார் சுதாகரன். சின்ன எம்.ஜி.ஆர். என்று சுதாகரனை துதிபாடும் சுவரொட்டிகளை சுதாகரன் தன் செலவில் அடித்து ஒட்டியிருக்கிறார்.

ஜெயலலிதாவுக்குப் போட்டியாக அரசியலில் குதிக்கவும் முடிவெடுத்திருப்பதாக மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

இது தொடர்பான பின்னணித் தகவல்கள் சற்று அதிர்ச்சியானவை.

ஜெயலலிதா, சசிகலா கூட்டணி திரட்டிய சொத்துக்களில் குறைந்தது ஐநூறு கோடி ரூபாய் சொத்துக்கள் சுதாகரன் வசம் உள்ளனவாம். அந்தச் சொத்துக்களை ஜெயலலிதாவுக்கு திருப்பிக் கொடுக்காமல் இருக்கத்தான் போட்டி அரசியல் என்றும்.

"நான் வாயைத் திறந்தால் பூகம்ப[illegible] வெடிக்கும்" என்றும் மிரட்டுகிறார[illegible] சுதாகரன்.

மெல்லவும் முடியாம[illegible] விழுங்கவும் முடி[illegible]மல் திணறிக்கொண்[illegible]ருக்கிறார் ஜெயலலி[illegible] சிவாஜி கணேசன[illegible] பேத்தியை திருமணம் [illegible]துள்ள சுதாகரன் தங்கியிருப்[illegible] ஒரு நட்சத்திர விடுதியில்.

கையிலே பணம், செலவ[illegible]பது எப்படி என்று தெரியா[illegible] தலையைப் பிய்த்துக் கொ[illegible]ருக்கிறார். குறிப்பிட்ட நட்ச[illegible] விடுதிக்கு குட்டி நடிகை[illegible] மற்றும் மார்க்கெட் இ[illegible] முன்னாள் நாயகிகள் தி[illegible] படையெடுக்கிறார்கள். [illegible]கரனையும், அவரது [illegible]களையும் குஷிப்படுத்து[illegible]கள்.

"நாளைய மு[illegible] எங்கள் சின்ன [illegible] ஆர்.தான்" என்று[illegible] கிறார்கள் அவர[illegible] பிடிகள். எல்லாம்[illegible] தான்!

## வலையில் வீழ்ந்தாரா?

சன்ரி.வி. நிகழ்ச்சிகள் நம்நாட்டு எம்ரி.வியில் காண்பிக்கப்படுகின்றன. அந்த நிகழ்ச்சிகளில் பிரபலமானவை 'பெப்சி உங்கள்சொய்ஸ்.' அந்த நிகழ்ச்சி பிரபலமாகக் காரணம் உமா. அவர்தான் அறிவிப்பாளரினி. கொஞ்சும் குரலில் தமிழை ஆங்கிலம் இடைக்கிடையே கலந்து தூவும் உமாவுக்கு ஏராளமான ரசிகர்கள்.

உமாவை 'பெப்சி' உமா என்றுதான் அழைக்கிறார்கள். தமிழக சஞ்சிகைகளில் உமா பற்றி அடிக்கடி செய்திகள் வருகின்றன.

சமீபத்தில் கிசு கிசுச் செய்தியும் வந்துவிட்டது. அடிக்கடி காதலிகளை மாற்றிக் கொள்ளும் நடிகர் அஜித்குமாரின் வலையில் விழுந்திருக்கிறாராம் உமா. வதந்தி என்று மறுக்கிறார். யாரும் நம்புகிறார்கள் இல்லை. இதேவேளை 'பெப்சி' உமா தமிழை பயங்கரமாக கொலை செய்வதாக விமர்சனம் கிளம்பியிருக்கிறது. நல்லவேளை அந்த விமர்சகர்கள் நம்நாட்டு அறிவிப்பாளர்கள் சிலரது அறிவிப்புக்களை காதாரக் கேட்க[illegible]

விளம்பரங்களிலும், நாடக[illegible] தமிழை பிலை பிலையாகப் பே[illegible] பேற்றுகிறார்கள். சமீபத்தில் ரூபவ[illegible] ஒரு நாடகம் விசுவநாதன் யாழ்[illegible] தமிழ் பேச, இன்னொரு பெண்[illegible] யாழ்ப்பாணத் தமிழை நார்[illegible] வாயால் கிழித்துவிட்டார். விசுவ[illegible] அப்பாவாக நடித்தவர் பேசி[illegible] ஊர் தமிழ்ப் பாஷை என்பதே பு[illegible]



படிப்பகம்

www.padippakam.com

# தூக்குக் கயிறு





← வாழ்க்கை வெறுத்துப் போசக, அதுதான் ஒரு முழம் கயிற்றை நாடியிருக்கிறார் என்றா நினைக்கிறீர்கள்? அது தான் இல்லை.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவை 1979ம் ஆண்டில் இராணுவ ஆட்சி தூக்கில் போட்டது. பூட்டோ தூக்கில் போடப்பட்டதினத்தை பூட்டோ ஆதரவாளர்கள் துக்க தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

துக்க தினத்தன்று பாகிஸ்தானில் உள்ள கயிறு வியாபாரிகள் இவ்வாறு தூக்குக் கயிறை செய்து தங்கள் கடை முன்பாக தொங்க விடுகின்றனர். இது ஒரு புதுமையான போராட்ட முறைதானே! இது தூக்குக் கயிறு அல்ல. துக்கக் கயிறு!

## பகிரங்கத் தண்டனை

→ பிலிப்பைன்ஸ் நாட்டில் இயங்கி வரும் கெரில்லா அமைப்புக்களில் ஒன்று மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி.

தங்கள் இயக்கத்திற்கு எதிரானவர்களையும், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபடுவோரையும் தமது நீதிமன்றத்தில் விசாரிக்கிறார்கள். விசாரணையில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் பகிரங்க இடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்படுவர்.

'மாசியு' என்ற இடத்தில் இரண்டு பேருக்கு 'மோரோ' கெரில்லாக்கள் மரணதண்டனை வழங்கும் காட்சி இது. கட்டிவைத்து சுட்டுக் கொல்கின்றனர். பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் இக் காட்சியை நேரில் கண்டனர். கொள்ளைக் குற்றங்களுக்காக இத் தண்டனை வழங்கப்பட்டது.

## ரசிப்பது சூரியனை

சுத்தமான காலை நேரம் ஒன்றில் எடுக்கப்பட்ட அசத்தலான புகைப்படம். தென்னாபிரிக்காவில் இது எடுக்கப்பட்டது.

கீரிப்பிள்ளைகள்தான் இவை. கீரி இனத்தில் புதுமையான ரகத்தைச் சேர்ந்தவை. எத்தனை நிற்கின்றன என்று சட்டென்று தெரியவில்லை அல்லவா. மூன்று கீரிப் பிள்ளைகள் ஒன்றுபட்டு எழுந்து நின்று சூரியன் உதயமாகும் காட்சியை ரசிக்கின்றன.

இப் புகைப்படத்தை எடுக்க மூன்று மாதமாக முயன்றாராம் புகைப்படப் பிடிப்பாளர். வெளிநாட்டு புகைப்படப்பிடிப்பாளர்கள் பிரபலங்கள் பின்னால் மட்டும் அல்ல. இப்படியான அசத்தலான காட்சிகளைக் காணவும் அலைந்து திரிவார்கள் முயற்சிக்கு பலன் கிட்டாமல் போகுமா?!



## சினிமாவுக்கு வந்த மலை



மாமிச மலைக்கு இருபுறமும் இருப்பவர்கள் இந்திப் படப் பிரியர்களுக்கு பரிச்சயமானவர்கள்தான். ஒருவர் அக்ஷய்குமார். இன்னொருவர் ஜுகி சாவ்லா. மாமிசமலையின் பெயர் ச.மானுவல். இவர் உலக சுமோ மல்யுத்த சாம்பியன். இந்த ஜாம்பவானை இந்திப் படத்தில் நடிப்பதற்காக இறக்குமதி செய்திருக்கிறார்கள். காத்திரமான இறக்குமதிதான்.

மிஸ்டர் அண்ட் மிஸஸ் கில்லாடி படத்தில் நடிக்கிறார் இந்த மலை. உயரம் ஆறே முக்கால் அடி. எடை 386 கிலோ. ஹீரோ அக்ஷய் குமாரை சின்னக் குழந்தை மாதிரி தூக்கிக் கடாசிவிடுவார். ஆனால் திரைப் பட மரபுப்படி ஹீரோ அக்ஷய் குமார் இந்த மலையை புரட்டி விசுவதாக காண்பித்தாலும் ஆச்சரியமில்லை. ஆள் பார்ப்பதற்கு பயங்கரமாக இருந்தாலும் படு குஷியான பேர்வழியாம். மத்தியான சாப்பாட்டுக்குப் பின்னர் மலை கொறிக்கும் நொறுக்குத் தீனி மட்டும் அக்ஷய் குமாரின் எடையைவிட அதிகமாம். படப்பிடிப்பில் மிகப் பவ்வியமாகத்தான் நடந்து கொள்வார் ஹீரோ. படத்தில் ஹீரோ அக்ஷய்தான். ஆனால் நிஜமான ஹீரோ மானுவல்தான். அக்ஷய் குமாரின் 'கில்லாடி' படம் வெற்றி அடைந்த பின்னர், 'கில்லாடி' என்று வரக்கூடிய பெயர்களாக தொடர்ந்து சூட்டுகிறார்கள்.



## துருப்புக் காவி

↑ படத்தில் இருப்பது படையினரை பாதுகாப்பாக ஏற்றிச்செல்லப் பயன்படும் துருப்புக்காவி கவச வாகனம்.

புலிகளின் மோட்டார் ஷெல் அடிகள், துப்பாக்கிச் சூடுகள் மத்தியில் படையினரை முன்னோக்கி பத்திரமாக கொண்டு செல்ல இது உபயோகமாகும். உள்ளே படையினர் ஏறி அமர்ந்து கொள்வர். புளியங்குளத்தில் நடைபெற்ற மோதலில் இந்த துருப்புக்காவி வாகனம் புலிகளால் கைப்பற்றப்பட்டது. காட்டுக்குள் நகர்த்தப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 25

# பெரிய நடிகரை மதிக்காத நடிகை

## கட்டிவைக்கப்பட்ட 'ஜெய' நடிகர்

அன்றைய முப்பெரும் நடிகர்களில் மக்களைப் பெரிதும் கவர்ந்த நடிகர் அவர். அவரைக் கண்டால்போதும் சக நடிகர்களும், நடிகைகளும் எழுந்து நின்று மரியாதை செய்வர். அவரது படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமானார் ஒரு புது நடிகை. கொன்வேன்டில் படித்தவர் அவர். தாயாரும் ஒரு நடிகைதான்.

படப்பிடிப்புக்காக அந்தப் பெரிய நடிகர் தன் காரில் வந்து இறங்கினார். படப்பிடிப்பு அரங்கில் இருந்தவர்கள் எல்லாம் எழுந்து நிற்க, அந்த புது நடிகை மட்டும், ஆங்கில நாவல் ஒன்றை படித்தபடி கால் மேல் கால்போட்டபடி அமர்ந்திருந்தார்.

நடிகரோ கண்டும் காணாததுபோல சென்றுவிட்டார். மேக்கப் அறைக்கு சென்ற நடிகர் படத்தின் இயக்குநரை அழைத்தார். அழைப்பை எதிர்பார்த்திருந்த இயக்குநரும் என்ன நடக்கப்போகிறதோ என்ற பயந்து கொண்டே போனார்.

அதனால் நடிகர் எதுவும் பேச முன்னரே முந்திக்கொண்ட இயக்குநர், "அது சின்னப்பெண்ணு. தெரியாமல் நடந்துவிட்டது. கண்டிச்சு வைக்கிறேன்" என்றார்.

ஆனால் நடிகரோ, "அப்படியெல்லாம் எதுவும் பண்ணாதீங்க என்று உங்களிடம் சொல்லத்தான் கூப்பிட்டேன். அப்படியெல்லாம் மிரட்டினா அது பயந்துடும். என்கூட இயல்பாக நடிக்கத் தோணாது. அது பாட்டிலேயே விட்டுப்பிடிப்போம்" என்றுவிட்டார். இயக்குநருக்கு அப்போதுதான் நிம்மதியே வந்தது.

பின்னர் அந்த நடிகை படிப்படியாக மூத்த நடிகர்களை மதிக்கக் கற்றுக் கொண்டார். அந்தப் பெரிய நடிகருடன் நெருக்கமானார்.

முதல் பார்வையிலேயே அந்த நடிகை மீது நடிகருக்கு ஏற்பட்ட ஈர்ப்புத்தான் பின்னாளில் அந்த நடிகையை எங்கோ உயரத்தில் ஏற்றிவைத்தது.

அந்த நடிகரின் ரசிகர்களும் அவர்களது ஜோடிப் பொருத்தத்தை ஏற்றுக் கொண்டனர். 'அண்ணி' என்று அழைக்கவும் தலைப்பட்டனர்.

### இரகசியத் திருமணம்

அந்த நடிகையை சந்திப்பதற்காகவே தனியான ஒரு பங்களாவும் வாங்கிப்போட்டிருந்தார் நடிகர். பத்திரிகையாளர்களின் கண்களில் படாமல் இருக்கக்கூடியதாக நகரைவிட்டு ஒதுக்கப்புறமான ஒரு இடத்தில் அந்தப் பங்களா இருந்தது.

அப்படியிருந்தும் சினிமா உலகிலும், நடிகர் அப்போது அங்கம் வகித்த கட்சியிலும் இந்த விடயம் அரசல் புரசலாக பேசப்பட்டு வந்தது. நடிகையை தான் அப்போதிருந்த கட்சியில் சேர்க்கவும் முயன்றார் நடிகர். அது கைகூடவில்லை.

இதற்கிடையே அந்த பெரிய நடிகருக்கும் நடிகைக்கும் இரகசியத் திருமணம் நடந்துவிட்டதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது.

தன் கணவரின் கவனம் அந்த நடிகைமீது செல்வதை நடிகரின் மனைவி அறிந்துகொண்டார். அவரும் முன்னாள் நடிகைதான். நடிகரின் உதவியாளர்கள் சிலரே நடிகரையும், அந்த நடிகையையும் பற்றியும், அவர்களது தனிப்பட்ட சந்திப்புக்கள் பற்றியும் உளவறிந்து மனைவிடம் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அதனால் குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றின. நடிகையை விரும்பினாலும்கூட, தன் மனைவிமீதும் மட்டற்ற பாசம் வைத்திருந்தார் நடிகர். அதனால் அந்த நடிகையை சந்திப்பதை குறைத்துக் கொண்டார்.

அது மட்டுமல்லாமல் அந்த நடிகைக்கு வேறு சில புதுத்தொடர்புகளும் ஏற்பட்டிருப்பதாக நடிகருக்கு தெரியவந்தது. தன் கார்ச்சாரதி மூலம் நடிகையை உளவு பார்த்தார் நடிகர். அந்த கார்ச்சாரதி முன்னர் அந்த நடிகை வீட்டிலும் சாரதியாக இருந்தவர்.

நடிகர் தன்னை உளவு பார்ப்பதை அறிந்து கொண்ட நடிகை கோபமானார். "என்னை அவர் என்ன குத்தகை எடுத்திருக்கிறாரா?" என்று ஆங்கிலத்தில் திட்டித் தீர்த்தார்.

### பாராட்டு உரை

அந்த நடிகருக்கு போட்டியான மற்றொரு 'திலக' நடிகரின் படங்களில் நெருக்கமாக நடிக்கத் தொடங்கினார். அந்த நடிகருக்கு நடந்த பாராட்டு விழா ஒன்றில் கலந்து கொண்ட நடிகை, "நடிப்பு என்றால் என்ன என்பதற்கான அகராதி" என்ற அந்த திலக நடிகரை ஒஹோவென்று புகழ்ந்து தள்ள, பலரும் புருவம் உயர்த்தினார்கள்.

இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியானபோது பெரிய நடிகரும் அதனைப் பார்த்தார், படித்தார். தன்னைக் கடுப்பாக்கவே நடிகை அப்படியெல்லாம் பேசுகிறார் என்று தன் நெருங்கிய சகாக்களிடம் கூறிச் சிரித்தார்.

தனது அடுத்த படத்தில் புதிய நடிகைகளை தன்னுடன் நடிக்க ஒப்பந்தம் செய்தார் நடிகர். அது பிரமாண்டமாக உலகைச்சுற்றி எடுக்கப்படும் படம் என்பதால் தன்னை அதில் சேர்க்காமல் விட்டதில் நடிகைக்கு உள்ளூர வருத்தம்.

குறிப்பிட்ட படப்பிடிப்புக்காக நடிகர் தன் ஜோடியாக நடித்த நடிகைகளுடன் சிங்கப்பூர் சென்றபோது, அந்த நடிகையும் பின்னாலேயே வேறு ஒரு விமானத்தில் சென்றார். அங்கு நடிகரை தனியாகச் சந்தித்து எத்தனையோ முயற்சிகள் செய்தார். உபசாரங்களை ஏற்றுக்கொண்ட நடிகர் இறுதிவரை நடிகைக்கு வாய்ப்பே கொடுக்கவில்லை.

இதனையெல்லாம் அந்த நடிகை ஒரு பாடமாகக் கொண்டு திருந்தட்டும் என்றுதான் நடிகர் செய்தாரே தவிர, அந்த நடிகைமீது கொண்ட ஈர்ப்புப் போகவில்லை கடைசிவரை போகவில்லை.

### ஜெய - ஜெய

அப்போது முப்பெரும் நடிகர்களுக்கு அடுத்த நிலையில் இருந்த நடிகர்களில் குறிப்பிடத்தக்கவர் 'ஜெய' நடிகர். நடிகைக்கும் அவருக்கும் பெயரின் முதல் இரண்டு எழுத்துக்களில் அப்படியொரு ஒற்றுமை. அந்த நடிகருடன் ஒரு படத்தில் கிட்டத்தட்ட அரை நிர்வாணம்போல நடித்தார் நடிகை. இருவருக்கும் இடையே 'நட்பு' ஏற்பட்டு பெரிதாகிவிட்டது. இனி ஜெயம்தான் 'ஜெய', 'ஜெய' என்று இருக்கலாம் என்று நினைத்தனர் இருவரும்.



பாக்யராஜ் - நக்மா
படம்: வேட்டிய மடிச்சுக்கட்டு

## வளர்ச்சி

இளம் ஹீரோக்களுக்கு போட்டியாக முளைத்துக் கொண்டிருக்கிறான் முன்னாள் லிட்டில் சூப்பர் ஸ்டார் சிம்பு. டி.ராஜேந்தரின் வாரிசான சிம்பு பெரியாளாக வளர்ந்து விட்டான்.

'மோனிஷா' படத்தில் டி.ராஜேந்தர் இசையில் 'ஐலவ்யூ' என்ற பாடலையும் பாடியிருக்கிறான். படத்தில் இசை உதவியும் சிம்புதானாம்.

## மீனா நழுவினார்

கமலின் 'காதலா, காதலா' படத்திற்கு மீனாவை நாயகியாகப் போடத்தான் முதலில் முடிவு செய்திருந்தார்கள். தான் சொன்னால் மீனா கேட்பார் என்று கமல் நம்பியிருந்தார். ஆனால் இயக்குநர்களை பகைத்துக்கொள்ள விரும்பாத மீனா மெல்ல கழன்றுகொண்டார்.

அதன் பின்னர் சௌந்தர்யா, ரம்பா இருவரையும் ரகசியமாக அழைத்து மளமளவென்று சில புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டுவிட்டனர். அவைதான் பத்திரிகைகளில் வெளியாகின. படப்பிடிப்பு இன்னமும் ஆரம்பிக்கவில்லை.

'முதலிலேயே தெரிந்திருந்தால் இரண்டு நடிகைகளையும் கொக்கி போட்டு இழுத்திருக்கலாமே' என்று கவலைப்படுகிறார்கள் படைப்பாளிகள் சங்கத்தினர்.



அப்பாஸ் - சிம்ரான்
படம்: பூச்சூடவா

## திரும்பினார் ரம்...

'ஜானகி ராமன்' படத்தில் ரம்பாவுக்கு ... முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாக நக்மா சர்ச்சை கிளம்... தெரிந்ததே. அப்போது இயக்குநர் சி.சுந்தர் ரம்பா... சார்பாக பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தார்.

இப்போது 'நாம் இருவர், நமக்கு இருவர்' படத்தில் ... பிரச்சனை கிளப்பி இருக்கிறார். இப் படத்தின் பாடல் ...கள் தென்னாபிரிக்காவில் படமாக்கப்பட்டன. பிரபு ... ரம்பா, மகேஸ்வரி ஆகியோர் இயக்குநர் சுந்தருடன் சென்...

குஷ்புவின் தலையீடு காரணமாக ரம்பாவுக்கு மு...துவத்தை லேசாக குறைத்து, மகேஸ்வரியை கூடுதலாக ...படுத்தி இருக்கிறார் சுந்தர். அதனால் கோபித்துக் கொ... திரும்பி வந்துவிட்டார் ரம்பா. இது செல்லக் கோபமா, ... கோபமா? எந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதுதான் தெரிய...

## சறுக்கல்

'மின்சாரக் கனவு'...தில் இடம்பெற்ற பாட... சூப்பர் ஹிட் பாடல் 'ஊ லல்லலா..' அந்த ...ெ... வைரமுத்துவுடம் ஏ.ஆர்.ரகுமான் கொடுத்தபோது, "... மெட்டு ஹிட்டாகாது. வேறு மெட்டுப் போடுங்க" என்ற... வைரமுத்து.

அந்த மெட்டுக்குத்தான் பாடல் வேண்டும் என... ரகுமானும், ராஜீவ்மேனனும் ஒற்றைக்காலில் நின்றார்கள். "நான் ஐயாயிரம் தமிழ் பாடல்கள் எழுதிவிட்டேன். என் அனுபவத்தில் சொல்கிறேன், இது ஹிட்டாகாது" என்று சொன்னாராம் வைரமுத்து. இப்போது பாடல் ஹிட். யானைக்கும் அடி சறுக்கும்.

## விருது கிடைக்கும்

'நேருக்கு நேர்' படத்தில் அசத்தியுள்ள குழந்தை நட்சத்திரம் ஜெனிஃபர், சூர்யாவுடன் சென்று திருவிழா கூட்டத்துக்குள் தவறும்போதும், உச்சக்கட்ட காட்சியிலும் கண்களை குளமாக்கு...கிறார். ஜெனிஃபருக்கு இந்த வருட சிறந்த குழந்தை நட்சத்திர விருது கிடைக்க வாய்ப்புண்டு. இன்னொரு ஷாமிலியாக கலக்கப்போகிறாள் ஜெனிஃபர்.



## காதலர் தினம்

'இந்தியன்' படத்தை தயாரித்த ஏ.எம். ரத்... அதைவிட பிரமாண்டமாக அடுத்துத் தயாரிக்... 'காதலர் தினம்'.

கமலுடன் தகராறு. ரஜினியும் அவர் தயாரிப்பி... அதனால்தான் புதுமுகம் குணாள் என்பவரை க... கதாநாயகியாக நடிப்பவர் இந்தி நடிகை சோனா... கதிர். இசை; ஏ.ஆர். ரகுமான், ஒளிப்பதிவு; பி.சி...



மணிவண்ணன்
படம்: ஜானகிராமன்

## காதோடு சொல்லுகிறோம்

இயக்குநரும், நடிகருமான அந்த 'கண்ணாடி போட்ட' நாயகர் சொந்தபட வேலையாக வெளிநாடு சென்றிருந்தார். உள்ளூரில் படப்பிடிப்பு என்றாலே அவருக்கு துணை கண்டிப்பாகத் தேவை. போனதோ வெளிநாடு. மூன்றெழுத்து 'மா' நடிகையை கணக்குப் பண்ணியிருக்கிறார். போன இடத்திலே எதற்கு தகராறு என்று 'மா'வும் ஒத்துழைத்தாராம். படப்பிடிப்புக்குழுவில் உள்ள ஒருவர் மூலம் ஒத்துழைத்தாராம். படப்பிடிப்புக் குழுவில் உள்ள ஒருவர் மூலம் 'சர' நடிகருக்கு தகவல் எட்டியது. 'அவனை என்ன பண்ணுகிறேன் பார்' என்று கறுவிக் கொண்டிருக்கிறார்.

இந்தியன் நாயகனின் படப்பிடிப்புக்களை நடத்தவிடாமல் செய்ய படைப்பாளிகள் பல திட்டங்களை தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். படைப்பாளிகள் வட்டாரத்தில் அவரை 'முத்த மன்னர்' 'அறிவுஜீவி' என்றெல்லாம் செல்லமாக பட்டம் சூட்டி அழைக்கிறார்களாம். முன்னர் அவருடன் நட்பாக இருந்த சில நடிகைகளும் படைப்பாளிகளுடன் சேர்ந்துகொண்டு அந்தரங்க விமர்சனங்கள் செய்கிறார்களாம். இதனை எல்லாம் அறிந்த 'நாயகன்' தனது அடுத்த படத்தை பிரமாண்டமாக்கி அவர்கள் முகத்தில் கரி பூசும் வேகத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

முன்னாள் உலக அழகி 'மிதா' 'நாக' நடிகருடன் நகமும் சதையுமாகிவிட்டார். அந்த நெருக்கம் படத்திலும் பளிச்சிடப்போகிறதாம். முத்தக் காட்சிகளிலும் கலக்கல் நடத்தியிருக்கிறார். இதனை அறிந்த உள்ளூர் நடிகைகள் பொரிந்து கொட்டுகிறார்கள். "கோடி கோடியா கொடுத்தால் இதுவும் பண்ணுவாங்க. இதுக்குமேலயும் பண்ணுவாங்க. எங்கள் பிழைப்பில் மண்ணும் போடுவாங்க" என்று புலம்புகிறார்கள்.

'ரம்ப' நடிகையின் தங்கை என்று சொல்லிக் கொண்டு புதுமுகம் ஒருத்தர் கோடம்பாக்கத்தை கிடுகிடுக்க வைத்துக் கொண்டிருக்கிறார். "அவர் எனக்கு சொந்தத் தங்கையும் அல்ல, வளர்ப்புத் தங்கையும் அல்ல" என்று அறிவிப்புச் செய்திருக்கிறார். 'ரம்ப' நடிகை.

## ரேகாவுக்கு டும் டும்

'கடலோரக் கவிதைகள்', 'புன்னகை மன்னன்' உட்பட பல படங்களில் நடித்தவர் ரேகா. சமீபத்தில் சத்தம் இல்லாமல் கல்யாணம் பண்ணிக்கொண்டார். பாரதிராஜாதான் ரேகாவின் குருநாதர். "மணமானபின்னர் அவரிடம் சென்று ஆசிபெற்றீர்களா?" என்று ஒரு நிருபர் கேட்டிருக்கிறார்.

"அடச்சே, அந்த ஆளாலேதான் என் கல்யாணமே தள்ளித் தள்ளிப் போச்சு. அவரைப் போய் யாராவது பார்ப்பாங்களா, ஆளை விடுங்க." என்று சொல்லியிருக்கிறார் ரேகா. குருநாதரால் ரொம்பவும் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பது தெரிகிறது.


படிப்பகம்

www.padippakam.com

...விஷயம் பெரிய நடிகரின் காதுக்குப் ...னது. 'ஜெய' நடிகரை தன் வீடு உள்ள ...ட்டத்துக்கு அழைத்தார் நடிகர். அழைப்பை ...று சென்ற 'ஜெய' நடிகருக்கு உபசாரம் ...மாக இருந்தது. பெரிய நடிகரின் குத்துக் ...ா வாங்கி திரையில் வில்லன்கள் விழுந்த ...சியை 'ஜெய' நடிகர் பார்த்திருக்கிறார். ...க்கே அந்த வில்லன்களின் கதி ஏற்படும் ...று எதிர்பார்க்கவில்லை.

...தன் கையால் 'உபசாரம்' செய்துவிட்டு ...ட்டத்தில் உள்ள மரம் ஒன்றில் 'ஜெய' ...கரை கட்டிவைத்துவிட்டார் நடிகர். நடி... ...் காவலர்கள் காவல் இருந்தனர். பின்னர் ...த நடிகை இருக்கும் பக்கமே பார்க்கக் ...து' என்ற நிபந்தனையுடன் கட்டை ...ழ்த்து அனுப்பிவிட்டனர்.

...பெரிய நடிகரின் கோபத்தை அந்த நடிகர் ...ாதித்துவிட்ட செய்தி அறிந்த தயாரிப் ...ாளர்கள் 'ஜெய' நடிகரை கதாநாயகனாக ...ந்தம் செய்வதைத் தவிர்த்தனர். அதனால் ...ப்பில்லாமல் தடுமாறிய 'ஜெய' நடிகர் ...னர் திரையிலும் வில்லனாக நடிக்கத் ...டங்கினார். இன்றுவரை ...த்துக் கொண்டிருக்கிறார்.

## சூர்யா—சிம்ரான் மறுபடியும்

'நேருக்கு நேர்' படத்தில் 'வருவாளா அவள் வருவாளா' என்ற பாடலில் சிம்ரானை நினைத்து உருகினார் சூர்யா. படத்தில் சூர்யா புதுமுகம் என்பதால் சிம்ரான்தான் பாடல் காட்சிகளில் கைவரிசை காட்டியிருந்தார்.

அடுத்து சூர்யா- சிம்ரான் இணைந்து நடிக்கும் படம் "சந்திப்போமா?"

இந்தப்படத்திலும் சூர்யா உருக ஒரு பாடல் இருக்கிறது. "ஞாபகமிருக்கிறதா, ஞாபகமிருக்கிறதா மழையில் நனைந்த ஓவியம் போல...." என்ற பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பாடல் வைரமுத்து. இசை: தேவா. இயக்கம்: எஸ்.டி. இந்திரகுமார்.

பிரகாஷ்ராஜ், ராதிகா, ஆகியோர் மற்றொரு ஜோடியாகவும், சரத்பாபும், அம்பிகா மூன்றாவது ஜோடியாகவும் நடிக்கின்றனர்.

முக்கிய வேடத்தில் மணிவண்ணன் நடிக்கிறார்.

## கல்யாணமாம் கச்சேரியாம்

பொலிஸ் அதிகாரி திலகவதியின் மகனான பிரபு திலக்குடன் நடிகை விசித்ராவுக்கு நிச்சயதார்த்தம் நடந்து விட்டது. இது முன்னர் வெளியான இரகசியத் தகவல். தகவல் தப்பு என்கின்றனர் விசித்ராவும், பிரபு திலக்கும்.

பிரபு திலக் என்ன சொல்கிறார் என்றால், "விசித்ராவுடன் எனக்கு காதலும் கிடையாது கத்தரிக்காயும் கிடையாது. எனது படம் ஒன்றில் நடித்தார் விசித்ரா. அந்தப்பட சம்பந்தமான கதை விவாதத் துக்காக ஹோட்டல் ஒன்றில் சந்தித்தோம். விசித்ரா தாயாருடன்தான் வந்தார்." என்கிறார்.

கதை விவாதத்துக்கு ஹோட்டலில் ரூம் போடுவது எதற்கு என்று சினிமா உலகில் உள்ள சின்னக் குழந்தையும் சொல்லும். கல்யாணத் தகவல் பொய்யாக இருக்கக் கூடும். கச்சேரியும் பொய்யா?

## நாவால் சுட்டது

அஜித்குமார் தொழிலாளர்களின் சங்கமான 'பெப்சி'க்கு கொடுத்த ஆதரவை விலக்கிக்கொண்டு படைப்பாளிகள் பக்கம் தாவியது தெரிந்ததே.

அப்படித் தாவியும் பல இயக்குநர்கள் அஜித்மீது படு கோபத்தில் உள்ளனர். 'நாவினால் சுட்டபுண் ஆறாது' என்கிறார்கள். இப்போது பாரதிராஜா சமரச முயற்சியில் இறங்கியிருக்கிறார். அஜித்குமாரை தங்கள் படங்களில் இருந்து தூக்கிய தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களுடன் அஜித்தை சமரசம் செய்து வைக்கிறாராம்.

"நாவை இனியாவது கட்டுப்படுத்தி வைத்திரு" என்றும் பாரதிராஜா 'அட்வைஸ்' பண்ணியிருக்கிறாராம்.

## கமல் வாங்கிய கோடிகள்

'மருதநாயகம்' படத்தை பிரமாண்டமாக தயாரிக்க பல கோடிகளை தண்ணீராய் கொட்டுகிறார் கமல். சென்னை எழும்பூரில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் மட்டும் மூன்று கோடி ரூபாய்கள் கடன் வாங்கியிருக்கிறார் என்றால் பாருங்களேன்.

இந்த விடயம் வெளியே தெரிந்ததும் குறிப்பிட்ட நிதி நிறுவனத்தில் பணம் கட்டியவர்கள் பிரார்த்தனை பண்ணத் தொடங்கிவிட்டார்கள்.

கமலின் படம் வெற்றி பெறவேண்டும் என்றுதான் பிரார்த்தனை. அப்படியானால்தானே கமல் பணத்தை திருப்பிக்கட்டுவார். அவர்கள் பணமும் திரும்பக் கிடைக்கும்.

## ...லுடன் எலிசபெத்

...ந்தியாவுக்கு விஜயம் செய்யும் ...பெத் ராணியின் கையால் 'மருத ...ம்' பட டிரெயிலரையும் வெளி ...செய்கிறார் கமல்.எலிசபெத் ராணி ...இந்திய விஜயத்தின் போது ஒரு ...ரையும் சந்திக்க விரும்பினாராம். ...நடிகரை சந்திக்கலாம் என்று ...சித்தபோது கமலின் பெயர் ...பாரிசு செய்யப்பட்டதாம்.

ராணி தன்னைச் சந்திக்கும் செய்தியைக் கேள்விப்பட்டதும் உணர்ச்சிவசப் பட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டாராம் கமல்.

## மக்கள் திலகம்

மக்கள் திலகம் என்றால் எம்.ஜி.ஆர் முகம் நினைவுக்கு வரும். இப்போது 'மக்கள் திலகம்' என்ற பெயரில் ஒரு படம் வரப்போகிறது. எம்.ஜி.ஆர். கதையோ என்று நினைக்க வேண்டாம். மலையாளத்தில் 'ஜனாதிபத்யம்' என்ற பெயரில் பெரு வெற்றி படம்தான் தமிழில் 'மக்கள் திலகம்' என்ற பெயரில் மொழிமாற்றப் படுகிறது. சுரேஸ்கோபி, ஊர்வசி, சாய்குமார் ராஜன் பி.தேவ், தேவன், கசன்கான் ஆகியோர் நடித்துள்ளனர். இயக்கம் கே.மது.

## ரோஜா பயிற்சி

'கடவுள்' படத்தில் மேக்-அப் இல்லாமல் நடித்து வருகிறார் ரோஜா. 'இன்டிபெண்டன்ஸ்டே' படத்தில் ஒட்டோ சாரதியாக நடிக்கிறார். இதற்காக பெண் ஒட்டோ சாரதிகள் சிலரிடம் பயிற்சி பெற்றாராம் ரோஜா.

'அரசியல்' படத்தில் மம்முட்டியின் தங்கையாக நடிக்கிறாராம் ரோஜா. 'மக்களாட்சி' படத்தில் மம்முட்டியின் ஜோடியாக நடித்தவருக்கு இப்போது தங்கை வேடம்.





வினிதா
படம்: விடிவெள்ளி

## சின்னக் கண் அழகி

முன்னர் சுகன்யாவை 'மூக்கழகி' என்று செல்லமாய் அழைப்பர். இப்போது அந்தப் பட்டம் இடம்மாறி இருக்கிறது. சின்னக் கண்ணழகி, மூக்கழகி என்றெல்லாம் அழைக்கப் படுகிறார் 'காதல் கோட்டை' புகழ் தேவயாணி. பட்டத்தில் ஒரே ஒரு திருத்தம். முந்திரி மூக்கழகி என்று அழைக்கிறார்கள்.

தமிழ்ப் படங்கள் மூலம் சம்பாதிக்கும் பணத்தில் கேரளாவில் சொத்து வாங்கிச் சேர்க்கிறார் முந்திரி மூக்கழகி. சம்பாத்தியம் தமிழில். சேர்த்துவைப்பது மலையாளத்தில். சமயோசிதம்தான்.

## அம்பிகாவுக்கு கெடு

நடிகை அம்பிகா அமெரிக்காவில் இருந்து பறந்து வந்து மறுபடி நடிக்கத் தொடங்கியது தெரிந்த சங்கதிதான். கணவர்தான் அனுமதி தந்து அனுப்பி வைத்தார் என்று கூறிக்கொண்டிருந்தார்.

முன்னைய நட்புகளை அம்பிகா புதுப்பித்து வேகமாக முன்னேறத் தொடங்கியதை கணவர் அறிந்து கொண்டாராம். அமெரிக்காவில் இருந்து போன் வந்துவிட்டதாம். "சினிமா ஆசையை மூட்டை கட்டி வைத்துவிட்டு அடுத்த பிளேனைப் பிடித்து வந்து சேர்" என்று உத்தரவாம். கட்டுப்படுவதா, இல்லையா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் அம்பிகா.

## உதவி

'ரட்சகன்' படத்தில் இயக்குநர் மனோபாலாவையும் நடிக்க அழைத்தார்கள். படப்பிடிப்புக்கு செல்லும் அவசரத்தில் சிகரெட்டை விட்டுப் போய் விட்டார். படப்பிடிப்பு முடிந்ததும் ஒரு 'தம்' அடிக்க தவியாய்த் தவித்தார். அவர் தவிப்பு அறிந்து கைகொடுத்தார் சுஷ்மிதா சென். முன்னாள் அழகுக் குமின் ஒரு செயின் ஸ்மோக்கி.

## மினி சினி

* மோகன்லாலை வைத்து சிவாஜி புரடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கத் திட்டமிட்டிருந்த மலையாளப்படம் தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. காரணம் மோகன்லால் முதலில் நடிக்க ஒப்புக்கொண்ட படங்கள் இன்னும் முடிவடையவில்லையாம்.

* 'இந்திரா' படத்தை இயக்கிய பின் கன்னடத்திலும், தமிழிலும் சில படங்களில் நடித்த சுஹாசினி, மலையாளப் படமொன்றில் நடிக்கப் போகிறார். சுரேஷ்கோபி கதாநாயகனாக நடிக்கும் இப்படத்திற்கு 'பாரதீயம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

* நடிகர் திலகம் நடித்த 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தில் அனல் தெறிக்கும் வசனங்களை எதியவர் சக்தி கிருஷ்ணசாமி. இவரது மகன் ஆனந்தகுமார் விரைவில் புதிய படமொன்றை இயக்கவுள்ளார்.

* 'சந்திப்போமா' என்ற படத்தில் அம்பிகா-ராதாவின் சகோதரர் விஷ்வா கதாநாயகனாக அறிமுகமாக இருந்தார். பின் இவருக்குப் பதிலாக அஜித்குமாரை ஒப்பந்தம் செய்தார்கள். தற்போது அஜித்தையும் நீக்கிவிட்டு சூர்யாவை நடிக்க வைக்கிறார்கள்.

* பாக்யராஜ் இப்போது தயாரித்து, இயக்கி நடித்து வரும் 'வேட்டிய மடிச்சுக்கட்டு' படத்தை அடுத்து 'ராகினி ரோஹினி சுப்ரமணி' என்ற படத்தை இயக்கி, நடிக்கவுள்ளார். இப்படத்தையும் இவரே தயாரிக்கிறார்.

* விஜயகுமாரின் இரண்டாவது மகள் பிரீதா விஜயகுமார் கதாநாயகியாக அறிமுகமான 'ருக்மணி கல்யாணம்' என்ற தெலுங்குப் படம் முடிவடைந்துவிட்டது. அண்மையில் இதன் சிறப்புக் காட்சியைக் கணவர் போனிகபூருடன் சென்னையில் பார்த்தார் ஸ்ரீதேவி.

* 'உனக்கும் எனக்கும் கல்யாணம்', 'ஆடி மாப்ளே' போன்ற படங்களில் கதாநாயகனாக ஒப்பந்தமாகியிருக்கும் லிவிங்ஸ்டன், 'சுந்தர புருஷன்' படம் மூலம் தன்னைக் கதாநாயகனாக அறிமுகப்படுத்திய சூப்பர் குட் ஃபிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரி தயாரிக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* விஜயகாந்தின் 125 வது படமான 'உளவுத்துறை' தீபாவளிக்கு வெளியாகவுள்ளது. மிகப் பிரமாண்டமாகத் தயாராகும் இந்தப்படத்தில் வசந்த் பெரியசாமி என்ற கடற்படை அதிகாரியாக நடிக்கிறார் விஜயகாந்த்.

## ராசி இல்லாத ஜோடி

நாசர் தேடி எடுத்து கொண்டுவந்த தேவதை கீர்த்தி ரெட்டி. 'தேவதை', 'நந்தினி' இரு படங்களிலும் அவருக்கு வினீத். இரண்டு படங்களும் வியாபார ரீதியில் தோல்வி.

அதனால் ராசியில்லை என்று நினைத்த கீர்த்தி ரெட்டி வினீத்துடன் நடிப்பதை தவிர்க்கத் தொடங்கியுள்ளார். புதிதாக ஒப்பந்தம் செய்யச் செல்பவர்களிடம் 'வினீத் ஜோடி இல்லைத்தானே?' என்று கேட்டு விட்டுத்தான் கையொப்பம் போடுகிறாராம்.

## பார்த்திபனின் சத்தியம்

பார்த்திபன் பக்கம் பக்கமாக பேட்டி கொடுத்து, தனக்கும் சங்கீதாவுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை என்றார்.

சில காலம் பார்த்திபன் நல்ல பிள்ளையாக ஒதுங்கி நிற்க, இராமராஜன் சங்கீதாவை விரட்டத் தொடங்கினார். இராமராஜனின் மனைவியான நடிகை நளினியும் பச்சைக் கொடி காட்டிவிட்டதாகச் செய்திகள் வந்தன.

பதறிப்போன பார்த்திபன் பல இலட்சம் செலவில் புதிய வீடு ஒன்றை சங்கீதாவுக்கு வாங்கிக் கொடுத்துள்ளார். அது மட்டுமல்லாமல் தனது மனைவி சீதா நடிக்க இருந்து 'ப்ரியமானவளே' படத்திலும் சங்கீதாவை கதாநாயகியாகப் போடுவதாகச் சத்தியம் செய்திருக்கிறாராம்.

## முகப்பில்

மீனா — பிரபு

## லொள்ளுக்கு? ஜொள்ளுக்கு?

'நேருக்கு நேர்' படத்தில் சூர்யாவும், சிம்ரானும் பேசிக்கொள்வது போல ஒரு காட்சி. திருவிளையாடல் படத்தில் சிவாஜி-நாகேஷ் பேசிப் பிரபலமான வசனப் பாணியில் அமைந்திருக்கிறது.

கல்யாணம் என்பது-
பிடிக்காதவர்களை சேர்த்துவைப்பது.
காதல் என்பது-
பிடித்தவர்களை பிரித்துவைப்பது.
பரவி இருப்பது- செல்லுலர் :போன்
பரவாமல் இருப்பது- மத இற்றுமை
அடுக்கு மொழிக்கு- கலைஞர்
துடுக்கு மொழிக்கு- சோ
அழகுக்கு- அரவிந்தசாமி
ஆர்ப்பாட்டத்திற்கு- சுப்பிரமணியசாமி
கவிதைக்கு- வைரமுத்து
காட்சிக்கு- பி.சி. ஸ்ரீராம்
போர் பந்தருக்கு- மகாத்மா
போயஸ்கார்டனுக்கு- ரஜினி
நேற்று- குஷ்பு
இன்று- ரம்பா
நாளை- ஐஸ்வர்யா ராய்
இசைக்கு- ஏ.ஆர். ரகுமான்
உதைக்கு- கவுண்டமணி, செந்தில்
நடிப்புக்கு- சிவாஜி
நடனத்திற்கு- பிரபுதேவா
பாட்டுக்கு- எஸ்.பி.பி.
இளமைக்கு- கஜோல்
லொள்ளுக்கு- நீ
ஜொள்ளுக்கு- நான்.

...ட்டார்.
...ாட்டுள்ளார்.
...; காதல் தேசம் புகழ்
...ம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

* குழந்தைகளை அவ்வப்போது அடித்து உதைத்தால்தான் சிறப்பாக வளரும் என்பது தவறு. சின்னச் சின்ன அதட்டல், உருட்டல்தான் குழந்தைகளை நன்கு வளர்க்கும்.
* குழந்தைக்குப் பசும்பால் கொடுக்கும் போது முதலில் சரிக்குச் சரியாக பாலில் தண்ணீர் கலந்து கொடுக்க வேண்டும். பிறகு போகப்போகத் தண்ணீரின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம்.
* 15 நாட்களுக்கு ஒரு முறை கொளுந்து வேப்பிலையை அரைத்துக் குழந்தைகளுக்கு 2 தேக்கரண்டி வெறும் வயிற்றில் கொடுத்தால், உடலை எந்தக் கொடிய நோயும் அண்டாது.

(கொடுத்து ஏப்பம் விடச் செய்ய வேண்டும்.)

* குழந்தைகளுக்குச் சுகாதார முறைகளைக் கற்றுக் கொடுப்பதும், குழந்தையைச் சுத்தமாக வைத்திருப்பதும் ஒரு தாயின் இன்றியமையாத பொறுப்பு.
* பால் கொடுத்தவுடன் குழந்தையைக் குளிப்பாட்டக்கூடாது.

# குழந்தைகளைக் கவனியுங்கள்!



* ஒரு வயது நிரம்பாத குழந்தைக்கு இருமல் சிரப் மருந்து கொடுக்கக்கூடாது. இது குழந்தைக்குத் தூக்கத்தை ஏற்படுத்திவிடும்.
* அடிக்கடி குழந்தைக்கு முத்தம் கொடுத்தால் நோய்த் தாக்கம் ஏற்படும். குறிப்பாக உதட்டில் முத்தம் கூடவே கூடாது.
* குழந்தைக்கு அடிக்கடி விக்கல் வருவது சாதாரண விஷயம். இதற்குக் கவலைப்படத் தேவையில்லை.
* குழந்தை பால் குடித்தவுடன் தோளில் சாய்த்துப் போட்டு முதுகைத் தடவிக் கொடுத்து ஏப்பம் விடச் செய்ய வேண்டும்.
* குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுக்கும்போது இடையிடையே வேறு வேலைகளை நீங்கள் செய்யக்கூடாது. தொடர்ந்து பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். அதுதான் சரியான முறை.
* சிறு குழந்தைகளுக்குக் கதை சொல்வதால் அதன் மூளை நல்ல வளர்ச்சியும், தெளிவும் பெறுகிறது என்று புதிய ஆய்வு கூறுகின்றது. ■

## லேடீஸ் ஸ்பெஷல்

# பாப்பா நடை

உடற்பயிற்சி என்பது வளரும் ஒவ்வொரு குழந்தைக்கும் அவசியம். ஆனால் குழந்தைகளை உடற்பயிற்சி செய்ய வைப்பது என்பது கஷ்டமான காரியம். எனவே நடத்தல் விளையாடுதல் என்கின்ற இரண்டு காரியங்களை குழந்தைகள் அதிகமாக... தன்னிச்சையாக செய்ய விட்டுவிட வேண்டும்.



நடந்து செல்வது என்பது ஒரு நல்ல ஆரோக்கியமான விஷயம். இதன் மூலம் கால்கள் பலம் அடைகின்றன என்பது மட்டு மல்லாமல் உடலும், இருதயமும் புதுப் பொலிவும் பெறுகின்றன. மூளை சுறுசுறுப் படைகின்றது. உடலில் உள்ள வியர்வை வெளியேறி புது உற்சாகம் பிறக்கின்றது.

நீங்கள் அதிகாலையில் எங்கும் வெளியே செல்பவரானால், கூடவே குழந்தையையும் அழைத்துச் செல்லுங்கள். இது தவிர பகல் வேளைகளிலும், மாலை வேளைகளிலும் வெளியில் செல்லும்போது குழந்தைகளை நடத்தி அழைத்துச் செல்லுங்கள். பாடசாலைக்கும் அப்படித்தான். நடை பயிலப் பயில குழந்தைக்கு ஆரோக்கியம் அதிகமாகிறது.

தொலைதூரம் நடந்து சென்று திரும்பி வந்தால் குழந்தைக்கு முதலில் குடிப்பதற்கு ஏதாவது கொடுங்கள். அது பழச்சாறு, தண்ணீர் என்று எதுவாகவும் இருக்கலாம். பின் னரே உணவு ஊட்டுங்கள்.

நடந்து செல்லும்போது சாதாரண இரப்பர் செருப்புக்களை அணிவியுங்கள்.

இப்படி நடந்து செல்லும் பயிற்சியால் குழந்தையின் இரத்த ஓட்டம் சீர்படுகிறது; இதயம் நன்றாக இயங்குகிறது.

அதற்காகக் குழந்தைகளை தொலை தூரம் நடத்திச் செல்லாதீர்கள். பாவம் களைத்துச் சலித்துவிடும். எனவே தினசரி ஒரு குறிப்பிட்ட தொலைவைக் கணக்கில் கொள்ளுங்கள்-போதும்.

காற்றோட்டமான பகுதியில் நடந்து செல்வது இன்னும் நல்லது. ■


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CN

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-10-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

புவனா

குதிரை ஏற்றப் பயிற்சியாளர் ஜேம்ஸ் ஹெவிட்டும் டயானாவும் நெருங்கிப் பழகத் தொடங்கினார்கள்.

ஆனாலும் ஹெவிட்டுடனான தொடர்பை ஒரு கட்டத்தின்மேல் அனுமதிக்காமல் இருந்தார் டயானா.

ஒருநாள் டயானாவின் அறையில் சாள்ஸ் தனது கோட்டை கழற்றி வைத்துவிட்டுச் சென்றிருந்தார். கோட் பொக்கற்றுக்குள் ஏதோ ஒன்று துருத்திக் கொண்டிருந்தது.

டயானா சென்று அதனை வெளியே இழுத்துப்பார்த்தார்.

அது பெண்கள் அணியும் உள்ளாடை!

சில ஆண்களுக்கு பெண்கள் அணியும் உள்ளாடைகளை தாங்கள் அணிந்து பார்க்கும் ஒருவகையான மனோ வியாதி இருப்பதுண்டு.

தங்கள் காதலிகளின் உள்ளாடைகளை ஞாபகார்த்தமாக எடுத்து வைத்திருக்கும் வியாதியும் இருக்கிறது.

இளவரசர் சாள்ஸ் அப்படியொரு காரியத்தை செய்கிறார் என்பது டயானாவுக்கு பெருத்த அதிர்ச்சியாக இருந்தது.

சாள்ஸ்சின் மீது டயானாவுக்கு மிகுந்த வெறுப்பை ஏற்படுத்தவும் அது காரணமாகிவிட்டது.

அந்த அதிர்ச்சியை ஜீரணிப்பதற்கு டயானாவுக்கு நீண்ட நாட்கள் தேவைப்பட்டது. இனிமேல் கமீலாவிடம் இருந்து சாள்ஸை பிரிப்பதும் முடியாத காரியம் என்று முடிவு கட்டிவிட்டார் டயானா.

## ஹெவிட் வீசிய வலை

ஜேம்ஸ் ஹெவிட்டை சந்தித்த டயானா "இனிமேல் அந்த நரகத்தில் என்னால் வாழமுடியாது" என்று சொல்லி அழுதிருக்கிறார்.

அன்று டயானா மிகவும் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார். ஹெவிட்டின் தோளில் சாய்ந்து ஒரு குழந்தை மாதிரி விம்மி விம்மி அழுதிருக்கிறார்.

ஜேம்ஸ் ஹெவிட்டை டயானா அப்போது ஆழமாக நேசிக்கத் தொடங்கியிருந்தார்.

ஆனால், ஹெவிட்டோ டயானாவிடம் சுகம் கண்டுவிட்டு, அந்த அனுபவங்களை கூறியே பிரபலமாக வேண்டும் என்ற கள்ள எண்ணத்தை மனதில் வைத்திருந்தார்.

டயானாவுக்கு ஆறுதலாக ஹெவிட்டின் கரங்கள் முதுகை வருடிக் கொடுத்தன. டயானா அடைக்கலம் தேடும் பறவையானார்.

ஹெவிட் சந்தர்ப்பத்தை தவற விடவில்லை. டயானாவை தன் நோக்கத்துக்கு இணக்கப்படுத்தினார்.

டயானாவால் ஹெவிட்டை நிராகரிக்க இயலவில்லை. டயானாவுக்கும் அந்த சுகம் தேவையாகவே இருந்தது.

இந்த உலகத்தைவிட்டு வேறொரு உலகத்துக்குள் புகுந்து கொள்ளத் துடிப்பவர் போல டயானா அன்று தவித்துப்போனார் என்று ஹெவிட் அதை நினைவு கூருகிறார்.

ஆனாலும் டயானாவுக்கு அந்த அனுபவம் புதுமையாகவே இருந்தது. அதன் பின்னர் ஹெவிட்டுடன் அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொண்டார்.

## போர்முனைக்கு கடிதங்கள்

வளைகுடா யுத்த காலகட்டத்தில் அமெரிக்காவுடன் பிரிட்டனும் ஈராக்குக்கு எதிரான சண்டையில் குதித்தது.

ஜேம்ஸ் ஹெவிட்டும் யுத்த முனைக்குச் சென்றார். பல நாட்களாக ஹெவிட்டைப் பிரிந்திருந்த டயானா, போர் முனைக்கு கடிதங்களை எழுதினார்.

காதல் ரசம் சொட்டும் அக் கடிதங்களில் தன் உணர்வுகளையெல்லாம் கொட்டித் தீர்த்தார் டயானா.

5

போரும், அந்தப் போரில் ஈடுபட்டு பலியான மனித உயிர்களும் பற்றிக் கூட டயானா கவலைப்பட



# ஹெவிட் பிடியில் இளவரசி

வில்லை.

போர் முனையில் இருந்து தன் காதலரான ஹெவிட் பத்திரமாக திரும்பி வர வேண்டும் என்பதே டயானாவின் புலம்பலாக இருந்தது.

"எப்போது திரும்பி வருகிறீர்கள் டியர்? உங்களுக்காக, உங்களுக்கேயாக இங்கு ஒருத்தி காத்திருக்கிறேன்.

தனிமை எத்தனை பயங்கரமானது. அதிலும் உங்களைப் போன்ற உன்னதமான ஒருவரை பிரிந்திருப்பது எத்தனை கொடுமையான அனுபவம்.

நேரிலே தரமுடியாத முத்தங்களை இக் கடிதம் மூலமாக அனுப்பிவைக்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் விரைவில் வரவேண்டும். ஒவ்வொரு நொடியும் உங்களுக்காக காத்திருக்கிறேன்"

என்றெல்லாம் டயானா கடிதங்களில் உருகியிருந்தார்.

பிரிட்டிஷ் இளவரசி என்ற முறையில், போர்முனையில் இருந்த பிரிட்டிஷ்போர் வீரர்களின் நலன் பற்றி விசாரிக்கக் கூடத் தோன்றாதளவுக்கு, டயானாவின் இதயம் முழுக்க ஹெவிட் நிறைந்திருந்தார்.

டயானா எழுதிய கடிதங்களை ஹெவிட் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார்.

டயானாவுக்கு அவை காதல் கடிதங்கள். ஹெவிட்டுக்கு அவை தங்க முட்டையிடும் வாத்துக்கள்.

அந்தக் கடிதங்களை பின்னர் விலைபேசி விற்று பல இலட்சம் ரூபாய்களை சம்பாதித்தார் ஹெவிட்.





ஹெவிட்டின் ஆக்கிரமிப்புக்கும், ஆலிங்கனத்துக்கும் டயானா ஆட்பட்டார். ஹெவிட் வீசிய வலையில் டயானா வசமாக வீழ்ந்து போனார்.

டயானாவுக்கும், தனக்கும் இடையிலான அந்தரங்கங்கள் பற்றி ஜேம்ஸ் ஹெவிட் எழுதிய புத்தகம் மூலம் பல கோடி ரூபாய்கள் அவர் கையில் சேர்ந்தன.

ஹெவிட் தனக்கு செய்த துரோகத்தால் நிலைகுலைந்து போனார் டயானா.

டயானாவுக்கும் தனக்கும் இருந்த தொடர்புகளையும், உறவுகளையும் விலாவாரியாக விபரித்தார் ஹெவிட்.

ஹெவிட் சொல்வது உண்மையா? என்பதில் பலருக்கு சந்தேகம் இருந்தது.

ஆனால் டயானா அதனை மறைக்க விரும்பவில்லை.

பி.பி.சி. தொலைக்காட்சிக்கு 1995ல் அளித்த பேட்டியில் உண்மையை ஒளிக்காமல் சொன்னார் டயானா.

"அவரை நான் ஆழமாக நேசித்தேன். நம்பினேன். ஏமாற்றிவிட்டார். என் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டார்" என்று சொன்னபோது, பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்தக் கஷ்டப்பட்டார் டயானா.

டயானாவுக்கும் ஹெவிட்டுக்கும் இடையே இருந்த நெருக்கத்தை சாள்ஸ் ஆரம்பத்திலேயே அறிந்து வைத்திருந்தார். மகாராணிக்கும் அரசல் புரசலாகத் தெரிந்திருந்தது.

பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனாலும் டயானா தன் வாயாலேயே ஒப்புக் கொண்டதை பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரால் ஜீரணிக்க முடியவில்லை.

அதன் பின்னர்தான் டயானாவை சாள்ஸ் விவாகரத்து செய்வது தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தனர்.

> "அவரை நான் ஆழமாக காதலித்தேன். மிக நம்பிக்கை வைத்திருந்தேன். என்னை ஏமாற்றிவிட்டார்."
> –பி.பி.சி.க்கு டயானா–

தனக்கும் ஹெவிட்டுக்கும் இடையிலான உறவை டயானா ஒப்புக் கொண்டதுகூட பிரிட்டிஷ் அரச குடும்பத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கி விவாகரத்து பெறுவதற்காகத்தான்.

டயானாவை சாள்ஸ் விவாகரத்துச் செய்தால், சாள்ஸ் மன்னராக முடி சூட்டிக் கொள்ள சட்டச் சிக்கல்கள் எழக்கூடும் என்று நினைத்தது மகாராணி குடும்பம்.

அதனால் டயானா தன் சட்டத்தரணிகள் மூலம் விவாகரத்து கோரியபோது சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடித்தனர்.

பொறுத்துப் பார்த்தார் டயானா. பி.பி.சி.க்கு பேட்டி கொடுக்க முன்வந்தார். தன் விவாகரத்துக்கு மகாராணியை சம்மதிக்க வைக்கும் கடைசி அஸ்திரத்தை ஏவினார்.

அஸ்திரம் தன் வேலையைச் செய்தது. "இனிமேலும் டயானாவை என் மருமகள் என்று எப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது. அரச குடும்ப மானம் கப்பலேறிவிட்டது. உடனே விவாகரத்துக்கான ஏற்பாடுகளை செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார் மாமியாரான மகாராணி.

## சாள்ஸ் பயணம்

சாள்ஸ்–டயானா விவாகரத்துக்கு முன்பாக மேலும் பல திருப்பமான சம்பவங்கள் நடந்தன.

இளவரசர் சாள்ஸ் ஒருமுறை இத்தாலி நாட்டுக்கு விஜயம் செய்தார்.

இத்தாலி நாட்டு பணக்காரப் பெண் ஒருவர் மீது சாள்ஸுக்கு ஒரு கண் என்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

அந்தப் பெண்ணைப் பார்க்கத்தான் சாள்ஸ் சென்றிருக்கிறார் என்று ஊகங்கள் கூறப்பட்டன.

ஆனால் சாள்ஸ் கண் வைத்திருந்தது அந்த இளம் பெண்மீதல்ல.

பின்னர் யாரிடம் சென்றார்?

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கண்டி வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**திருமதி பானு பார்த்திபன்**
14/121 4ஆவது மாவத்தை, அருப்பொலை கண்டி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## இருக்கமாகும் இரவு

நிலவின் வெளிச்சத்தில் விரிந்த விழிகளுள்
கலக்கம் குடி கொள்ளும்.
தொண்டைக் குழிக்குள் நெருப்புத் துண்டங்கள்
மெது மெதுவாய் இறங்கும்.
**
சப்பாத்துக் கால்களில் சரசரத்துச் சருகுகள்,
மௌனிக்கும்!
இடியோசை வீட்டின் உள் இருப்பவர்
இதயத்திற்குள் கேட்கும்!
மண்ணெண்ணெய் இல்லா சிம்னி விளக்கு
எம் மனம் போல பக் பக் என்று
நின்று பின் எரியும்!
**
விழிக்குள் நீர் விழுவதா விடுவதா
என்று தடுமாறும்.
விறாந்தையில் சுவர் ஓரம் ஜிம்மி மெதுவாய்
எழுந்து குரைக்கும்!
**
வயதுக்கு வந்தவர்கள் வீட்டில்
பெற்றவர்களின் வயிறு எரியும்!
வளைந்து போகும் பாதைகள் அந்த இரவில்
நீண்டு செல்லும்.
**
கிளுவை வேலியின் கிளைகள்
சடசடத்து வாய்மூடும்.
பாதையில் பரபரப்பு- வீட்டுக்குள்
பதை பதைப்பு.
**
குழந்தைகளின் விழிகளிலும் ஏக்கத்தின்
பிரதிபலிப்பு.
என்றோ ஒரு நாள் கலக்க மில்லா
விழிகளோடு
நிலவை இரசித்த காட்சி கண்ணுக்குள்
வந்து போக
விடியலுக்காய் விழித்திருக்கும்
இந்த இரவு இறுக்கமானது.
**

ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு-13.

## காதலா கனவா?

அன்றொருநாள் தனிமையிலே
நானிருந்தேன்....!
என் நெஞ்சினிலே உள்ளவளை
நினைத்திருந்தேன்....!
அந்தி பட்டுப் போகின்ற
அந்த நேரம்
அடிவானம் சிவந்திருக்கும்
அழகுக் கோலம்
தென்றலிலே செடி கொடிகள்
தாளம் போட
ஜில் என்ற குளிர்காற்று
உடலைத் தழுவ
குமரியவள் குனிந்தபடி
நடந்து வந்தாள்!
எனைப் பார்த்து செவ்விதழால்
புன்னகைத்தாள்!
அவள் சங்கு நிறப் பல்லழகு
மின்னியது;
மான் விழியாள் தேன் தமிழால்
வணக்கம் என்றாள்.
கொடி போன்ற இடை அசைய
அருகமர்ந்தாள்!
தேவியவள் வேலான மூக்கு
என் மேல் வாளாகக் குத்தியது.
அவள் பிறை போன்ற நெற்றியிலே
உள்ள பொட்டு
விளையாடத் துள்ளியது,
என் உடலில் பட்டு.
அந்தக் கோலமயில் கூந்தலை நான்
கோதிவிட்டேன்!
இனியவளின் செவ்விதழில்
முத்தமிட்டேன்!
நாணத்தால் தலை கவிழ்ந்தாள்;
அவள் சிரித்தாள்.
குளிர் நிலவே வா வென்று
அரவணைத்தேன்!
அவள் மலர் மேடை மடியினிலே
முகம் புதைத்தேன்;
கண் மூடி நான் மடியில்
உறங்கையிலே
என் கன்னத்தில் கைவிரலால்
கிள்ளிவிட்டாள்.
அவள் கார் கூந்தல் என் உடலை
மூடியது;
என் கைவிரல்கள் அவள் உடலை
நாடியது.
பூ மகளின் பெயர் என்ன
என்று கேட்டேன்!
அத்தானே! என் பெயரா?
அழகு தமிழ்! என்றாள்!
'செல்' விழுந்த சத்தத்தில் கண் விழித்தேன்!
நான் கண்டது கனவென்று
புரிந்துகொண்டேன்!
அம்மா "மகனே விழுகிறது செல்!" என்றாள்
"நில்லாதே செல்!" என்றாள்.

பூவா. மதுரநாயகம்-கருவாக்குசிகுடி.

## முடிவுரைக்கு முன் முதலுதவி செய்!

நிலாக்காலப் பின்னிரவில்
நாணலில் ஒளிந்துகொண்ட
பனித்துளிகளையும்
சூடேற்றுகிறது-என்
சுவாசம்!
***
குருதியணுக்களாய்
உயிர் முழுக்க உனை
உறைய வைத்துக்கொண்டு
சப்தமின்றி
முகாரி பாடுகிறது
என்னிதயம்!
***
வார்த்தைகளிடம்-உன்
மௌனம்
வெற்றி பெறும்
ஒவ்வொரு
நிமிஷத்திலும்,- நான்
வாழ்க்கையிடம்
தோற்றுக்கொண்டிருக்கிறேன்!
***
என்னைக் காப்பாற்று!
கத்தியின்றி,
இரத்தமின்றி என்னை
காயப்படுத்திய அதே
பார்வைகளில்
நேச மருந்திட்டு
முதலுதவி செய்!
***
தூதனுப்ப
உன்னிடம்
தோழியில்லாவிடின்-ஒரு
வேலியோரத்து
ஓணானிடமாவது-உன்
காதலை
ஓதியனுப்பு!
***
உன் செய்தி கொண்டுவரும்
எதற்காகவும்-என்
ஜன்னலின் சிறகுகள்
எப்பொழுதும்
விரிந்தேயிருக்கும்!
***
கண்ணே காதலி!!
நினைவில் வைத்திரு!
உன் அன்பின்
அடைப்புக்குறிக்குள்
நான்
அகப்படாமல் போனாலும்...
என் சுவாசத்தை என்றும்
நீயொருத்தி மட்டும்தான்
இயக்கிக் கொண்டிருப்பாய்!
***
கார் காலத்தில் மட்டும்
நீர் சுமக்கும்
மேகம் போலில்லாமல்,
எக்காலமும்
கங்காருவைப்போல்
உன் நினைவுகளை
ஏந்தித்திரிவேன்!
***

பர்ஸான்-யடவத்த, நிககொள்ள.

## தேன் கிண்ணம்

### கல்லறை வாசகங்கள்

**தாய்**
இதுவரை
மக்களை வளர்த்தாள்!
இங்கே...
மண்ணை வளர்க்கிறாள்!

**நடிகன்**
இது
இவனின்
இறுதிப்படம்!

**கவர்ச்சி நடிகை**
அரை நிர்வாணமாக..
ஆடியவள்!
இனி
மண்ணுக்குள்
முழு நிர்வாணம்!

**அரசியல் வாதி**
உஷ்...!
இங்கெவரும்
உண்மைப் பேசாதீர்!

சோ.ஸ்ரீதரன்-, பொகவந்தலாவ.

## கொஞ்சம் வாழவிடு!

உன்னை
நீயே வெறுத்துக்
கொண்டிருக்கிறாய்!
நானிங்கு
வெந்து கொண்டிருக்கிறேன்!
-0-
அன்பை
உள்ளொழித்து
போலிக் கசப்பை
கசியவிட்ட
உண்மைக் காதல்
அறியாது
கசக்கி விட்டேன்
தூய காதலை-
வெறும்
ஆணவ நடிப்பு
என்றெண்ணி!
-0-
அறியாது
நான் செய்த
"பெண் பாவம் (?)"
ஆயுள் முழுக்க
நோக வைத்த
சோகம்!
-0-
நாவினால்
நான் சுட்ட
உன் உள்ளத்துக்
காயங்களுக்கு
மருந்திடத் தெரியாது
நீயும்
அவதிப்படுகிறாய்.
-0-
உன்
உணர்வுச் சிறகுகளை
ஒடித்திட்ட
ஞாபகம் வந்து
உள்ளத்தில்
வேலாய்க் குத்துகிறது;
இருந்தும்....
-0-
பாவத்துக்குக் கிடைத்த
சோகம் நீங்க
உன் சுமைகளை இறக்கி
சோகங்களைக்
களைந்து,
இறந்த காலத்துக்கு
விடைகொடு!
-0-
வெறுப்புகளை நீக்கி
ஒளிமய
எதிர்காலத்துக்கு
வழிவிடு;
என்னையும் கொஞ்சம்
வாழவிடு!

தம்பி தவம்-காரைதீவு-12.



இளவரசர் சால்ஸ்சின் ஆல்பத்திலிருந்து உருவப்பட்ட படங்கள் இவை. எல்லாமே சால்ஸ்தான்.





## அந்த நாள் ஞாபகம்





## இந்த வாரம் உங்கள் பலன்

(19.10.1997 தொடக்கம் 25.10.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன். |
| விருட்சிகம் | - செவ்வாய், வெள்ளி. |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், மனக் கிலேசம். | பகல் 11 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |
| புதன்- பலவித நன்மை, மனத்துயர் நீங்கும். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, அந்நியர் பகை. | பகல் 11 மணி |
| சனி- வீண் முயற்சி, பலவித பேறு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், ஆடம்பர வாழ்வு. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| புதன்- கடன் தொல்லை நீங்கும், சுகவாழ்வு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் கலக்கம், மனக் குரோதம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பெரியோர் பகை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, கடன் தொல்லை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், தேகசுக நன்மை. | பகல் 11 மணி |
| வெள்ளி- மனக் கிலேசம், பிள்ளைகளால் பிரச்சனை. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பி.ப. 3 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, இனசன விரோதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- குடும்பக் கலகம், மனக் குழப்பம். | மு.ப. 10 மணி |
| புதன்- வீண் விரோதம், அந்நியர் பகை. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பிரயாண மிகுதி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், கௌரவக் கேடு. | பகல் 11 மணி |
| சனி- செலவு மிகுதி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனக் கிலேசம். | பகல் 11 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- இனசன நன்மை, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, பெரியோர் நட்பு. | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- கௌரவ மிகுதி, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனக் கிலேசம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன் - தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- காரியத் தடை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கடன்தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த எண்ணம், தேகசுக நன்மை. | மு.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், இனசனக் குரோதம். | பி.ப. 2 மணி |
| சனி- குடும்ப சுகம், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வீண் விரோதம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், மனப் பயம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பண முடங்கல். | பகல் 11 மணி |
| சனி- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 11 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| புதன்- இனசன நன்மை, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- கடன் சுமை, கௌரவக் கேடு. | பகல் 11 மணி |
| சனி- வீண் குழப்பம், தொழில் மந்தம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினரால் தொல்லை. | பகல் 12 மணி |
| திங்கள்- கௌரவ மிகுதி, காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, அதிகார விருத்தி. | மு.ப. 9 மணி |
| புதன்- வீண் குழப்பம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி வெற்றி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், காரிய நன்மை. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், மனக் குழப்பம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் நன்மை, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, பண நஷ்டம். | பகல் 11 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியக் கேடு. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் நட்பு, ஆடம்பர வாழ்வு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

www.padippakam.com





மனிதரில் ஆயிரம் ஜாதி-என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை;
கனி தரும் மாமரம் ஒன்று-அதில்
காய்களும் பிஞ்சும் கனிகளும்
-உண்டு.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# முகிலனின் முயற்சி

சுந்தரபுரம் என்ற நாட்டை சுந்தரராஜன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். சுந்தர ராஜனுக்கு அறிவும், தன்னம்பிக்கையும், முயற்சியும் உள்ள அந்தரங்கக் காரியதரிசி ஒருவன் தேவைப்பட்டான்.

உடனே, முரசுகொட்டி நாட்டு மக்களுக்கு இதனை அறிவித்தான். பல இளைஞர்கள் இந்த அறிவிப்பைக் கேட்டு அரண்மனைக்கு வந்தனர். மன்னன் சுந்தரராஜன் அவர்களை அழைத்துச் சென்று, பிரமாண்டமான அறையின் முன்னே கூடச் செய்தான்.

அவர்களுக்கு அந்த அறையின் கதவைக் காட்டி,

"இளைஞர்களே! இந்த அறையை என்னுடைய முன்னோர்கள் பயன்படுத்தி வந்தார்கள். எனது தந்தையும் இதைப் பயன்படுத்தி வந்தார். எனது தந்தைக்குப் பிறகு இந்த அறையை நான் நெடுங் காலமாகவே பயன்படுத்தாமல் விட்டு விட்டேன். இப்போது பயன்படுத்த விரும்புகிறேன்.

இந்தக் கதவு இருக்கிறதே- இது மிகவும் பலமான இரும்புக் கதவு. நீண்ட காலமாக இந்த அறையை நான் பயன் படுத்தாமல் விட்டதால், இந்த இரும்புக் கதவு வசமாக அப்படியே இறுக மூடிக் கொண்டுவிட்டது. நானும் இதைத் திறக்க செய்யாத முயற்சிகள் இல்லை. எல்லா முயற்சிகளிலும் தோல்விதான். உங்களில் யார் இந்தக் கதவைத் திறக்கிறார்களோ அவர்களுக்கு எனது அந்தரங்கக் காரியதரிசி பதவி தரப்படும்!" என்று சொன்னான்.

கூடியிருந்த அத்தனை பேரும் அந்தக் கதவைப்பார்த்து மலைத்துப் போய் விட்டனர்.

"இவ்வளவு பெரிய கதவை நான் இதுவரை கண்டதேயில்லை," என்றான் ஒருவன்.

"இதைத் திறக்க நான்கு யானைகளாவது வேண்டும்!" என்றான் வேறொருவன்.

"அரசரே! பலவழிகளில் முயற்சித்தும் திறக்காத கதவை நாம் எப்படித் திறப்பது?" என்றான் ஒருவன்.

இப்படி ஆளாளுக்கு ஒவ்வொருவரும் தங்கள் மனதில் தோன்றியதைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் கதவின் அருகில் சென்று மேலும், கீழும் பார்த்துவிட்டு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் உதட்டைப் பிதுக்கிவிட்டுத் திரும்பினர்.

இதுவரை ஒன்றுமே பேசாமல் இருந்த முகிலன் என்பவன், கதவின் அருகே சென்றான். கதவை மேலும் கீழும் பார்த்துவிட்டு, 'மன்னனின் முன்னோர்கள் சாதாரணமாகத் திறந்து மூடியிருக்கிறார்கள். இப்போது பாவிக்காமல் விட்டிருக்கிறார்கள். கொஞ்சம் பலமாகத் தள்ளிப் பார்ப்போம்!' என்று நினைத்தபடி கதவைத் தள்ளினான்.

என்ன ஆச்சரியம்? கதவு திறந்து கொண்டது. சுற்றிலும் நின்றவர்கள் இதைப் பார்த்து அதிசயித்தார்கள். இவனால் இது எப்படி முடிந்தது, என்று ஆச்சரியப்பட்டார்கள்.

மன்னன் சுந்தரராஜன் மற்றவர்களைப் பார்த்து,

"இது நீங்கள் நினைப்பது போல் இரும்புக்கதவு அல்ல. மரத்தால் செய்யப் பட்ட கதவுதான். இதைத் திறக்க முடியாது என்று நான் சொன்னதால், நீங்கள் எல்லோரும் பின்வாங்கி விட்டீர்கள். யாரும் தன்னம்பிக்கை இல்லாததால் முயற்சித்துப் பார்க்கவில்லை.

இதோ இந்த வாலிபன் மட்டும் மனவலிமையும், முயற்சியும் கொண்டு கதவை எளிதில் திறந்தான். இவன் வெற்றி பெற்று விட்டான். இவனுக்கே எனது அந்தரங்கக் காரியதரிசி பதவியை அளிக்கிறேன்," என்றான்.



தனது முயற்சிக்குத் தகுந்த பலன் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான் முகிலன்.

# அதிசயம்-ஆனால் உண்மை!



**வாலில்லா டென்ரிக்:**
பாலூட்டி மிருகங்களில் மிக அதிகமாகப் பிள்ளை பெறுவது இப்பிராணிதான். இது ஒவ்வொரு முறையும் 32 குட்டிகள் போடும்.

**மெழுகுவர்த்திப் பூ:**
மத்திய அவுஸ்திரேலியாவிலுள்ள இச் செடியில் ஏழாண்டுகளுக்கு ஒரு முறை மெழுகுவர்த்திகளைப் போன்ற பூக்கள் மலரும்.







**நட்சத்திர மணற் குன்றுகள்**
சஹாரா பாலைவனத்தில எதிரிடையான காற்றுக்களால் மணற் குன்றுகள் நட்சத்திர வடிவங்களாகக் காணப்படும்.

**பனி வேலி:**
அடிக்கடி பனிக்காற்று அடிப்பதால் இமயமலைப் பகுதியில் இருக்கும் வயல்களைச் சுற்றி 10 அடி உயரத்துக்கு கூர்முனை கொண்ட பனிக்கட்டி வேலிகள் எழும்புவதுண்டு.

# வாரம் ஒரு நாடு

## :.பிஜி

தலை நகர் - சுவா
பரப்பு - 18,376 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - 8 இலட்சம்
மொழி - ஆங்கிலம், ஃபிஜியன், இந்தி
எழுத்தறிவு - 85%
சமயம் - கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம்
நாணயம் - டொலர்
தனிநபர் வருமானம் - 1945 டொலர்.

**அமைவிடம்:**

தென்மத்திய பசிபிக் கடலில் அமைந்துள்ளது. விதிலெவு மற்றும் வனுவாலெவு உட்பட 840 தீவுக்கூட்டங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 100 தீவுகளில் மனிதர்கள் வசிப்பதில்லை. ஃபிஜியின் தெற்கே 2000 கிலோமீட்டர் தொலைவில் நியூஸிலாந்து அமைந்துள்ளது.

**வரலாறு:**

1643ல் டாஸ்மன் என்பவர் ஃபிஜி தீவைக் கண்டுபிடித்தார். 1874ல் பிரிட்டனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. 1970ல் சுதந்திரமடைந்தது. மக்கள் தொகையில் 50% இந்தியர்கள். இந்திய வம்சாவளியினர் பலர் அரசாங்கத்தில் பங்குபெற்றுள்ளனர். இதை எதிர்த்து கேர்ணல் ரபியுக்கா தலைமையில் இராணுவப் புரட்சி ஒன்று நடந்தது. இராணுவப் புரட்சியை அடுத்து ரபியுக்கா ஆட்சியைக் கைப்பற்றினாலும், முதலில் இருந்த கவர்னரையே ஜனாதிபதியாக்கினார்.



**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். சுற்றுலா முக்கிய வருமானமூலம்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.10.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 215
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 213

பரிசுக்குரியவர்:
கே.இந்துஜா,
சைவமங்கையர் கழகம், கொழும்பு-06.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| முகம்மது ஆமில், திரித்துவக் கல்லூரி, கண்டி. | செல்வி ஜனனி யோகராசா, புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை. |
| சுதாதரன் நுபேந்தன், கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை. | எஸ். செல்வகுமார், சென் ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |
| செல்வி சிந்துஷா சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | எம். தினேஷ்குமார், க/ரோ.க. தமிழ் பாடசாலை, அம்பிட்டிய. |
| செ. அம்பிகா, விஹாரமகாதேவி மகளிர் வித்தியாலயம், கண்டி. | ஆர். சி[illegible]ப்னாஸ், மருகொன ஜனபதய, உக்குவெல. |
| மும்தாஜ் யூசுப்-ரிஸ்வியா யூசுப், க/அஸ்ஹர் தேசிய பாடசாலை, அக்குறனை. | மோகன் பிரியதர்ஷினி, த.ம.மகா. வித்தியாலயம், பண்டாரவளை. |

# விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள்

ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்த ரைட் சகோதரர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மூத்தவர் ஓர்வில் ரைட். இரண்டாமவர் வில்பர் ரைட். 1903ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள கிட்ஷ் ஹொக் என்ற இடத்தில்தான் ஆகாய விமானம் பறக்க விடப்பட்டது. ஒற்றை இருக்கை கொண்ட அந்த விமானத்தை ஓர்வில் ரைட் முதலில் ஓட்டினார். 12 அடி உயரம் வரை பறந்த அந்த விமானம் 12 வினாடிகள் ஆகாயத்தில் பயணித்தது.




முதல் விமான முயற்சியின் வெற்றியால் அன்றைய வருடமே 3 விமானங்களைத் தயாரித்தனர் ரைட் சகோதரர்கள். இவற்றில் ஒரு விமானம் அரை மைல் உயரத்திற்குப் பறந்தது.

விமான உற்பத்தி சிறப்படைய 5 ஆண்டுகளுக்கு மேல் பிடிக்கும் என்று பலரும் கருதினார்கள். ஆனால் மூன்றே வருடங்களுக்குள் (1906-ல்) ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள வோசின் டெரெஸ் என்னும் விமானக் கம்பனி தரமான விமானங்களைத் தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தது.

# கருங்கடல்

- கருங்கடல் எங்குள்ளது?

தென்கிழக்கு ஐரோப்பாவைச் சுற்றி வலம் வரும் மிகப் பெரிய கடல் இது. இதன் வடக்குப் பக்கமாக துருக்கியும், தெற்குப் பக்கமாக ரஷ்யாவும், உக்ரேனும் அமைந்துள்ளன.




- இந்தக் கடலின் ஆழம் என்ன?

நான்கு இலட்சத்து 53 ஆயிரம் சதுரகிலோமீட்டர் வரை பரவியுள்ள இந்தக் கடலின் ஆழம் 200 மீட்டர். அதாவது சுமார் 6600 அடி ஆகும்.

- கருங்கடலில் கலக்கும் முக்கிய ஆறுகள் எவை?

டனுபி, நெஸ்டர் போன்றவை.

- இக்கடலுக்குக் கருங்கடல் என்ற பெயர் எப்படி வந்தது?

குளிர்காலத்தில் அதிகமாகத் தோன்றும் மூடுபனியினால் இக்கடலின் தண்ணீர் கறுப்பாகத் தெரியும். இதனால் தான் கருங்கடல் என்ற பெயர் வந்தது.

# உயிர் வெள்ளி

உலோகங்களிலேயே திரவமயமாக இருப்பது பாதரசம் (MERCURY) ஒன்று தான். பாதரசத்திற்கு மற்றொரு பெயர் உயிர் வெள்ளி. பழங்காலத்தில் க்விக் (QUICK) என்ற சொல்லுக்கு உயிருள்ளது என்று பொருள். பாதரசம் கீழே தரையில் வீழ்ந்தால் சிறு சிறு துளிகளாக உருண்டோடும். இதனாலேயே இதற்கு இப்பெயர் வந்தது.



கிரேக்கப் புராணங்களில் வரும் மெர்க்குரி என்னும் தேவதை கடவுளர்களின் கட்டளைக்குப் பணிந்து எப்பொழுதும் சிறு சிறு வேலைகளைச் செய்ய ஓடிக்கொண்டிருக்குமாம். பாதரசமும் தரையில் ஓடுவதால் இதற்கு மெர்க்குரி என்ற பெயர் வந்தது.

# அதிசய நண்டுகள்



▷ பேய் நண்டு என்னும் ஒருவகை நண்டு உவர் மண்ணில் இருக்கும்போது மஞ்சளாக இருக்கும். ஈரமணலில் இதுபோகும் போது இதன் நிறம் சாம்பலும், ஊதா நிறமும், கபிலநிறமும் கலந்ததாக மாறிவிடும்.



△ ஜப்பான் நாட்டில் காணப்படும் ஒருவகை இராட்சத நண்டின் ஒவ்வொரு காலின் நீளமும் 13 அடி வரை இருக்கும்.

▷ கொள்ளைக்கார நண்டு எனப்படும் ஒருவகை நண்டு. தென்னை மரங்களில் ஏறி தேங்காயைக் கூட உடைத்துத் தின்று விடும்.





◁ வடகடலில் பீச் என்ற நண்டினம் இவற்றின் புறவோட்டில் பல சின்னஞ் சிறு நன்னீர் நண்டுகள் ஒட்டிக்கொண்டிருக்கும். இவை தாமாக எங்கும் நகர முடியாது. தாம் குடியிருக்கும் நண்டு நகரும் போதுதான் இவை நகரும்.



◁ துறவி நண்டு எனப்படும் ஒருவகை நண்டு ஒரு வகையான கடல் உயிரியிடம் நட்பு வைத்துக்கொள்கிறது. பாதுகாப்புக் கருதி இந்த நண்டு எப்போதும் அந்தக் கடல் உயிரியுடன் சேர்ந்து தான் செல்லும்.



படிப்பகம்

www.padippakam.com

# உடைந்த இரவு

## இரவு 21

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**சென்றவாரம்**

'பிராணவாயு செல்லும் ரப்பர் குழாயை அழுத்திப் பிடித்து தினேஷின் உயிரை நிறுத்தி விடலாமா?' என்று மைத்ரேயி யோசனை செய்து கொண்டிருந்தபோது டாக்டர் கோஷ் வந்து சேர்கிறார்.

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு தினேஷ் பிழைத்து விடுவார் என்று கூறும் கோஷ் இம்பாலா ஹொஸ்பிடலில் வைத்து ஆபரேசன் செய்துவிட ஒழுங்கு செய்கிறார்.

ஆப்ரேசன் வெற்றியளித்து தினேஷ் பிழைத்துக்கொள்கிறான். மைத்ரேயி டாக்டர் கோஷிடம் போலியாக நன்றி கூறுகிறாள்.

ஆத்திரத்துடன் அத்தையையும் அழைத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து பாஸ்கரின் ஃபோனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

**இனி...**

டெலிஃபோன் குரல் கொடுத்தபோது சரியாய் ஆறுமணி. சோபாவில் சாய்ந்து கண்களை மூடியிருந்த மைத்ரேயி எழுந்து போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ...."

மைத்ரேயி குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

"மைத்ரேயி நான் பாஸ்கரன்?"

"பாஸ்கர்! நாம நினைச்சமாதிரி எதுவும் நடக்கல!"

"உன் புருஷன் டாக்டர்ஸ் வெச்ச கெடுவைத் தாண்டிட்டானா?"

"ஆமா..."

"எப்படி...?"

"ஹைதராபாத் டாக்டர் கோஷ் ஒரு லாப்ராஸ்கோப்பிக் ஆபரேஷனைப் பண்ணி ஊசலாடிக்கிட்டிருந்த உயிரைக் காப்பாத்திட்டார். ஹாஸ்பிடலை விட்டு கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் வீட்டுக்கு வந்தேன்..."

"என்ன மைத்ரேயி நீ... கிடைச்ச ஒரு நல்ல சந்தர்ப்பத்தையும் கோட்டை விட்டுட்டியே...?"

"என்னால என்ன பண்ணமுடியும் பாஸ்கர்...? என் கணவருக்குப் பக்கத்துல ஒரு டாக்டரும் நர்ஸும் அசையாமலே நின்று கண்காணிச்சிட்டிருக்கும்போது என்னால எதுவும் செய்ய முடியாத நிலை. ஆனவரைக்கும் நானும் ட்ரை பண்ணிப் பார்த்தேன். அவருக்குப் பக்கத்துலகூட போக முடியலை..."

"சரி.... இப்ப என்ன பண்ணலாம்...?"

"எனக்கு ஒண்ணுமே புரியல..."

"உன் புருஷன் தினேஷ் இன்னும் எத்தனை நாளைக்கு ஹாஸ்பிடல்ல இருப்பான்...?"

"எப்படியும் ஒரு வாரம்... பத்து நாள்..."

"அந்த பத்து நாளைக்குள்ளே காரியத்தை முடிக்க முடியுமா?"

"எப்படி முடிக்கிறது...?"

"ஒரு திட்டம் இருக்கு..."

"சொல்லுங்க...."

"ஃபோன்ல வேண்டாம். நேர்ல பேசிக்குவோம்!"

"எங்கே...?"

"இன்னிக்கு மத்தியானம் மூணுமணிக்கு மல்லிகை டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு வந்துடு. க்ரோசரி செக்‌ஷன்ல கூட்டம் இருக்காது. பேசிடுவோம்."

"மூணு மணிக்கா...?"

"ஆமா..."

"வந்துடறேன்...."

மைத்ரேயி ரிஸீவரை வைத்துவிட்டு மறுபடியும் சோபாவுக்கு சாய்ந்தாள்.

☆☆☆

**காலை ஒன்பது மணி.**

ஆவடி பொலிஸ் ஸ்டேஷனுக்குள் அந்த நடுத்தர வயது நபர் உள்ளே நுழைந்து தினபூமி படித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்கு முன் பவ்யமாய் நின்றார்.

"வணக்கம்.. ஸார்...."

இன்ஸ்பெக்டர் பேப்பரிலிருந்து நிமிர்ந்தார்.

"என்ன?"

"ஸார்... என் பேரு நாதமுனி..."

"சரி...."

"மஹாராணி நகர். ஏரிக்கரை ரோட்ல நான் குடியிருக்கேன் ஸார். ஒரு விஷயமா கம்ப்ளைண்ட் பண்ணிட்டு போலாம்னு வந்தேன் ஸார்."

"என்ன கம்ப்ளைண்ட்...?"

"என் வீட்டுக்கு எதிர்ல பட்டாபின்னு ஒருத்தர் குடியிருக்கார். நேத்து ராத்திரி பத்து மணிக்கு மேல பட்டாபி வீட்டுக்குள்ளே ஏதோ சத்தம் கேட்டது."

இன்ஸ்பெக்டர் ஆர்வமானார்.

"என்ன சத்தம்?"

யார் கிட்டயோ வாக்குவாதம் பண்ற மாதிரி சத்தம். அதுவும் கொஞ்ச நேரத்துக்குத்தான். அதுக்கப்புறம் சத்தமே கேட்கல. இன்னிக்குக் காலையில கண் முழிச்சதும் அதைப் பத்தி விசாரிக்கிறதுக்காக பட்டாபி வீட்டுக்குப் போனேன். பட்டாபி வீட்ல இல்ல. முன்பக்கக் கதவும் பின் பக்கக் கதவும் திறந்தே கிடந்துச்சு. எங்கேயாவது வெளியே போயிருப்பாரேன்னு நினைச்சு... கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்த்தேன். எட்டு மணி வரைக்கும் வரல...."

இன்ஸ்பெக்டர் பேப்பரை மடித்து வைத்தார்.

"அந்த ஆள் பேர் என்ன சொன்னே?"

"பட்டாபி ஸார்.."

"ஆள் ஒண்டிக்கட்டையா?"

"ஆமா ஸார்..."

"குடிப்பாரா...?"

"இல்ல ஸார்... பட்டாபி நல்ல டைப். வெளியே எங்காவது போறதாயிருந்தாலும் என்கிட்ட சொல்லாமே போகமாட்டான். அப்படிப்பட்டவனை காலையிலிருந்து காணலைங்கும்போது மனசுக்கு கொஞ்சம் கஷ்டமாயிருந்தது. அவனுக்கு ஏதாவது ஆகியிருக்குமோன்னு பயமாவும் இருக்கு."





இன்ஸ்பெக்டர் அந்த நாதமுனியை ஏறிட்டார். "நேத்து ராத்திரி பட்டாபியோட வீட்டுக்குள்ளே யாரோ வந்து பேசிட்டிருந்ததா சொன்னியே... அது ஆணா... பெண்ணா....?"

"ஆண் தான்..."

"அது யார்னு நீ போய் பார்க்கலையா?"

"பார்க்கலை ஸார்..."

"ஏன்....?"

"பட்டாபிக்கு யாராவது வேண்டியவர்கள் வந்திருக்கலாம்ன்னு நினைச்சு கொஞ்சம் அசட்டையா இருந்துட்டேன்..."

"அந்த பட்டாபி என்ன வேலை பார்க்கிறான்?"

"வெல்டர்...."

"எந்த கம்பெனியில்?"

"மெகா இண்டஸ்ட்ரீஸ்..."

"அவனுக்கு என்ன வயது?"

"இருபத்தேழு..."

"கல்யாணம்...?"

"இன்னும் ஆகலை..."

"சரி... மத்தியானம் வரைக்கும் பாரு... ஆள் வரலைன்னா அதுக்கப்புறமா வந்து கம்ப்ளைண்ட் பண்ணு... ஆள் ஒரு சமயம் வீட்டைப் பூட்ட மறந்து வேலைக்குப் போனாலும் போயிருப்பான்..."

"அவன் வேலை செய்யற கம்பெனிக்கும் ஃபோன் பண்ணிப் பார்த்துட்டேன் ஸார். பட்டாபி வேலைக்கு வரவேயில்லைன்னு சொன்னாங்க..."

"மத்தியானம் வரைக்கும் பார்க்கலாம்" இன்ஸ்பெக்டர் அசுவராசியமாய் சொல்லிவிட்டு மறுபடியும் பேப்பரைப் பிரித்து வைத்துக் கொள்ள, நாதமுனி தயக்க நடையில் வெளியேறினார்.

☆☆☆

தினேஷ் கண்விழித்துப் பார்த்தபோது மதியம் இரண்டு மணி. முதன் முதலில் பார்வைக்குக் கிடைத்தவள் மைத்ரேயி.

அவனுடைய காய்ந்து போன வறண்ட உதடுகள் அசைந்தன.

"மை..த்...ரே...யி...!"

"எ...என்னங்க...?" கண்களில் போலிக் கண்ணீரைக் காட்டி அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள். "உங்களுக்கு ஒண்ணும் ஆகாது. தைரியமா இருங்க..."

"உ... உன்னை விட்டு போயிடுவேனோன்ன எனக்கு பயம்மாயிருக்கு மைத்ரேயி..."

டாக்டர் ராமபத்ரன் தலைமாட்டில் நின்று கொண்டு குரல் கொடுத்தார்.

"தினேஷ்....! இனிமே நீங்க பயப்பட வேண்டியது இல்லை. டாக்டர் கோஷ் உங்களை அபாயக்கட்டத்திலிருந்து காப்பாத்திட்டார். ட்ரீட்மெண்டெல்லாம் இனி ஒரு வாரம் பத்து நாள் தான். அப்புறமா வீட்டுக்குப் போயிடலாம்... தற்சமயம் உங்களுக்கு வேண்டியது ஓய்வு. அதிகமா பேசக் கூடாது. மனசைப் போட்டுக் குழப்பிக்கவும் கூடாது."

தினேஷ் ஏதோ பேச முயற்சிக்க கையமர்த் தினார் ராமபத்ரன். "போதும்... இன்னிக்கு இவ்வளவு பேசினது போதும். இனி நாளைக் குத்தான் நீங்க வாயைத் திறக்கணும்" சொன்ன வர் மைத்ரேயிடம் திரும்பினார்.

"எல்லோரும் வெளியே போயிடறது நல்லது. இது ஐ.ஸி.யூனிட். ரொம்ப நேரத்துக்கு உள்ளே யாரும் இருக்கக்கூடாது. சாயந்தரம் ஒரு தடவை உள்ளே வந்து பார்த்தா போதும்..."

வையாபுரி, அத்தை உட்பட எல்லோரும் வெளியே வந்தார்கள்.

வெளியே.

கம்பெனியைச் சேர்ந்த அதிகாரிகள் நான்கைந்து பேர் நின்றிருந்தார்கள். கைகளில் மலர்ச்செண்டு கெட் வெல் கார்ட்ஸ்.

"மேடம்...! ஸாருக்கு... இப்போ....?"

"நோ... ப்ராப்ளம். ஹி....ஈஸ்... ஆல்ரைட்." அவர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த கெட்வெல் கார்டு இணைக்கப்பட்டு இருந்த பொக்கேக்களை நீட்டினார்கள்.

மைத்ரேயி வாங்கிக்கொண்டே கேட்டாள், "கம்பெனியில் இன்னிக்கு எந்த முக்கியமான வேலையும் இல்லையே...?"

"இல்லை மேடம் பட்..."

"சொல்லுங்க...."

"அவசரமா பேமெண்ட் பண்ண வேண்டியது இரண்டு அயிட்டம் இருக்கு. செக்குல கையெழுத்து இல்லை..."

"இன்னிக்கே பேமெண்ட் பண்ணணுமா?"

"ஆமா மேடம்...."

"நீங்க... போங்க... நான் இப்போ புறப்பட்டு ஆபீஸுக்கு வர்றேன்..."

"தேங்க்யூ மேடம்..."

அவர்கள் ஒட்டு மொத்தமாய் நகர்ந்து போக மைத்ரேயி வையாபுரியை ஏறிட்டாள்.

"மாமா.... நீங்களும் அத்தையும் இங்கேயே இருங்க... நான் கம்பெனி வரைக்கும் போயிட்டு வந்துடறேன்...."

"சீக்கிரமா வந்துடும்மா..."

"நாலுமணிக்குள்ள வந்துடறேன்..." கிளம்பினாள். போர்டிகோவுக்கு வந்து காரில் ஏறும் முன் நேரம் பார்த்தாள்.

மணி. 2.30.

'மல்லிகை டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் மூன்று மணிக்கெல்லாம் பாஸ்கர் வந்து காத்திருப்பதாக சொன்னாரே! பாஸ்கரை பார்த்துவிட்டே கம்பெனிக்கு போவோம்!' யோசித்துக்கொண்டே காரை நகர்த்தினாள். சரியாய் பதினைந்து நிமிஷப் பயணம். மல்லிகை டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வந்தது.

(தொடர்ந்து வரும்)

## பிரியத்துக்கான கருத்துக் கணிப்பு



இப்போதெல்லாம் தினுசு தினுசான ஆராய்ச்சிகள் உலகில் நடந்து வருகின்றன. ஆனாலும் முற்றுப் பெறாமல் இன்னமும் புதிராக இருப்பது மனம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிதான்.

ஆண்களிடம் பெண்களும், பெண்களிடம் ஆண்களும் எதையெல்லாம் ரசிக்கிறார்கள் என்று ஒரு ஆராய்ச்சி அமெரிக்காவில் நடத்தி இருக்கிறார்கள். சுமார் ஆயிரம் ஆண்களிடமும் பெண்களிடமும் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதன் முடிவுகளைப் பாருங்கள். பிரிக்க நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பல்ல. பிரியத்தை அறிய நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு.

முதலில் ஆண்களின் ரசனை.

40 சதவிகிதமானோர் முக அழகை ரசிக்கின்றனர்.

25 சத விகிதமானோர் கால்களின் அழகை ரசிக்கின்றனர். (ரம்பா ரசிகர்கள் மாதிரி)

39 சதவிகிதமானோர் பெண்களின் முடி அழகை ரசிக்கின்றனர்.

69 சதவிகிதமான ஆண்கள் உயரத்தை ரசிக்கின்றனர்.

70 சதவிகிதமானோர் தட்டையான வயிறு உள்ளவர்களை விரும்புகின்றனர்.

இதேபோல பெண்களிடம் பெறப்பட்ட கருத்துக் கணிப்பு விபரங்கள்:

35 சதவிகிதமான பெண்கள் ரசிப்பது முக அழகை.

23 சதவிகிதமான பெண்கள் ரசிப்பது கால்களின் அழகை.

20 சதவிகிதமான பெண்கள் மார்பு அழகை ரசிக்கின்றனர்.

17 சதவிகிதமானோர் முடி அழகை ரசிக்கின்றனர்.

24 சதவிகிதமானோர் இடுப்பு அழகையும், 35 சதவிகிதமானோர் உயர அழகையும் ரசிக்கின்றனர்.

எத்தனை முக்கியமான கருத்துக் கணிப்பு பார்த்தீர்களா? ■

## பேனா நண்பர் அரங்கம்













பெயர்: எம். ஷிபான்,
வயது: 23
முகவரி: 94, குருந்துகஹ எல, அக்குறணை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: ஏ. பிரேமகாந்தன்,
வயது: 23
முகவரி: செம்பாப்போடியார் வீதி, அக்கரைப்பற்று-07.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எல். ஜுனைதீன்,
வயது: 24
முகவரி: சின்னக் கபூரடி வீதி, காத்தான்குடி-02.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: கே. ராஜன்,
வயது: 21
முகவரி: BRUNNEN WEG - 1, 7323 WANGS, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: எஸ். அகல்யா,
வயது: 16
முகவரி: 133, ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியா.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: எஸ். அப்துல் நஸார்,
வயது: 25
முகவரி: P.O.BOX-5239, DUBAI, U.A.E.
பொழுது போக்கு: கிரிக்கெட், பேனா நட்பு.

பெயர்: எம். பாத்திமா ஷிரீன்,
வயது: 17
முகவரி: பெலஸ் பாத், பேருவளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. ரில்வான்,
வயது: 30
முகவரி: P.O.BOX- 8483, JEDDAH 21482, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: பி. பத்மநாதன்,
வயது: 19
முகவரி: கல்கடு எஸ்டேட், நேபொட.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: ஆர். சிவச்சந்திரன்,
வயது: 23
முகவரி: மனிக்கட்டி, புப்புரஸ்ஸ.
பொழுது போக்கு: பேனாநட்பு, கிரிக்கெட்.

பெயர்: ஆர். குமார்,
வயது: 21
முகவரி: 282 CHURCH LANE, KINGSBURY, MIDDX, NW98, LONDON.
பொழுது போக்கு: சினிமா.

பெயர்: ஏ. அஸாம்,
வயது: 21
முகவரி: புடவைக்கட்டு, திரியாய்.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 33

## பிரபஞ்சன்



"அதற்கு வேறு ஆளைப் பாருங்கள். நீங்கள் புறப்படலாம்."

"மேடம். உங்கள் மேல் அதிகாரியை நாங்கள் எங்கள் வழிக்குத் திருப்பி விடுவோம். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"இப்போது நீ வெளியேறலாம்!"

அவர்கள் எழுந்து சென்றார்கள்.

அரசு வேலையை நினைக்கும்போதே அவளுக்கு அவமானமாக இருந்தது.

சில தினங்களுக்குள், சமூக ஊழல்களை வெளிப்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு, பெரிய ஸ்தாபனம் ஒன்றிலிருந்து வெளியாகும் 'சந்தோஷ போதினி' என்கிற பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது.

சுமதி என்கிற அதிகாரிக்கும், அவர் மேல் அதிகாரியான இன்னொருவருக்கும் அந்தரங்க உறவு இருப்பதாகவும், சுமதி

**இதுவரை**

> சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார்.
> சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது.
> சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள். ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்துக் கோரி பெற்றுக் கொண்டாள்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல் உரிமையாளர்களிடம் லஞ்சம் கேட்டதாகவும், அவர்கள் லஞ்சம் தர மறுத்ததால் அவர்களுக்கு எதிராகக் குடிசைவாசிகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பதாகவும் அந்தச் செய்தி சொன்னது.

சுமதிக்குச் சிரிப்புத்தான் வந்தது.

ஆனால் அப்பத்திரிகைச் செய்தியின் விளைவு வேறு விதமாக இருந்தது.

***

அன்று காலையில் இருந்தே சுமதிக்கு, பவழமலைப் பக்கம் போக வேண்டும் என்கிற எண்ணம் தோன்றிக் கொண்டேயிருந்தது. அன்று விடுமுறை தினம் இல்லை. எனினும் விடுமுறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள் அவள்.

அலுவலகத்துக்குப் ஃபோன் செய்து விடுமுறை சொன்னாள். காரை எடுத்துக்கொண்டு, தானே அதைச் செலுத்திக்கொண்டு, ராதாகிருஷ்ணன் ரோடிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலுக்குச் சென்றாள்.

வெயிட்டர் என்ன வேண்டும் என்று கேட்கையில் அவளுக்கு மிகவும் பிடித்தமான நெய்த்தோசைக்கு ஆர்டர் செய்தாள். தோசை நன்கு வார்த்திருந்தது. மீண்டும் இன்னொரு தோசைக்கு ஆர்டர் செய்து வாங்கி உண்டாள். காபியும் அவளுக்குப் பிடித்த விதத்தில் ஸ்டிராங்காக, சர்க்கரை குறைச்சலாக தொண்டையில் சசந்து கொண்டு இருந்தது.

ஹோட்டலை விட்டு வெளியே வருகையில், தைமாத அழகிய காலநிலையை அவள் உணர்ந்தாள். வானம் மப்பும் மந்தாரமுமாய் மூட்டம் போட்டுக்கொண்டிருந்தது. காற்று சில்லென்று வீசியது. அவள் குதூகலம் அடைந்தாள். இதை அனுபவியாமல் ஆபீஸ்போகப் பார்த்தேனே என்று ஒரு கணம் தன்னையே பாராட்டிக்கொண்டாள். காரை ஸ்டார்ட் செய்து கொண்டு, அண்ணா சாலையைப் பிடித்துத் தாம்பரத்தை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினாள்.

உலகமே அழகாகி விட்டது மாதிரி தோன்றியது. தெரு, தெரு நாய்கள், கட்டடங்கள், தெருப்புழுதி, புகை கக்கும் லாரிகள், தெரு ஓரத்து மரங்கள், குஷ்டரோகப் பிச்சைக்காரர்கள் ஆகிய அனைவரும் மிக அழகாகவே தென்பட்டார்கள். மனம் எப்படியோ, அப்படியே மனிதர்கள்.

இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு அவள் பவழமலை வந்து சேர்ந்தாள். வண்டியை, வெற்றிலை பாக்கு, கையிலேந்திய பொருட்கள் விற்கும் கடை ஒன்றின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டுப் படியேறத் தொடங்கினாள்.

மேல் ஏற, மேல் ஏற மனம் இலகுவாயிற்று. காற்றில் அடித்துப் போவது போல அவள் தன்னை லேசாக உணர்ந்தாள். ஓரளவு உயரம் வந்த பிறகு திரும்பிப் பார்த்தாள். மண்ணும் மக்களும் மிகக் கீழே இருப்பது தெரிந்தது.

அவள் மனம் களிப்புற்றது.

அவள் மண்ணின் கட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டு விட்டாள். அவளின் அடிமைத் தளைகள் கீழே விழுந்து விட்டன.

கொடுமையே உருவான கணவன் இல்லை. சக ஊழியர்களின் காமப் பார்வைகளை வென்றாகிவிட்டது. உறவு, சொந்தம் ஆகிய அனைத்தையும் விலக்கியாகிவிட்டது. இனி அவளிடம் மிஞ்சி இருப்பது அவளும் அவளுடன் வாழும் மனிதர்களும்தான். ஆகவே இனி அவள் கவலைப்படத் தேவையில்லை.

ஆக, வெளி வந்தாகி விட்டது.

உச்சியில் விநாயகர் கோயில் ஒன்று இருந்தது; சின்னஞ்சிறு பிள்ளையார். ஒரு பத்து மாதக் குழந்தை உட்கார்ந்திருந்தது போல அத்தோற்றம் இருந்தது. அவள் கோயிலைச் சுற்றி வந்தபோது, கோயிலின் வெளியில் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்த குடும்பம் அவள் கண்ணில் பட்டது. ஒரு குடும்பத்தலைவர் நாற்பது வயதில். முப்பந்தைந்து வயதில் சற்றுப் பெருத்த குடும்பத் தலைவி. ஒரு இரண்டு வயதுக் குழந்தை. கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு வந்து பெட்ஷீட்டை விரித்து அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

குழந்தை சுமதியைப் பார்த்துச் சிரித்தது. அக் குடும்பத்தைக் கடந்து அவளால் நடக்க முடியவில்லை. அவள் நின்றாள். குழந்தை தளர் நடை நடந்து அவள் அருகில் வந்து நின்றது.

அவள் அக் குழந்தையின் கன்னத்தைத் தடவிக் கொடுத்து "உன் பெயர் என்ன?" என்றாள்.

"ஜோமதி" என்றது குழந்தை.

"ஜோமதியா?"

"கோமதிங்க...." என்றாள் அந்தக் குழந்தையின் தாய்.

"ஓ. கோமதியா?" என்றவள் அக் குழந்தையைத் தூக்கித் தன் இடுப்பில் வைத்துக்கொண்டாள்.

"இறங்கி வந்து சாப்பிடுப்பா" என்று அத் தாய் குழந்தையை வேண்டினாள்.

"ஊகும்." என்றபடி அது சுமதியின் கழுத்தைக் கட்டிக் கொண்டது.

"நான் ஊட்டி விடட்டுமா?"

"ஊம்" என்று தலையை ஆட்டியது அது.

சுமதி அவர்கள் அருகில் வந்து ஜமக்காளத்தில்



அமர்ந்து கொண்டாள். அந்தப் பெண்மணியும் அவள் வீட்டுக்காரரும் மிகவும் வெட்கப்படுவது தெரிந்தது.

சின்னஞ்சிறிய கிண்ணத்தில் வைத்துத் தரப்பட்ட சாதத்தை சுமதி அக்குழந்தை வாயில் ஊட்டினாள். காக்கை குஞ்சு தன் சிவந்த வாயைத் திறந்து வாங்கிக் கொள்வது போல, அக் குழந்தை அச்சோற்றை வாங்கிக் கொண்டது.

அந்த அம்மாள் ஒரு தட்டில் கொஞ்சம் புளியோதரையை எடுத்து சுமதியின் முன்னால் வைத்து "சாப்பிடுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள்.

"வேணாம் வேணாம்" என்று மறுத்தாள் சுமதி. "சும்மா சாப்பிடுங்கம்மா... நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது நீங்கள் பார்த்துக் கொண்டு இருப்பதாவது?" என்றார் அந்தக் குழந்தையின் தந்தை.

அவர்கள் முகத்தில் தெரிந்த பரிவும், அன்பும் அவளைச் சாப்பிடத் தூண்டின. சுமதி மறுக்க முடியாமல் அவ்வுணவைச் சாப்பிடத் தொடங்கினாள்.

உணவு மிக நன்றாக அமைந்திருந்தது. திருப்தியுடன் சாப்பிட்டு முடித்தாள். பிறகு அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அவர் ஒரு மில் தொழிலாளி. கல்யாணம் ஆகி இருபது வருஷத்துக்குப் பிறகு பிறந்த குழந்தை அது. ஒற்றைக்கு ஒரு பிள்ளை. "உங்களுக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?" என்று சுமதியைப் பார்த்துக் கேட்டாள் அந்த அம்மாள்.

"ஆகிவிட்டது."

"வீட்டுக்காரர் வரவில்லையா?"

"வீட்டுக்காரர் இல்லை."

"ஏன். இறந்துட்டாரா?" என்றபடி சுமதியின் வெறும் நெற்றியைப் பார்த்தாள் அந்த அம்மாள்.

"கணவர் இப்போது என்னுடன் இல்லை. நாங்கள் விவாகரத்து பண்ணிக் கொண்டோம்."

"ஓ...." என்றாள் அந்த அம்மாள். தன் கணவரைப் பார்த்தாள். பிறகு சொன்னாள்:

"நிம்மதியாக இருங்கள். நானும் ஏறக்குறைய இப்படித்தான். பிள்ளை வயதில் ஒரு அயோக்கியனை நம்பி ஊரை விட்டு இந்த ஊருக்கு ஓடி வந்தவள்தான். அந்த அயோக்கியன் என்னுடன் ஒரு வாரம் இருந்துவிட்டு ஓடிவிட்டான். அப்புறம்தான் இந்த மனுஷர் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். பார்த்தால் படித்தவர் மாதிரி இருக்கிறீர்கள். இன்னும் சின்னப் பெண் மாதிரிதான் இருக்கிறீர்கள். கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்; அல்லது சும்மா நிம்மதியாக இருங்கள். புருஷன் இல்லையென்றால் என்ன? மனுஷர்கள் உலகத்தில் இல்லாமலா போய்விட்டார்கள்?" என்றாள் அந்த அம்மாள்.

மிகச் சாதாரணமாக அந்தப் பெண்மணி வாழ்க்கையை எவ்வளவு ஆரோக்கியமாகப் பார்க்கிறாள் எவ்வளவு சுலபமாக இருக்கிறாள் என்று தோன்றியது அவளுக்கு.

அவள் அவர்களிடம் இருந்துவிடை பெற்று எழுந்தாள்.

மலை உச்சியில் இருந்து கீழே ஊர் தெரிந்தது.

கீழே மனிதர்கள் சின்னஞ் சிறுவர்களாகத் தெரிந்தார்கள். பஸ்களும் லாரிகளும் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களாகத் தெரிந்தன. அவள் மனதில் பரவச உணர்வு பெருக்கெடுத்தது.

இந்த மனிதர்கள் அவளின் உறவினர்கள். அவர்களுடன் தான் சேர்ந்து அவள் வாழப்போகிறாள். இனி அவளின் மக்கள் அவர்கள். இனி அவளின் இன்ப துன்பங்கள் அனைத்தும் அவர்களைச் சேர்ந்ததுதான். அவள் இனி அவர்களுக்காகவும் வாழ வேண்டும்.

சுமதி படியிறங்கி அடிவாரம் வந்து சேர்ந்தாள். கொஞ்சம் கொஞ்சமாய் இயங்குகிற உலகத்தில் சேர்ந்து தன்னைக் கரைத்துக் கொண்டாள்.

(முற்றும்)


அடுத்த வார முரசில்

அமோகமான ஆரம்பம்

அசத்தலான புதிய தொடர்!

ஒரு வாரம் காத்திருங்கள்!



முரசின் முத்தான தொடர்களில் மற்றொரு முத்து!


## இரண்டாம் மனைவி

### ஜெயபால்

இன்ஸ்பெக்டர் பாலகுமார் மூளையைக் கசக்கி கொண்டிருந்தார்.

'என்னுடைய சர்வீசில் எத்தனையோ சிக்கலான கேஸ்களைக்கூட தீர்த்திருக்கிறேன். இந்த அனிதாவின் மரணம் மண்டையை உடைக்கிறதே!'

இருபத்தாறு வயது அழகி அனிதா திடீரென இறந்து கிடந்தாள். அவள் மரணம் கொலையாக இருக்க நான்கு சாத்தியங்கள், தகவல்கள் உள்ளன:

**முதலாவது –**

அனிதா அறுபதை நெருங்கும் செல்வந்தர் கோபால பிள்ளையின் இரண்டாவது இளம் மனைவி. சமீப காலமாக அவர் அனிதாவை வெறுத்து, வேறொரு பெண்மீது கண்வைத்திருப்பது தெரிந்தது.

**இரண்டாவது –**

கோபால பிள்ளையின் முதல் மனைவியின் மகனான விவேகிற்கு அனிதாவின் மேல் பாசம் இல்லை. அவன் கண்ணோட்டமே வேறு! பலமுறை அவளை அடைய முயற்சி செய்து தோற்று விட்டான்.

**மூன்றாவது –**

அனிதாவின் பழைய காதலன் சந்தோஷ்! அவளை 'பிளாக் மெயில்' செய்து பல முறை பணம் கறந்திருக்கிறான். சமீப காலமாக அவன் வருவதில்லை.

**நான்காவது –**

அனிதாவின் தற்போதைய கள்ளக் காதலன் டிரைவர் சசிதரன். அவனுக்கும் பணத்தின் மீதுதான் கண். சமீபத்தில் இதனால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிந்தது.

இந்த நான்கு பேரில் யாரோ ஒருவர்தான் அனிதாவைக் கொலை செய்திருக்க வேண்டும். ஒருவர்தானா? அல்லது இரண்டு மூன்று பேர் கூட்டுச் சேர்ந்து திட்டமிட்டு செய்திருக்கிறார்களா...? யார்.. யார்?



பாலகுமாருக்குப் பிடிபடவில்லை.

"என்னங்க டியூட்டிக்கு நேரமாகலையா?"

கோப்பியுடன் வந்த கமலா தன் கணவரின் சிந்தனையைக் கலைத்தாள்.

மணியைப் பார்த்த பாலகுமார் அவசரமாக எழுந்து மேஜைமேல் வைக்கப்பட்டிருந்த, தனது அபிமான க்ரைம் எழுத்தாளரின் நாவலை எடுத்து நாவலின் (அனிதாவின்) முடிவைப் படிக்க ஆரம்பித்தார். படித்து முடித்தவர், "சே.. கடைசியில் தற்கொலை.." என்றார் வெறுப்பாக.

## ஆர்.என்.ராஜா



திவ்யா திரும்பிப் பார்த்தாள். இன்னும் அவன் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

மண்டபத்திலிருந்து அவன் தொடர்ந்து வருவது திவ்யாவுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது.

'பார்வையப்பாரு! காணாததைக் கண்ட மாதிரி. பின்னாடியே அலையறதப்பாரு. நாய் மாதிரி.. என்ன மனுஷத் தன்மையோ! 'ச்சே..' திட்டினாள்.

வேகமாய் நடந்தாள். அதைவிட வேகமாய் அவளைத் தொடர்ந்தான் அவன்.

"ஹலோ! ஏங்க.." கூப்பிட்டான்.

அதிர்ச்சியாய் நின்றாள்.

'வரட்டும் செருப்பாலேயே அடிக்கணும். அப்பத்தான் புத்தி வரும்.' முடிவோடு இருந்தாள் திவ்யா.

மிக அருகே வந்தான்.

"ஏங்க.. எப்படிக் கேக்கறதுன்னு தெரியலை." லேசாக கையை பிசைந்தான்.

"ஏதாவது கேட்டீன்னா செருப்புப் பிஞ்சிடும்!" செருப்பை கழட்டி எடுத்துக் கொண்டாள்.

"பரவாயில்லீங்க.. நான் கேக்க வந்தத நீங்களே எடுத்துக் காட்டுறீங்க.. அந்த செருப்பு என் மனைவியோடது.. எப்படிக் கேக்கறதுன்னுதான் தயக்கம். அதான் பின் தொடர்ந்து வந்துட்டேன்..."

"சரி சார்! தப்ப என்மேல [illegible] உங்களைத் தண்டிக்கப் பார்த்துட்டேன்."

அவனுடன் பேசிக் கொண்டே மண்டபத்தை நோக்கிச் சென்றாள். தன்னுடைய செருப்பை எடுத்துக் கொள்ள...!



படிப்பகம்

www.padippakam.com

**வாழ்வு! அது சுகம்தரும் ஆனந்தமான ஜீவ ஊற்று. அதை சுவை குன்றாமல் பருகவேண்டும்!**

# நிழல்

ஜெயமணி



## அனுபவக் கதை

"யார்- மச்சினனா? இத்தனை வருசங்கள் கழிச்சு வராதவன் வந்திருக்கிறாய். வா.வா. எப்பிடி இருக்குபாடுகள். சுந்தரி சுகமா?"

மனமும், முகமும் மலர பல நாட்களின் பின் சுமை குறையச் சிரிக்கும் சுகமான அனுபவத்தை தொட்ட விகசிப்புடன் வரவேற்றார் பொன்னர்- தம் ஒன்றுவிட்ட மைச்சினர் இராமசாமியை.

உள்ளறை பூட்டு திறக்கும் ஓசை. எட்டிப் பார்த்த மருமகள் பார்வையில் நிறைய அதிருப்தி.

பொன்னரின் உற்சாகம் வடிந்துபோக முகம் மாறியது. கவனித்தும் கவனியாதவராக இராமசாமி கேட்டார், "மகன் பொண்டாட்டியா? குழந்தைகள் எத்தனை?"

"இரண்டு," மெல்ல கூறும் விதத்தில் பயம் துளிர்விட்டிருந்தது.

"மாமா! கொஞ்சம் தண்ணீர் பிடிச்சு வைங்க. பிள்ளைகள் குளிக்கணும்."

"இரு மச்சான்! இதோ வந்துடறேன்." ஆழ்ந்த மூச்சுடன் எழுந்து விரைந்தார் பொன்னர்.

திரும்ப வந்து உட்கார்ந்து, அந்த நாட்களின் நினைவுகளைத்தேடிப் பேசி மகிழ்ந்தனர்.

இருவரும் கல்யாணமாகிய ஆரம்ப காலம். பொன்னருக்கு ஒரு பெண்ணும், இரண்டு பையன்கள் பிறந்தும், இராமசாமிக்கு ஒன்றும் பிறக்கவில்லை.

"ஏன் மச்சான் ஏதாவது அப்பிடியிப் பிடி...?"

"சேச்சே. எந்தப் பாவனையுமில்லை. கிடைக்க இருந்தாத்தானே கிடைக்கும்!"

"பின்னாளில் ஆறியமர ஒரு நிழல் வேண்டாம்...?"

"வைச்ச மரமெல்லாம் நிழல் தருமென்பது என்ன நிச்சயம்? யாரோ நட்டுவச்சவை எவரெவர்க்கோவெல்லாம் நிழல் தருவதில்லையா?"

"அப்போ?"

"ஒருத்தருக்கொருத்தர் துணையா இருந்துட்டுப் போறது." அன்று இராமசாமி சொன்ன வார்த்தைகள் இன்னும் அழியாத கல்வெட்டென அழுத்தமாகப் பதிந்திருக்கிறது பொன்னரின் மனசில்.

"ஆமா மச்சான் தங்கச்சி எங்கே- காணோம்?" கேள்விக்குப் பதில் பொன்னர் மச்சான்- தருவதற்கிடையில் காப்பி கொண்டு வந்து ஏனோ தானோவென வைத்துவிட்டுத் திரும்பிய மருமகள் போகிற போக்கில் "மாமா குழந்தைகளை ஸ்கூலிலை விட்டுட்டு வரும்போது கொஞ்சம் காய்பிஞ்சு பார்த்து வாங்கியாங்கோ," என்றாள்.

மீண்டும் பதற்றத்துடன் எழுந்துகொண்ட பொன்னரைப் பரிதாபமாகப் பார்த்தார் இராமசாமி.

வயசாகும் காலத்தில் அணைப்பும், ஆதரவும் தந்து தாங்குவார்களென நினைத்து சீராட்டி வளர்த்து ஆளாக்கி ஏமாந்து போய் மௌனியாக முடிவுவரை தங்களை ஏமாற்றி வாழும் மனிதர்கள் எத்தனை, எத்தனை.

மகன் கொள்ளிவைச்சால் சொர்க்க வாசல் திறக்கும் புண்ணியமென வகுத்தவன் யார்- ஈஸ்வரனா? அந்த ஈசனுக்கே அர்ப்பணமானவர்களை யார் கொள்ளி வைச்சு அங்கே அனுப்பியது? இறந்தபின்னால் கிடைப்பது என்ன? என்பதை தெளிவாகச் சொல்ல முடியவில்லை, இதுவரை யாராலும். அப்படியிருக்க தானே வளர்த்துவிட்ட நெருப்பில், கட்டையில் போகும் வரை வெந்து, வெந்து தன்னை- தனது உணர்ச்சிகளைப் பொசுக்கிக் கொண்டு எதுக்காக வாழணும்?

கட்டைக்குவைக்கும் நெருப்புக்காகவா?

விலங்குகளுக்கு இந்த எதிர்பார்ப்புக்கள் உண்டா? பறவைகளிடையே பாகுபாடு, மலர்களிடையே தாபங்கள் உண்டா? அவை, நாளைய நினைப்பின்றி வானத்தையும், பூமியையும் தொட்டுக் குலாவி சொக்கும் சுதந்திரத்தை துய்த்து மறைகின்றன. மனிதனால் மட்டும் ஏன்- ஏன் முடியவில்லை?

பந்தங்களால் விலங்கு பூட்டிக்கொண்டு, அந்த வக்கிரமான வட்டத்துள், வாழ்க்கையுடன் போராடிப் போராடி மாய்ந்து போவதிலேயே வாழ்நாளை முடித்துக் கொள்கிறான்.

வாழ்வு! அது சுகமான ஆனந்தம் தரும் ஜீவ ஊற்று. அதை அதன் சுவை குன்றாமல் பருகவேண்டும். அப்போதுதான் திருப்தியடைய முடியும். அது மனிதனால் முடியவே முடியாது. வாழ்க்கையை வாழ்வாகப் பார்க்காமல் கட்டிப் போட்ட தடிமாடாக அடக்கி வாழும் வரை அது நிறைவேறப் போவதில்லை. இராமசாமியின் சிந்தனையைக் கலைந்தபடி பொன்னர் திண்ணையில் வந்தமர்ந்தார்.

"உஸ்ஃஸ்"

ஆசுவாசம் தேடும் மூச்சு. வியர்வையில் நனைந்த முகத்தை துண்டில் பதித்தெடுத்தார்.

"காய் கறிகளின் விலை. அப்பப்பா. போகப்போக இன்னும் ஏறும் போலகிடக்கு மச்சான். மனுசனை மனுசன் சாப்பிடற காலம்தான் மிஞ்சும். ஆ... சாப்பிட்டாச்சுதா?" தோரணையாக கேட்ட பொன்னரைப் பார்க்க இராமசாமிக்குப் பாவமாக இருந்தது.

வந்து சில மணித்தியாலங்களிலேயே அவருக்கு மகன் வீட்டிலிருக்கும் மரியாதையைப் புரிந்துகொண்டுவிட்டார்.

"வரும்போது கடையிலை பலகாரம் சாப்பிட்டுத்தான் வந்தேன். மருமகள்கேட்டா நீங்க வந்தபின்னாடி சாப்பிடலாம் எனச் சொன்னேன்," கேளாத உபசரிப்பை கேட்டதாகச் சொல்லி அவரைத் திருப்திப்படுத்தினார் மச்சினர்.

பையைக் கொண்டு உள்ளே தந்தவர் மருமகளிடம் "அம்மா என் மைத்துனன் இத்தனை வருசம் கழிச்சு வந்திருக்கிறான். கொஞ்சம் உபசரிச்சு அனுப்பிவைம்மா. தயங்கித் தயங்கி கேட்பது இராமசாமியின்" செவிகளில் மெல்லியதாக மோதியது.

"ம். மகனின் உழைப்பில் விருந்தினர் வேறையாக்கும். தலையெழுத்து. தனக்கே இல்லை இதிலை தம்பட்டம் வேறை."

பொன்னர் வெளியே வந்தபோது இராமசாமி எழுந்து கொண்டார்.

"மச்சான் என்ன அதுக்குள்ளேயா? இருந்து நாளைக்குப் போகலாம்."

"வேண்டாம். நான் நம்ம மருமகளின் உறவினரைப் பார்க்க வந்த இடத்திலை உன் வீடு பக்கமென ஞாபகம் வந்திச்சு. அப்பிடியே பார்த்துப் போகலாம் என வந்தேன். தங்கிப் போக முடியாது. தள்ளாத காலத்திலை பிரயாணம் வேண்டாம். அம்மாவை விட்டு நீங்க மட்டும் போய் இரண்டொரு நாளிலை திரும்பிடுங்கவென அனுப்பியவன், தாமதிச்சால் என்னவோ ஏதோவென அலைஞ்சுபோவான்."

ஆச்சரியமான பொன்னர் "எனக்குச் சொல்லவேயில்லையே உனக்கு மகன் பொறந்ததை," சந்தோசமாக கேட்டார்.

சில நிமிசங்கள் மௌனமாக இருந்த இராமசாமி "எனக்குப் பிறந்தால் தானே சொல்ல."

"அப்போ!"

"இது எங்கள் தத்தெடுத்த மகன்."

"என்னது?"

"யாருமேயில்லாது அநாதையா நின்ற பத்துவயதுச் சிறுவனை பிள்ளையாக ஏற்றுக் கொள்ள, அவன் எங்களைத் தன் அப்பா, அம்மாவாகச் சுவீகரித்துக் கொண்டான். நம்மைத் தாங்குவதில் அவன் வாழ்வின் முழுமையைக் காண்கிறான். அது சரி, நானும் இத்தனை நேரமாக கேட்க தயங்கிக் கொண்டிருந்தேன். சரசு உன் பெண்டாட்டி எங்கே... ஏதாவது...?"

"அவ...அவ... வந்து" அழுகையில் அமுங்கிப் போகத்துடித்த பொன்னர் சமாளித்துக்கொண்டு உணர்ச்சியற்ற குரலில் கூறினார்.

"அவ இன்னொரு மகன் வீட்டிலை. இரண்டு பேரையும் ஒரு சேரப் பார்க்கிறதுக்கு ஒருத்தராலை முடியலை. அப்பாவை ஒரு மகனும், அம்மாவை இன்னொரு மகனுமாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது காலம் அப்பிடி! விலைவாசிகள், சுமைகள் பெருகிவிட்டன இல்லையா? நாமளும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து சகிச்சுண்டு வாழுறதுதான் நல்லது."

இராமசாமி மச்சினரைப் பார்த்த பார்வையில் ஆயிரம் கேள்விகள் தெரிந்தன. துயரமாகக் கேட்டார், "உன் நெஞ்சு சொல்கிறதா மச்சான் இதை? தாம்பத்திய வாழ்வின் முழுமை முதுமையின் பரிவிலும், பாசத்திலும் தான் அடங்கியிருக்கிறது. பிள்ளையின் கைக் கொள்ளியிலில்லை. முடிவுவரை இணை பிரியாமலிருக்க கொடுப்பினை வேணும். அதைவிட பிரிந்து- வாடாமலிருக்க நிறைய கொடுத்துவைச்சிருக்கோணும்!"

விம்மி வெடிக்கத் துடித்த உணர்ச்சியை பொன்னர் அடக்கப் பிரயத்தனப்பட்டுத் தோற்றுப் போய் நின்றார்.

"நான். கூட...உ...ன்...னை மலடென்று..."

"ம். அன்று சொன்னதைத்தான் இன்றும் சொல்கிறேன். பிள்ளை பெறல்லியேன்று இருந்த சொற்ப மன உளைச்சலும் உன்னைப் பார்த்த பின் போயிட்டுது. பெத்திருந்தால் இந்த நிழல்தரும் பசுமையான மரத்தை இழந்திருக்க வேண்டியிருக்கும்." சொல்லி விட்டு விடைபெற்றுச் செல்லும் மச்சினனை கண்கள் பனிக்க ஏக்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றவரை மருமகளின் குரல் இழுத்து திருப்பியது.

"ஸ்கூல் முடியுற நேரமாச்சுது. எப்போதும் நினைவூட்ட வேண்டிக்கிடக்கு."

அவர் துண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு தெருவில் இறங்கினார். வெயில் எரித்துக் கருக்கியது. களைப்பாக இருந்தது. முடியவில்லை. சாப்பாட்டுக்கு வேலைக்காரனாக இருப்பவரால், முடியவில்லை- 'இன்றைக்கு என்னால் முடியவில்லை'யென்று சொல்ல...! ■

# அவசரம்

வி. செந்தில்

"தியேட்டரில் ஹீரோவும், ஹீரோயினும் மில்லி மீட்டர் கூட இடைவெளியில்லாது கட்டியணைத்துக் கொண்டிருந்தனர்.

ஹீரோயினின் மேடான நெஞ்சுப் பகுதிகளில் அடிக்கடி ஹீரோ உரசுவதைப் பார்த்த விக்னேசுக்கு உடம்பில் என்னவோ செய்தது. ஜிவ்வென்று இரத்தம் தாறுமாறாய் சூடாக பாய்வதைப் போல இம்சைப் பட்டான்.

முன்சீட்டில் உட்கார்ந்தவள் வேறு இவனை கலவரப்படுத்திக் கொண்டிருந்தாள். தேகம் முழுவதையும் வெளிநாட்டு செண்ட்டில் குளித்திருந்தாள் போல. திரையில் இவனும், முன் சீட்டுக்காரியும் டூயட் பாடுவதைப் போல் கற்பனை செய்துகொண்டான்.

பாழாய்ப் போன அவன் மனசு இன்னும் அதிவேகத்துடன் துள்ளிக் குதித்தது.

இருபுறமும் உட்கார்ந்திருந்த பக்கத்து சீட்டுக்காரர்களை நோட்டம் விட்டான்.

திரையில் டூயட் இன்னும் பத்து நிமிடம் ஓடினால் அவர்கள் விடும் ஜொள்ளில் தியேட்டரே மூழ்கிவிடும் போலிருந்தது.

அவர்கள் இவனை கவனிக்காதது ப்ளஸ் பாயிண்டாக இருக்கவே ஒரு அசட்டு தைரியத்தில் மெல்ல தனது காலை முன் சீட்டுக்கு அடியில் நீட்டினான்.

அங்கும் இங்கும் அலையாமலேயே அவளின் கால் தட்டுப்பட்டது. தனது பெருவிரலால் அவளுடைய பாதத்தைத் தேய்த்தான்.



கண்ணாடியில் உரசுவது போல் சுகமாக இருந்தது.

அவளிடமிருந்து எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் போகவே, தனது காலை அப்படியே அவள் பாதத்திலிருந்து மேலே உயர்த்தினான்.

அதற்கும் அவளிடமிருந்து நோ காமெண்ட்ஸ்!

விக்னேசுக்கும் மேலும் ஆவல் பொங்க, அடுத்த நடவடிக்கையில் இறங்குவதற்கும் தியேட்டரில் விளக்குகள் பளிச்சிடவும் சரியாக இருந்தது.

'ச்சே...! அதற்குள் இண்டர்வெல்லா?' என்று முணு முணுத்தான்.

அதுவரை பொறுமையாய் இருந்த முன் சீட்டு தேவதை எழுந்து இவனை நோக்கி வேகமாக வந்தாள். குனிந்து அவன் காதில் கிசு கிசுத்தாள்.

"ஏங்க... இடம் கிடைக்கலேன்னு தானே முன் சீட்டுல உட்கார்ந்தேன். நேத்து தானே நமக்கு கல்யாணமாச்சு. இன்னிக்கு ராத்திரி தானே நமக்கு பர்ஸ்ட் நைட். அதுவரைக்கும் உங்களால பொறுத்துக்க முடியலியாக்கும் கிணத்துத் தண்ணியை வெள்ளமாகொண்டு போயிடப்போகுது!"

அவனுடைய இளம் மனைவி தேவி குறும்பாய் சொல்லவும், அசட்டுத்தனமாய் சிரித்து வைத்தான் விக்னேஷ்.

# நிலாவே வா

மதுரா

"குமாருக்காக காத்து இருந்தனர் ராகவனும், டேவிட்டும். கனவில் வரும் கன்னிகளும், வராத கன்னிகளும் பஸ் ஸ்டாப் வந்துவிட்டார்கள். ஆனால், 'நிலா' மட்டும் வரவில்லை.

மதுமிதாவுக்கு, 'நிலா' என்று நாள், நட்சத்திரம் பார்க்காமல் பெயர் சூட்டியிருந்தது 'காதல் நலக்குழு!'

இந்த குழுவின் தலைவர், பொருளாளர், செயலாளர், முறையே குமார், ராகவன், டேவிட் மூவரும் பதவிவகித்தனர். இந்த குழுவில் இளம் பெண்கள் மட்டுமே உறுப்பினராக சேரமுடியும் என்பது விதி. அதுவும் கொஞ்சம் அழகான பெண்கள். முதல் உறுப்பினராக மதுமிதாவை சேர்க்க முயற்சி நடக்கிறது.

"கால் முளைத்த நிலா வந்துவிட்டது." என்றான் டேவிட்.

"எங்கடா மச்சி...?"

"அதோ! நிலாவை, இரண்டு நட்சத்திரங்கள் அழைத்து வருகிறது பார்!"

திரும்பிப் பார்த்தான் ராகவன்!

மதுமிதாவை உரசியபடி நளினியும், சுமதியும் நடந்து வந்தார்கள்.

"மடையா, நளினியையும், சுமதியையும் பார்த்தா ஒனக்கு நட்சத்திரம் மாதிரியா தெரியுது? ரெண்டு சிம்னி லைட் வர்ற மாதிரி இருக்கு," என்றான் குரலை சிறிதாக்கி.

"எங்கடா குமாரை இன்னும் காணோம்?" அவர்கள் முன்னால் வந்து நின்றது ஸ்கூட்டர் ஒன்று. பின்னாலிருந்து இறங்கினான் குமார்.

"ஹேய் மாமு," ஸ்கூட்டர் நகர்ந்தது.

"ஸ்கூட்டர்ல கொண்டு உன்னை விட்டுட்டு போறது யாருடா...?"

"எங்கப்பா."

"இன்னொரு முறை சொல்லு?"

"மாத்தி சொல்ல முடியாதுடா. எங்கப்பா."

"பதினெட்டு வயசு குமாருக்கு, இருபத்தெட்டு வயசு அப்பாவா?" வாய் பிளந்தான் டேவிட்.

"நாப்பத்தெட்டு வயசு ஆகுது."

"உனக்கு அண்ணன் மாதிரி இருக்குது."

"உனக்கு அம்மா உண்டு; அப்பா கிடையாதுன்னு சொல்லுவியே."

"அப்பா உண்டுடா. அம்மாதான் செத்து போயிட்டாங்க. எனக்காக, இனி கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமா இருந்திட்டாரு எங்கப்பா."

"அப்பா புராணத்தை விடுடா... மாமு நிலவைப் பாருடா?" ஆறு கண்களும் மதுமிதாவை நோக்கித் திரும்பின.

நிலவு சிரித்து, சிரித்துப் பேசிக் கொண்டிருந்தது 'சிம்னி' விளக்குகளுடன். 'காதல் நலக் குழு' கண் இமைக்காமல் பார்த்து, 'நிலா' வெளிச்சத்தில் குளிர் காய்ந்து கொண்டிருந்தது.

மதுமிதாவின் கண்கள் அவர்களை நோக்கித் திரும்பின.

கம்பீரமானது 'காதல் நலக் குழு.'

அவள் உதட்டோரம் புன்னகை பூ ஒன்று பூத்தது போலிருந்தது. மீண்டும் அவள் கண்கள் தோழிகள் பக்கம் திரும்ப, இருட்டில் சிக்கிக் கொண்டது போலிருந்தது குமாருக்கு.

"எந்த வினாடியும், வெளிச்சத்தில இருக்கணும்னு மனசு சொல்லுது. இந்த நிலாவை புடிச்சி என் வீட்ல வைச்சுக்கணும்னு தோண ஆரம்பிச்சிடிச்சி," என்றான் குமார் கண்களில் காதல் மிதக்க.

"நிலாவைத்தான் நான் கையில புடிச்சேன் என்குமாருக்காக.. என்று பாடியபடி 'லபக்' குன்னு புடிச்சி உனக்கு தரட்டுமாடா..?" என்று பரிவுடன் கேட்டான் டேவிட்.

"நீங்க இரண்டு பேர் பேசறதுமே, 'காதல் நலக் குழு'வின் விதிக்கு முரணா இருக்கு. நிலாவின் பார்வை ஒருத்தர் மேல மட்டும் விழுந்தாதான் விதியை மீற முடியும்.. இரண்டு பேரையும் எச்சரிக்கிறேன்." என்றான் ராகவன்.

இருவரும் தலை வணங்கி ஏற்றார்கள்.

'களுக்' என்ற சிரிப்பில் மூவரும் கலந்தனர். நடு இரவில் சாண்டில்யன் நாவல் படித்த நினைவு வந்தது. மதுமிதா குலுங்கிக் குலுங்கி சிரித்துக்கொண்டிருந்தாள். அந்த சிரிப்பில், இவர்களது இதயங்கள் விழுந்து போயிருந்தன அவள் காலடியில்.

பஸ் உற்சாகமாய் வந்து நின்றது. மதுமிதாவும், தோழிகளும் எழுந்து கொண்டனர்.

'காதல் நலக் குழு'வும் எழுந்து கொண்டது.

பஸ்சில் ஏறுவதற்கு முன்னால் மதுமிதாவின் கண்கள், குமாரின் முகத்தில் எதையோ தேடுவது போல் துழாவி விட்டுத் திரும்பி கொண்டன. குமாரின் கால்கள் தரை தொட மறுத்தன.

"மாமு நம்ம காதல் விதி நொறுங்கிடிச்சி. மதுமிதாவை காதலிக்க குமாருக்கு அனுமதி!" என்றான் ராகவன் சோகமாய்.



குமார், மதுமிதாவின் இடுப்பில் கை கோர்த்து டூயட் பாட ஆரம்பித்திருந்தான். 'டிக்கெட்' என்ற கண்டக்டரின் குரல் வில்லனாய் வந்தது.

டேபிளைச் சுற்றிலும் கசக்கப்பட்ட காகிதச் சுருள்கள். அவன் அருகில் கவிதைகளாய் மு.மேத்தாக்கள், வைரமுத்துகள். அவனுக்காக கண் விழித்திருந்தது அறுபது வாட்ஸ் பல்ப் ஒன்று. 'அன்பே மதுமிதா...' என்று பதினேழாவது முறையாக எழுத ஆரம்பித்தான் குமார்.

"என்னடா செய்துகிட்டிருக்கே...? மணி பனிரெண்டாகப் போகுது... ஏதாவது முக்கியமான அசைன்மெண்ட் எழுதுறியா...?" படுக்கை அறையிலிருந்து குரல் கொடுத்தார் குமாரின் அப்பா.

"ஆமாப்பா. முக்கியமான அசைன்மெண்ட் ஒன்னு நாளைக்கு சப்மிட் பண்ணணும்பா." என்றான் குமார்.

"சரி.. சரி.. எழுதி முடிச்சுட்டு படுத்துத் தூங்கு." என்று கூறிவிட்டு புரண்டு படுத்துக் கொண்டார்.

குமார் நிதானமாய், எழுத்து, எழுத்தாய் எழுதத் தொடங்கினான்.

விடிகாலையிலேயே குளித்திருந்தான் குமார்.

ஷேவ் செய்த முகம் 'மழமழ'வென்றிருந்தது. இருப்பதிலேயே நல்ல பேண்ட், சர்ட் எடுத்து அணிந்து கொண்டான். எழுதி வைத்திருந்த 'லவ் லெட்டரை' பூப்போல எடுத்து சட்டைப்பையில் வைத்தான்.

கண்ணாடியில் ஒருமுறைக்கு பத்து முறையாய் பார்த்துக் கொண்டான். முன்னும், பின்னாலும் நடந்து பார்த்துவிட்டு தெருவில் இறங்கி நடந்தான்.

பஸ் ஸ்டாப் தொட்டபோது யாரும் இல்லாதது கண்களுக்கு வெறுமையளித்தது. சட்டைப் பையில் இருந்த காதல் காகிதம் கனத்துக் கிடந்தது.

'நிலா நிலா ஓடி வா..! நில்லாமல் ஓடி வா.' என்று பாட்டு பாடலாம் போலிருந்தது.

'இந்த முட்டாள்களை காணவில்லையே... எங்கே போய்த் தொலைந்தார்கள்?' எரிச்சலும், கோபமும் வந்தது.

'கோபம் முக அழகைக் கெடுக்கும்;' என்பது 'சட்'டென்று நினைவுக்கு வர, முகத்துக்கு புன்னகையை இழுத்து வந்தான். ராகவனும், டேவிட்டும் வந்து சேர்ந்தனர்.

"என்ன குமார்.. நம்மவானத்தில நிலாவைக் காணோம்? இன்னைக்கி அமாவாசை தானே...?" என்று கேட்டான் டேவிட்.

குமார் பதில் சொல்லவில்லை. சட்டைப் பையை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

'லவ் லெட்டர்' கையில் தட்டுப்பட்டு தைரியம் சொன்னது.

"என்னடா குமார்.. ஒரு மாதிரி இருக்கே..?" என்று கேட்டான் ராகவன்.

"ஒ.. ஒண்ணுமில்லை..." அவசரமாய் நெற்றி வியர்வையைத் துடைத்தான்.

மதுமிதாவும், தோழிகளும் சிரித்து பேசியபடி நடந்து வந்தனர்.

'லெட்டரை எப்பொழுது கொடுக்கலாம்?'

மதுமிதா திரும்பி, குமாரை நோக்கி புன்னகை பூ ஒன்று வீசினாள். குமார் இதயம் ஒருமுறை நடுங்கியது. இன்ப அதிர்ச்சி! அவன் அமர்ந்திருக்கும் இடம் நோக்கி நடந்து வந்தாள்.

'எதற்காக இங்கே வருகிறாள்?' அவனுடைய கை, கால்கள் மெலிதாக நடுங்கினது. இன்ப நடுக்கம்.

"குமார்!" என்று அழைத்தாள்.

குயிலே மயங்கும் குரல்.

"ம்.. சொல்லுங்க மதுமிதா?" என்றான் திக்கித் திணறி.

தன் கையிலிருந்த புத்தகத்தை திறந்து ஒரு கவரை கையில் எடுத்தாள்.

குமார் இதயத்தில் தேவதைகள், 'லல்லல்லா' பாடினர்.

"இனி நீங்க என்னை மதுமிதான்னு கூப்பிட வேண்டாம்."

"பிறகு எப்படி கூப்பிடறது? 'நிலா'ன்னு' கூப்பிடட்டுமா..?" என்று கேட்டான் எழுபது எம்.எம்.சிரிப்புடன்.

"இனிமே சித்தின்னு கூப்பிடுங்க. இந்த லெட்டரை உங்க அப்பாகிட்ட குடுத்திடுங்க," லெட்டரை அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்குவதற்கு சில வினாடிகளுக்கு முன்பே மயங்கியிருந்தான் குமார்.



படிப்பகம்

www.padippakam.com

தருவது ரசிகன்



# புதிய தாலாட்டு

போர் உடை தரித்து புறப்பட்டான்
கருணாகரத் தொண்டைமான்.
முதற் குலோத்துங்க சோழனின்
முத்தான பெரும் அமைச்சன்!

"போய் வரவா?"
என்றான் கைப்பிடித்த துணைவியிடம்.

எதிர்பாராக் கேள்வி ஒன்று
எழுந்தது அவளிடம் இருந்து.

"நானும் வரவா அத்தான்
நம் எதிரிகளைப் பந்தாட?"

கருணாகரனின் கண்களில் வியப்பு
உதட்டுக்குள் சிரிப்பு.

"போர்க்களத்திற்கு பெண்கள் எதற்கு
பூப் பறிக்கவா?" என்றான்.

"தலை பறிக்க;
விலை இல்லா நம் நாட்டின்
குலையாத மானம் காக்க!"

அவள் குரலில்
கடும் சினம் தெறித்தது!
பொய்யல்ல அவள் விருப்பம்
எனப் புரிந்தது!

நேற்றிரவு அந்த நிலா ஒளியில்
கனி இதழில்
பூத்திருந்த சிரிப்பெங்கே?

புதுத் தேன் குடத்தில்
ஊறிய மெது கனியாய்
சுவை பகிர்ந்த இதழ் எங்கே?

முத்தத்தை வாங்கிக்கொண்டு
மொத்தமாய் திருப்பித்தந்து
மெத்தையை நோக வைத்த
சித்து விளையாட்டில் சிவந்த
முத்தான வெட்க முகம் எங்கே?

இடை ஆட, இருதோள் ஆட
இடை நடுவே
இரு பூப்பந்து எழுந்தாட,
கரு வண்டு போல்
இரு விழிகள் ஆட,
உடைபட்ட என் மனம் ஒடி
இடை தொட்டு, பின்னர்
உடைதொட்டு விலக்கி விரல்கள் ஆட,
படையெடுப்பை வரவேற்ற
மடை திறந்த மோகத்தாள் எங்கே?

மெல்ல அணைக்க கண்முடி
மேலும் அணைக்க எனை முடி
அள்ளி அணைத்த கரம் எங்கே?

கருணாகரத் தொண்டைமானுக்கு
இன்று தன் துணைவியிடம்
என்றுமில்லாத மாற்றம் தெரிந்தது!

கனியாக இருந்த மேனி
கல்லாகி விட்டதா?
கட்டி விளையாடும் கரங்கள்
எதிரியை வெட்டிப்போடும்
வீரம் பெற்று விட்டதா?"

"மோகத்தில் குவியும் இதழ்கள்
கோபத்தில் துடிக்கிறதே!"

மெல்ல அவளின் தோள் தொட்டான்.
மேகக் கூந்தல் கோதி விட்டான்.

"பெண்கள் போருக்கு செல்வது
சோழ குல மரபல்லவே!"

"மாற்றத்தை அனுமதிக்காத
மரபுகள் மாற்றப்படலாம்!"

"அதற்கு இப்போது என்ன
அவசரம் கண்ணே?
எங்கள் வீரத்தில் நம்பிக்கை இல்லையா?"

"இருக்கிறது, ஆனால்
எதிரிகளின் எண்ணிக்கை
மிக உயரத்தில் இருக்கிறதாம்.
பல நாட்டுப் படைகள்
கரம் கோர்த்து வருகிறதாமே?"

கவலை அவள் கேள்வியில் கண்டு
கலகலவென்று நகைத்தான் அமைச்சன்.

"நாங்கள் எழுந்தால் மலை;
விழுந்தால் விதை!
வெல்லவும் முடியும்,
தோற்றால் மறுபடி
எழவும் முடியும்!"

முன்னால் நகர்ந்தவள்
அவன் கழுத்தை வளைத்தாள்
கவிழ்ந்த முகத்தில்
உதட்டை ஒற்றினாள்.

"வீரனுக்கு பிடித்தது
இரண்டுதான் பெண்ணே?"

"என்ன?"

"காதலியின் முத்தம்,
வீரமரணம்!"

சொன்னது கேட்டவள் மீண்டும் ஒன்று
நெற்றியில் கொடுத்தாள் இதமாய்!

இதழினில் உள்ள செம்மை
திலகமாய் பதிந்துபோக,
"குங்குமத் திலகம் வேண்டாம்
உன் இதழ் திலகம் போதும்."
என்றவன் விடை பெற்றான்!

தொட்டிலில் கிடந்த பிள்ளை
தூக்கம் கலைந்து போக
தூக்கியே தோளில் போட்டாள்!

"கண்மணி கண்ணுறங்கு
பொன்மணி பூங்கண்ணுறங்கு
வீர மரபிலே வந்துதித்த
வேழக் குட்டியே கண்ணுறங்கு!"

களத்தினில் தாளை நீ
கைவாள் சுழற்றலாம் கண்ணுறங்கு!
வீர வரிசையில் உன் பெயர்
தீரமாய் கூறலாம் கண்ணுறங்கு!

வேலினை ஏந்தியும்,
வில்லினை தாங்கியும்
வெற்றி அம்பினை எய்தியும்
நெற்றி நிமித்தலாம் கண்ணுறங்கு!

"என் பால்முலை-தருவது
வீரமாய் விளையட்டும்
தாய் முலை சொரியும்
பாலினைப் போல,
உன் நெஞ்சினில் இருந்து
வீரமே சொரியட்டும்!"

அவள் தாலாட்டுக் கேட்ட
தோழிக்கு வியப்பு!

"என்னடியம்மா,
பெண் குழந்தைக்குப் பாடும்
தாலாட்டா இது?"

"காலம் மாறுகிறது தோழி
நம் கோலம் மாறவேண்டாமா?
கதறியழுதால் கண்ணன் வருவது
கதையில்தான் நடக்கும்!
தன்னைக் காக்கவும், தருக்கர்
செயல் தடுக்கவும் பெண்
கற்றுக் கொண்டால்தான்
வாழ்வு இங்கே சிறக்கும்!"

களத்தில் இருந்து
கருணாகர தொண்டைமானின்
கடிதம் வந்து விசாரித்தது?

"என் மகள் எப்படி இருக்கிறாள்
எப்படி வளர்கிறாள்?"

பதில் எழுதினாள்
சுளீர் என்றிருந்தது!

"புலி வளர்க்கும் புலிக்குட்டி
உங்கள் மகள்.
திடம் கொண்ட யானை
தழுவி வளர்க்கும் சிறு களிறு
உங்கள் மகள்.
மறம் மட்டும் அல்ல
அறம் யாவும் கற்று
அடிமேல் அடியெடுத்து வைக்கிறாள்
உங்கள் அன்புச் செல்வி!"

கடிதம் கண்டவனுக்கு
கலிங்கத்துப் பரணிப் பாடல்
நினைவில் வந்தது.

"சினப்புலி வளர்ப்ப தொர் சிறுபுலியாம் ஒத்தே
திசைக் களிறு அனைப தொர்
தனிக்களிறும் ஒத்தே
அனைத்து அறமும் ஒக்க அடி வைக்க-
அடி வைத்தே
அறத்தொடு மறந்துறை நடக்கா நடை கற்றே"

கலிங்கத்துப்பரணி. பாடல் 241- எழுதியவர்:
புலவர் சயங்கொண்டார்.

இலக்கிய நயம்

ஸ்போர்ட்ஸ்

## மினி உலகக் கோப்பை

அடுத்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி 1999ம் ஆண்டு நடைபெறவுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கு முன்னர் மினி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்தவருடம் நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தலைவர் ஜக்மோகன் டல்மியா தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளை நடத்துவதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் அவசர தேவைகளுக்காகத் தேவைப்படும் நிதியைத் திரட்டிக்கொள்ள முடியும். இது பற்றி வரும் டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெறும் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த மினி உலகக் கோப்பைப் போட்டியில், டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்து பெற்றுள்ள 9 நாடுகள் மட்டுமே கலந்துகொள்கின்றன.

## நீதிமன்றத்தில் இன்சமாம்



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் இன்சமாம்-உல்-ஹக் இம்மாதம் 31ம் திகதி கனடா நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டுள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் கனடாவில் உள்ள டொரன்டோ நகரில் இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே சஹாரா கோப்பைக்கான போட்டிகள் நடைபெற்றன.

இதில் இரண்டாவதாக நடைபெற்ற போட்டியின்போது, இரசிகர் ஒருவர் இன்சமாமைப் பார்த்து கேலி செய்தார். இதனால் ஆத்திரமடைந்த இன்சமாம் கேலி செய்த இரசிகரைத் தாக்கினார்.

இதனால் இன்சமாம் மீது கனடா பொலிசார் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கின் முதற்கட்ட விசாரணை இம்மாதம் 9ம் திகதி நடந்தது. அப்போதுதான் இன்சமாமை இம்மாதம் 31ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டது.

## ஓய்வு பெறும் டேனி



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேனி மொரிஸன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 160 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள மொரிஸன் அனைத்துப் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறப்போவதாக இம்மாதம் 7ம் திகதி அறிவித்தார்.

ரிச்சர்ட் ஹாட்லிக்குப் பின்னர் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள நியூஸிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள மொரிஸன், இதுவரை 48 டெஸ்ட் போட்டிகளிலும், 96 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் ஹாட்ரிக் (அடுத்தடுத்த 3 பந்துகளில் 3 விக்கெட்டுக்கள்) விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள ஒரேயொரு நியூஸிலாந்து வீரர் இவர்தான். 1994ல் இந்தியாவுக்கெதிரான போட்டியொன்றில் இச்சாதனையைப் புரிந்தார்.

## நியூஸிலாந்துடன் மோதல்

முன்னாள் மேற்கிந்தியத் தீவு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கோர்டன் கிறீனிட்ஜ் வழி நடத்தலின் கீழ் இயங்கி வருகிறது பங்களாதேஷ் கிரிக்கெட் அணி. தற்போது, இந்த அணி கென்யாவின் தலைநகர் நைரோபியில் நடைபெறும் 3 நாடுகள் பங்குபற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதையடுத்து வரும் நவம்பர் மாதம் பங்களாதேஷ் அணி நியூஸிலாந்து நாட்டிற்குச் சுற்றுப்பயணம் செய்கிறது. அங்கு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. அத்துடன் 3 நான்கு நாள் போட்டிகளிலும் நியூஸிலாந்து அணியுடன் விளையாடவுள்ளது பங்களாதேஷ்.

பங்களாதேஷ் அணிக்கு இன்னமும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்து கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தியா பதில்கள்

* டியர் சிந்தியா! சமீபத்தில் தங்களை வியக்க வைத்தவர்கள் யார்?

பி. இதயராசா, மன்னார்.

அரசாங்கத்தின் புதிய யோசனைப்படி, அம்பாறையை விட்டுக் கொடுக்கவும் சம்மதித்து, அரசின் மற்றொரு தீர்மானப்படி உருவாகப்போகும் எல்லை மீள் நிர்ணயக் கமிஷன் முடிவுகள் மணலாறு, கந்தளாய், சேருவில போன்ற பகுதிகளையும் அள்ளிக் கொண்டு போகலாம் என்று தெரிந்தும், எல்லாவற்றுக்கும் தலையாட்டி, மகாபாரதப் போரில் உடலோடு ஒட்டியிருந்த கவச குண்டலத்தையும் தானம் கொடுத்த கர்ணனையும், தானம் கொடுப்பதில் மிஞ்சிவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வியக்க வைக்கின்றனர். பாராட்ட வார்த்தைகள் நல்ல தமிழில் இல்லை ஐயா இதயராசா!

* ஐ.தே.கட்சி அரசின் புதிய யோசனைகளை ஆதரிக்குமா?

மா. உதயகுமார், கொழும்பு-08.

அப்படியொரு அற்புதம் நடக்காதய்யா! அரசு இப்போது முன்வைத்துள்ள யோசனையை விடக் குறைந்த யோசனை இனி ஒன்று இருக்குமானால், வடக்கைப் பல துண்டுகளாகப் பிரிக்கும் யோசனையாகத்தான் இருக்கும். அப்படி பிரித்தால்கூட ஐ.தே.கட்சி ஆதரிக்காது.

* இன்றைய நிலையில் வாக்குகளைப் பற்றிச் சிந்திக்காமல் உள்ளதை உள்ளபடி பேசும் கட்சி எது?

ஆ. கணேசன், பண்டாரவளை.

நவ சம சமாஜக் கட்சி!

* புளொட், ஈ.பி.டி.பி., ரெலோ, போன்ற கட்சிகள்தான் புலிகள் ஏகப்பிரதிநிதிகளாக வருவதற்கு தடை என்கிறாரே சிவா?

வி. அல்போன்ஸ், வவுனியா.

அவரது பாணியிலேயே கூறுவதானால், ஏனைய இயக்கங்களை புலிகள் சுடட்டும் என்று சாட்டி விடுகிறாராக்கும். பெரிய மனிதர் (?!) செய்கிற காரியமாங்க இது? நிற்க, புலிகள் பற்றிய சிவா ஐயாவின் உண்மையான அபிப்பிராயத்தை அறிய வேண்டுமானால், வெளிநாட்டு தூதரகங்களுடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும்!

* புலிகளை அமெரிக்கா தடை செய்துள்ளதால் அங்கு புலிகளின் செயற்பாடுகளை பாதிக்குமா?

கி. பூபாலன், கொழும்பு-11.

பூபாலன்! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? இன்றுவரை அமெரிக்காவில் புலிகள் தங்கள் இயக்கப் பெயரில் பகிரங்கமாகச் செயற்பட்டதே இல்லை. கிளை கூட நடத்தியதில்லை. அமெரிக்காவில் புலிகளுக்கு நிதி கொடுக்கும் தமிழர்கள், புலிகளுக்கு கொடுப்பதாக பில் கிளின்ரனுக்கு 'பில்' அனுப்பி வைப்பதும் இல்லை. மேலும் புலிகளின் சர்வதேச செயற்பாட்டில் அமெரிக்கா ஒரு மையமாக இருந்ததும் கிடையாது. இதெல்லாம் தெரியாத ஆசாமிகள்தான் நிதி சேர்ப்பது கடினம்; செயற்படுவது கடினம் என்று நம் காதில் டன் கணக்காகப் பூ சுற்றுகிறார்கள்!

* வீரப்பன் மீண்டும் ஆட்களைக் கடத்தி உள்ளானே?

எம்.என். நசீர், மட்டக்களப்பு.

வேதாளம் மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தில்தான் ஏறும்!

* கொழும்பில் புதிய புதிய தனியார் மருத்துவமனைகள் தோன்றுகிறதே?

ஆர்.என். ஹனீபா, மருதானை.

ஹொங்ஹொங் நாட்டில் ஒரு கேலிப் பாட்டு உண்டாம்:

"என்னை மருத்துவமனைக்கு அனுப் பாதீர்கள்!
அங்கே என்ன நடக்கும் என்று தெரியும்!
என் பணத்தைப் பறிப்பார்கள்:
ஒவ்வொரு நர்சிடமாகத் தூக்கிப் போவார்கள்.
படுக்கையில் இருந்து பள்ளத்தில் விழுந்து,
பாடையில் படுக்கும்படி நேரிடும்!"

* பாகிஸ்தானிடம் இந்திய கிரிக்கெட் அணி அடைந்த தோல்வி பற்றி என்ன கூறுகிறீர்?

மா. ஜெயராகினி, சிலாபம்.

இந்திய எல்லையில் இந்திய இராணுவம் பாகிஸ்தான் காவலரண்களை அடித்துக் கொண்டிருக்க, பாகிஸ்தானுக்குள் இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிராக ரன்கள் அடித்துக் கொண்டிருந்தது பாகிஸ்தான் அணி.



'மருதநாயக'த்தில் கமல்

* 'காதலா காதலா', 'மருதநாயகம்' எது முதலில் வெளியாகும்?

கே. பாஸ்கரன், நுவரெலியா.

'காதலா காதலா'.

* தென்னிலங்கையில் பௌத்த குருமார் சிலர் ஒரு இலட்சம் தேங்காய் உடைத்தனர். இன்னொரு பிரிவினர் தேங்காய் வாங்கி அகதிகளுக்கு அனுப்பினர். போட்டி எப்படி?

ஏ. சசிதரன், குருநாகல்.

தேங்காய் வியாபாரிகளுக்கு கொண்டாட்டம். இரண்டு இலட்சம் தேங்காய்கள் தீர்ந்துபோனதால் ஏற்பட்ட வெற்றிடம் ஊடாகப் புகுந்த தேங்காய்விலை, கொழும்பில் தென்னை உயரத்தையும் தாண்டி விட்டது. போட்டிப் போராட்டம், மக்கள் பாடு திண்டாட்டம்.

* சிந்தியா! சமீபத்தில் இரசித்த ஜோக்?

எம்.எம். முஹமட், திருக்கோணமலை.

"நாட்டில் உள்ள நாட்டியப் பள்ளிகளை எல்லாம் மூடிவிட்டார்களாமே- ஏன்?"

"இனிமேல் அரசே எல்லோரையும் ஆடவைக்கப் போகிறது!"

* காதலியின் பிரிவைத் தாங்கமுடியவில்லை. எப்படி மீள்வது என்றும் தெரியவில்லை?

கே. அருணன், புத்தளம்.

உங்களுக்கு ஒரு லவ் பேர்ட்ஸ் கதை:

காதல் பறவைகள் ஒன்று பிரிந்தால் மற்றொன்று தாங்காது. உள்ளம் உடைந்து போகும்.

ஜோடி காதல் பறவைகளை ஒரு பெண் கூட்டில் வைத்திருந்தாள்.

ஒன்று பிரிந்து போக, மற்றொன்று உருகி இளைக்கத் தொடங்கியது.

அந்தப் பறவையின் உயிரைக்காக்க வழி இல்லையா? என்று பெண் யோசித்தாள்.

கூட்டிலே ஒரு நிலைக் கண்ணாடியை வைத்தாள். பறவை கூவிக் கூவி அந்தக் கண்ணாடியில் அடிக்கடி போய் முட்டிக் கொண்டது. ஒட்டி முடங்கியது.

அதன் பின்னர் ஒருநாள் பறவை இறந்து போனது.

உள்ளம் உடைந்தல்ல! கண்ணாடி உடைந்து!

* டியர் சிந்தியா! நடிகைகளின் வயதை எப்படி கணிப்பிடலாம்?

செல்வி இ. ரமா, கந்தப்பளை.

ரொம்ப அவசியமான கேள்வி என்பதால் இந்தக் கதையைப் பாருங்கள்:

ஒரு சிற்றுண்டி விருந்து நடந்து கொண்டிருந்தது. அங்கே ஒரு வாலிபனுக்குப் பக்கத்தில் ஒரு நடிகை அமர்ந்திருந்தாள்.

"எங்கே எனக்கு என்ன வயது இருக்கும், சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றாள்.

உடனே வாலிபன் சொன்னான்:

"ஒரு தோராயமாக நான் அதை மதிப்பிட்டு விட்டேன். ஆனால் அத்தோடு உங்கள் தோற்றத்தைப் பார்த்து பத்துக் கூட்டுவதா? உங்கள் அறிவைப் பார்த்துக் பத்துக் குறைப்பதா என்பதுதான் எனக்குச் சங்கடமாக இருக்கிறது!"



## சிறு திருத்தம்

'அரசியல் அலசலில்' சேகுவேரா சி.ஐ.ஏ. யினரால் கொல்லப்பட்டது சிலியில் என்று தவறுதலாக இடம்பெற்றுவிட்டது பொலிவியாவில் கொல்லப்பட்டார் என்பதே சரியானது.

1967 அக்டோபர் 9ம் திகதி காலை 9.30 மணிக்கு அமெரிக்க சி.ஐ.ஏ.யினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சாவதற்கு முன் சேகுவேரா சொன்ன கடைசி வார்த்தை:

"புரட்சி என்றைக்கும் அழியாது!"



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 104

இராமபிரான் தனது அருமைத்தம்பி இலக்குவன் தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு நிலை குலைந்தார். அவர் துயரம் ழ்கடலையும் மிஞ்சியதாகப் பெருகியது.

தந்தை தசரதச் சக்கரவர்த்தி இறந்ததாகப் ரதன் சொன்னபோது பெரும் துயரடைந்தார். அப்போது சீதாப்பிராட்டியாரும் தம்பி இலக்கு வனும் அருகிருந்து துயர் துடைத்தனர். ந்தைக்கு நிகரான ஜடாயு இறந்தபோது தம்பி இலக்குவன் துணை நின்று துயரத்தைப் கிர்ந்து கொண் டார். இப்போது இராமபிரான்- னக்கு எல்லாமாக நின்று துணை புரிந்த தன் ம்பி இலக்குமணனையும் இழந்தமையினால், ான் உயிருடன் இருந்துதான் என்ன பயன், ன்று வேதனைப்படலானார்.

இலக்குவன் நிலைகண்டு வருந்திய இராம பிரானின் உள்ளக் குமுறலாக கவிச்சக்கரவர்த்தி ம்பநாட்டாழ்வார் தரும் செய்யுள் இது:

எந்தை இறந்தான் என்றும்
இருந்தேன் உலகு எல்லாம்
தந்தெனன் என்னும் கொள்கை
தவிர்ந்தேன் தனி அல்லேன்
உய்ந்தும் இருந்தாய் நீ என
நின்றேன் உரைகாணேன்
வந்தனென் ஐயா வந்தனென்
ஐயா இனி உயிர் வாழேன்.

(யுத்த காண்டம்-2587)

பொருள்:

*"தந்தை இறந்ததைக் கேள்வியுற்றபோதும் ான் துயரடைந்தேன், எனினும் உயிரைவிட்டு விடவில்லை. அரசபாரத்தை பரதனிடம் கொடுத்தேன்; ஆனால் அதற்காக நான் வருந்த வில்லை. நீ உயிருடன் இருக்கிறாய் என்ற துணிவுடன் துயரங்களையெல்லாம் மறந்திருந் தேன். இப்பொழுது நீ பேச்சு மூச்சற்றுக் கிடக் கிறாய். இனிமேல் நான் உயிர்வாழ மாட்டேன். நீ சென்ற இடத்துக்கே நானும் வந்து விட்டேன்; வந்துவிட்டேன்!"*

இவ்வாறு புலம்பி அழுத இராமபிரான் ன் தம்பியைத் தழுவியவாறு தரையில் கிடந்தார். இராமபிரான் தம்பியின் நிலைகண்டு வருந்திய போது அவர் உதிர்த்த வார்த்தைகளைத் தொடர்ந்து அவர் சாய்ந்துவிட்டதைக் கண்ட- ற்றி நின்ற அனைவரும், இராமபிரான் உயிர்பிரிந்துவிட்டது என்று கருதலாயினர். ங்கும் துயரம் சூழ்ந்தது. தேவர்களும் கலக்க டைந்தனர்.

### வெற்றிப்பெருமிதம்

இப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை இலங்காபுரிக் கோட்டையின் மேற்புறத்திலும் போர்க் களத்திலுமிருந்து பார்த்தவர்கள் இராம

## இராஜதுரோகன்

பிரானும் இளையபெருமாளாகிய இலக்குவனும் உயிர் துறந்துவிட்டனர் என்று எண்ணினர். டோடிச் சென்று இந்திரசித்துவிடமும் நடந்த ம்பவங்களை விபரித்தனர். இந்திரசித்து கோட்டை தில்மேல் நின்றவாறு அவதானித்தான்.

'இலக்குவனுக்கு வீசிய பாணம் அவனை ட்டுமல்லாமல் அவன் அண்ணனையும் வீழ்த்தி விட்டது. ஆக ஒரே கல்லில் இருமாங் கனிக ளைப் பறித்துவிட்டேன்!' என்று கருதிப் பெரு மைப்பட்டான். சற்றும் தாமதிக்காமல் இராவ ணன் இருக்குமிடம் தேடி ஓடோடிச் சென்றான்.

இந்திரசித்து இராவணனிடம் போவதற் டையில் தூதுவர்கள் இராவணனிடம் போய், இராமபிரானும் இறந்துவிட்டதாகக் கூறிவிட்ட ர். இராவணன் மகிழ்ச்சியில் பூரித்துப் பானான். போர்க்களத்தில் ஏராளமான அசுரர் ளின் சடலங்கள் கிடந்தமையினால் அவ்வுடல் ளைக் கொண்டுபோய்க் கடலில் வீசிவிடுமாறு ட்டளையிட்டான். 'இத்தனை பேர் இறந்து பானார்களோ?' என்று போர்முனைப் பக்கம் ரும் சாதாரண குடி அரக்கர்கள் பார்த்து க்கமடையவும் தன்மீது பழி சுமத்தவும் ாய்ப்பளிக்காமலிருக்கவே- முதற்கட்டமையாக ரக்க விரர்களின் சடலங்களை அப்புறப் டுத்த இராவணன் நினைத்தான்.

அடுத்ததாக பறை அறைவோரை அனுப்பி இலங்காபுரி எங்கும் வெற்றி விழாக்களை ஏற் ாடு செய்யுமாறு பணித்தான். இனிமேல் தன் ாட்டுக்கும் தன் இனத்துக் குடிகளுக்கும் தனக்கும் திரிகளே இல்லை என்று குதூகலித்தான். அரக்கர் குடிகள் சகலரும் எண்ணெய் வைத்து ராடி களிப்படையுமாறு கட்டளையிட்டான்.

இதேவேளையில் அவனுடைய குறுக்குப் த்தி ஒரு குறும்புத்தனத்தையும் செய்யத் ாண்டிற்று. சீதாப்பிராட்டியாரை -ஒரு விமானத்திலேற்றி போர்க்களத்தில் இராமரும் இலக்குவனும் இறந்து கிடப்பதைக் காணும்படி ற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டான். இராமன் ஒழிந்து விட்டான்' என்பதை நேரடி ாகவே பிராட்டியார் கண்டுவிட்டாலாவது தன்னுடைய இச்சையை அவள் பூர்த்தி செய்ய அனுமதிப்பாள்!' என்று மிக அர்ப்பத்தனமான ஆசை அவனுக்கு ஏற்பட்டது.

அரக்கியர் காவலுக்குக் கூட வர, சீதாப் பிராட்டியாரை விமானம் ஒன்றில் ஏற்றி போர்க்களம் கொண்டு சென்றார்கள். இராம பிரானும் இலக்குவனும் தரையில் கிடப்பதையும் ஏனையோர்; சோகமே உருவாக அவர்களை, வளைத்து நிற்பதையும் சீதாப்பிராட்டியாருக்குக் காட்டினார்கள். தன் கணவனையும் கொழுந் தனையும் அந்தக் கோலத்தில் கண்டதும் பிராட்டியார் மூர்சித்து விழுந்தார். அருகே

## மருந்துமலை கொணர்ந்த மாருதி



இருந்த விபீடணன் மகளான திரிசடை தாங்கிப் பிடித்து பிராட்டியாரைத் தன்மடியில் கிடத்திக் கொண்டாள். சில அரக்கியர் நீரை எடுத்து சீதாப்பிராட்டியாரின் முகத்தில் தெளித்ததும் மயக்கம் தெளிந்து கண்களை திறந்து பார்த்தார். ஆடாமல் அசையாமல் இராமபிரானும் இளைய பெருமாளும் கிடந்தார்கள். பிராட்டியார் பலமாக அழலானார். தன் மார்மேலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு பதைத்தார். சீதாப்பிராட்டி யார் பட்ட துயரம் இரக்கமற்ற அரக்கியரையும் இரங்க வைத்தது.

### ஆறுதலளித்த திரிசடை

சந்தர்ப்பம் பார்த்து விமானத்திலிருந்து அரக்கியர்களை வேறொரு பக்கம் ஒதுக்கி விட்ட திரிசடை, பிராட்டியாரின் காதுக்கு மட் டும் கேட்கக்கூடியதாக, "தாயே! தெய்வத்தன்மை பொருந்திய தங்கள் கண்வர் உயிரிழந்து விட்டார் என்று எவ்வாறு தங்களால் கருதமுடி கிறது? ஐயனின் உடலில் ஒரு சிறு காயமும் இல்லை என்பதைப் பாருங்கள். தம்பி இலக்கு மணர் வீழ்ந்தமையினால் துயரம் தாங்காமல் அண்ணல் மயக்கமுற்றிருக்கிறார். ஆகவே கவலை தவிர்த்து இருங்கள்! எமது இனத்தவர் மாயாஜாலங்கள் கற்றறிந்தவர்கள், மாய மானாக வந்து தங்களையும் ஏமாற்றி, தங்கள் கணவரை, யும் அவர் தம்பியையும் ஏமாற்றி தங்களை இக்கதிக்குள் ஆளாக்கிவிட்டனர் அல்லவா?

அன்றும் அப்படித்தானே என் பெரியப்பா இராவணேசன், தங்களிடம் தங்கள் தந்தையான ஜனக மகாராஜா போன்றதோர் மாயத் தோற்றத் தைக் காட்டி தங்களைத் தன் வசம் திருப்ப முயன்றார். அதே போலத்தான், தங்கள் கணவரையும் அவர் தம்பியையும் இப்பொழுது கொன்று விட்டதாக மாயாஜாலம் புரிகிறார்கள். கவலையை விடுங்கள். மாருதி தங்களுக்கு அளித்த வாக்குப் பொய்யாகாது. எப்படியும் தங்கள் எண்ணம் கைகூடி, தங்களுக்கு விடு தலை கிடைக்கும்!" என்றார்.

இவ்வாறு திரிசடை கூறியவற்றால் பிராட்டியார் ஆறுதலடைந்தார். இருப்பினும் சந்தேகம் ஏற்படாமலிருக்க, கணவனின் உருவத்தை மீண்டும் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். திரிசடை, விமானத்தைத் திருப்பி அசோகவனம் கொண்டு செல்லுமாறு கூறியதும் விமானம் கிளம்பியது.

***

வானரப் படையினருக்கு உணவுக்குரிய ஆயத்தங்களைச் செய்துவிட்டுத் திரும்பிய விபீடணர், தமது அணியினர் முன்பு போல் மீண்டும் பெரும் சோகத்தில் கிடப்பதைக் கண்டார். இராமபிரானும் இலக்குவனும் கிடந்த இடத்தை அனுகினார். இருவரும் இறந்து விட்டதாகவே தமது அணியினர் கருதிவிட்டனர் என்பதை உணர்ந்த விபீடணர், இராம பிரானுடைய அங்கங்கள் எவற்றிலும் எதுவித காயமும் இல்லாதிருப்பதை அவதானித்தார். இந்திர சித்து பிரம்மாஸ் திரத்தைப் பிரயோசிக்க முயற்சி எடுத்தான் என்ற தகவலையும் அவர் தனது ஒற்றர்கள் மூலம் அறிந்து வைத்திருந்தார். இலக்குவனுடைய உடலை அருகில் சென்று பார்த்தார். பிரம்மாஸ்திரம் தனது முழு உக்கிரத் தையும் இலக்குவன் மீது செலுத்தியிருக்கிறது என்பதை உணர்ந்தார். சுற்றி நின்றவர்களைப் பார்த்து, ஆஞ்சநேயரை அழைத்து அங்கு நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்தார்.

### ஜாம்பவன் கூறிய யோசனை

ஆஞ்சநேயர் மிகவும் சோர்வடைந்தவராகக் காணப்பட்டார். இலக்குவனைப் பாணம் தாக்கியபோது இராமபிரான் தனது குடிலில் பூஜையிலீடுபட்டிருந்ததாகவும், இலக்குமணன் மீது வீசப்பட்ட பாணத்தின் வேகம் தன் போன்றாரையும் நிலைகுலைய வைத்து விட்டது என்றும் கூறினார். இந்த வேளையில் அங்கு முனகல் சப்தம் கேட்டது. ஜாம்பவன் தரையில் சுருண்டு கிடந்து ஏதோ கூறிக்கொண்டிருந்தார். விபீடணரும் ஆஞ்சநேயரும் ஜாம்பவனை அணுகினர். ஆஞ்சநேயரின் கையைப் பிடித்துக் கொண்டவாறு ஜாம்பவன் மிகவும் தழுதழுத்த குரலில், ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டு வரு மாறு கேட்டார். நீர்கொண்டு வந்ததும் அப்பாத் திரத்துள் தன் வலது கை விரல்கள் மூன்றினை விட்டு, கண்களை மூடிக்கொண்டு மந்திரங்களை ஓதினார். அப்பாத்திரத்தினை அனுமனிடம் கொடுத்து நீரை இராமபிரானின் உடலில் தெளிக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆஞ்சநேயர் அதனைப் பக்தியுடன் பெற்றுக்கொண்டு, "ராம ஜெயம்...ராம ஜெயம்" என்று மிகப்பலமாக உச்சரிக்க, சுற்றி நின்றவர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு ஸ்ரீ ராம மந்திரத்தைக் கோஷமிட ஆரம்பித்தனர். அந்த ஒலி அப்பிர தேசம் எங்கணும் எதிரொலித்தது. ஆஞ்சநேயர் மந்திரித்த நீரை இராமபிரான்மீது தெளித்ததும், நீண்ட உறக்கத்திலிருந்து விழிப்படைந்தவரைப் போன்று இராமபிரான் எழுந்தார்.

ஜாம்பவனும் எழுந்து நடக்க முடியாதவ ராக தவழ்ந்தவண்ணம் இராமபிரான் அருகே வந்து சேர்ந்தார். அவரை இராமபிரான் ஆதரவுடன் தழுவிக் கொண்டு தன்மடிமீது அவருடைய தலையை வைத்துக் கொண்டார். அப்பொழுது ஜாம்பவன் மீண்டும் ஆஞ்ச நேயரை அழைத்து மிக மென்மையான குரலில், "மாருதி! இந்த இக்கட்டான நிலையில் உம்மால் தான் உதவி செய்ய முடியும்! காலதாமதமின்றி இமயமலைதாண்டி, அங்கிருந்து மேருமலை யையும் தாண்டிச் சென்றால் அங்குள்ள சஞ்சீவி மலையில் நான்கு மூலிகைச் செடிகள் உள்ளன. மாண்டவர்களை மீண்டும் உயிர்பெறச் செய்யவும், பிளவுபட்ட சடலங்களை ஒன்று சேர்த்து உயிரூட்டவும், உடலில் பாய்ந்துள்ள அம்புகளைத் தானாகவே நீக்கி, காயங்களைக் குணப்படுத்தவும், தாக்குதலுக்குள்ளாகுமுன்னர் இருந்த அதே உருவத்தை மீண்டும் பெறவும் இம்மூலிகைகள் நான்கும் உதவக்கூடியன. இவற்றை உடனே சென்று கொண்டுந்து சேர்ப்பீரானால் இலக்குவன் உயிர்பெற்றெழு வார். போரில் இதுவரை உயிர்விட்ட எமது வீரர்களும் உயிருடன் எழுந்து விடுவார்கள்!" என்று கூறினார்.

அனுமன் உடனடியாக இராமபிரானின் தாள் தொட்டு வணங்கி, ஸ்ரீ இராம மந்திரத்தை ஜபித்த வண்ணம் எழுந்தார். அங்கிருந்தபடியே விசுவரூபத்தை எடுத்து வானிலே புகுந்து மறைந்தார். அந்தரத்தில் அதிவேகமாகப் பறந்து சென்ற மாருதி சில நாளிகைகளிலேயே சஞ்சீவி மலையை அடைந்தார். ஆனால் ஜாம்பவன் குறிப்பிட்ட மூலிகைகளை அடையாளம் காண அவரால் முடியவில்லை. ஆகவே சஞ்சீவி மலையையே அடியோடு பெயர்த்தெடுத்து தன்தோள்மீது சுமந்த வண்ணம் இலங்கை நோக்கிப் புறப்பட்டார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 102

சரியானவிடை:- நாகாஸ்திரம். (அரவக்கணை)

1. முருகேஸ் ரட்ணகுமார், பாரதி வித்தியாலயம், பதுளை.
2. குணம் ரஜனி, பண்டாரிக்குளம், வவுனியா.
3. செல்வி சியானா அலஸ், இல-46, வைத்தியசாலை வீதி, கம்பளை.
4. செல்வி ஜே. ஜேசுமேரி, 1/5, பிரின்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.
5. செல்வி சி. கிருபாளினி, நஸ்ரியா மத்திய கல்லரி, சிலாபம்.

**போட்டி இல. 104** கேள்வி:- விபீடணரின் மகளுடைய பெயர் என்ன?

ஒக்டோபர் 25 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி— இல. 104, தினமுரசு வாரமலர், த.பெ.இல— 1772, கொழும்பு.**

# மாயமானும் மதியுரை சீலரும்

காதிலை பூ கந்தசாமி

காட்டுக்குள் ஒரு மானைக் கொண்டுவந்து நிறுத்துகிறார் கலாநிதி சீலன். யாராவது பார்க்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்க்கிறார். பின்னர் காட்டைவிட்டு ஓடிவருகிறார்.

ஓரிடத்தில் திருவாளர்கள் சபா சிதம்பரத்தார், பம்மந்தர் ஆகியோரும் தமிழ்க்கட்சியினரும் நிற்கிறார்கள். காட்டிலிருந்து வருவதுபோல் இல்லாமல் வீட்டிலிருந்து வருவதுபோல பந்தாவாக பாதுகாப்புப் பரிவாரங்களுடன் வந்து இறங்குகிறார் சீலர்.

**பம்மந்தர்:** வாரும், வாரும் சீலரே! நல்ல நேரத்தில் வந்தீரே!

**சீலன்:** விடயம் என்ன விளம்புக.

**பம்மந்தர்:** காட்டுக்குள் ஒரு மானாம். அதனைக் காணாவிட்டால் வாழ்வே வீணாம்.

**சீலன்:** என்ன மானா? மான்தானா என்று முதலில் நாம் ஆராயவேண்டாமா? உடனே மான்தான் என்று கூறினால் ஏதோ நாம்தான் மானைக் கொண்டுவந்து காட்டுக்குள் விட்டோம் என்று விஷமிகள் கூறுவார்கள். அவதூறு பரப்புவார்கள்.

**சபா.சிதம்பரம்:** அப்படிக் கூறுபவர்கள் குழப்பவாதிகள்! நானும் கட்டிளம் காளையாக இருந்தபோது இப்படித் தான் குழப்பிக் கொண்டிருந்தனான்.

**பத்திரிகையாளர்:** (குறுக்காலே ஓடிவருகிறார்) மிஸ்டர் சீலன்! மான் ஒன்று புதிதாக காட்டுக்குள் வந்துள்ளதாமே நீங்கள் அதைக் கண்டதுண்டா? கருத்து ஏதும் கூற உண்டா?

**சீலன்:** மான் வந்திருப்பதாகத்தான் கேள்வி. எதற்கும் மானைக் கண்டபின்னர்தான் எங்கள் புதைகுழுவை... சே.. பொதுக்குழுவைக் கூட்டி குசுகுசுப்போம். பின்னர் தான் கருத்துக் கூறுவோம்.

(மான் பற்றி ஆராய சீலர் முயற்சி. பொதுக்குழுவை கூட்டி குசுகுசுக்க உள்ளனர் என்று குறிப்பு எழுதிக் கொண்டு பத்திரிகையாளர் செல்கிறார். பம்மந்தரை நோக்கி கண்சிமிட்டுகிறார் சீலன்.)

**சீலன்:** (தமிழ்க் கட்சியினரை நோக்கி) மான் பார்க்க வாறீகளா? மானின் கண் பார்க்க வாறீகளா? மானின் எழில் காண வாறீகளா?

(எல்லோரும் சீலருடன் காட்டுக்குப் போகிறார்கள்)

**சபா சிதம்பரம்:** (மானைக் கண்டதும் பாடுகிறார்)

அந்த மானைப் பாருங்கள் அழகு
மானே வந்து எங்களுடன் உலவு
இந்த மான்தான் உலகில் பெரிது
இதுபோல் இல்லை வேறு அழகு

**த. கட்சிகள்:** ஐயன்மீர்! அந்த மானுக்கும் உங்களுக்கும் என்ன உறவு?

**சபா சிதம்பரம்:** (டென்ஷனாகிறார்) தீய சக்திகள்தான் அப்படிச் சொல்கிறார்கள். அவர்கள் தேய்ந்துபோகட்டும். தேய்ந்து போகட்டும். தே...தே.... தே...தேய்ந்து போகட்டும்.

**பம்மந்தர்:** காயாத கானகத்தே
மேயாத மான்-இது
சோக்கான மான்!

**த. கட்சிகள்:** என்ன அண்ணே சொல்லுறியள்? மேயாத மான் என்று சொல்லுறியள், அது ஒரு பக்கத்தாலே கோதிக் கோதி மேய்ந்து கொண்டிருக்குது. இப்படியே மேய்ந்தா கடைசியா ஒன்றும் மிஞ்சாது போல கிடக்கு.

**சீலன்:** மான் மேய்வது சட்டப்படி தப்பில்லை, திட்டப்படிகூட ஒரு பக்கத்தை மேய அனுமதிக்கலாம்.

**த. கட்சிகள்:** எல்லாம் எங்கள் பூமிதானே. நாங்கள் மேயவிடமாட்டோம். சூ...சூய்...ஓடு...ஓடு..

**சீலன்:** ஹி.ஹி.ஹி.ஹிக்கிக் ஹி.

**த.கட்சிகள்:** ஏன் அண்ணே சிரிக்கிறியள்?

**சீலன்:** உங்களிடம் தடியும் இல்லை, பொல்லும் இல்லை. அட்லீஸ் ஒரு கல்லும் இல்லையே.... ஹி.ஹி.ஹி.

**த.கட்சிகள்:** அப்ப என்ன தடிக்குத்தானோ மரியாதை?

**சீலன்:** மரியாதை என்று யார் சொன்னது. ஒரு பயம்தான்... ஹி.ஹி.ஹி.

**சபா சிதம்பரம்:** சும்மா பேசிப் பேசிக் குழப்பவேண்டாம் பிள்ளைகாள். மானின் அழகைப் பாருங்கோ. அதன் மேனி எழிலை பாருங்கோ. மேய்வதை மேயட்டும் தள்ளி நில்லுங்கோ.

**பம்மந்தர்:** சம் பாட்டீஸ் ஓகேயாம். சம் பாட்டீஸ் ஓகேயாம்.

**த. கட்சிகள்:** அண்ணே என்ன மாடோ மேய்க்கிறியள், யாரண்ணே அந்த பாட்டீஸ்?

**பம்மந்தர்:** தம்பிமாருக்கு இங்கிலீசு தெரியுதோ எந்த யுனிவர்சிற்றியிலே படித்தீர்கள்? பட்டம் என்ன, படித்ததென்ன சொல்லுங்கோ?

**த. கட்சிகள்:** பள்ளிக்கூடம் போகவிட்டனியளே? வீட்டுக்கு ஒரு வீரனே விரைந்து வா என்று கூப்பிட்டுப்போட்டு, ஏன் யுனிவர்சிற்றிக்கு போகேல்லை என்று கேட்கிறியளே! விட்டிருந்தா நாங்களும் உங்களை மாதிரி கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டு, வாயிலே பைப்பும் கொளுவிக்கொண்டு, சச்சுப்புச்சு எண்டு இங்கிலீசும் பேசிக்கொண்டு, காலையிலே கோர்ட், மாலையிலே டென்னிஸ் கோர்ட், இரவினிலே மைக்கிலே ஸ்பீக் எண்டு அரசியல் நடத்திக் கலக்கியிருப்பமல்லோ.

**பம்மந்தர்:** (முகத்தை சுளித்துக்கொண்டு) சரி சரி படிக்காட்டிப் பரவாயில்லை. படிச்ச ஆக்கள் பேசட்டும் எண்டு போட்டு ஒரு ஓரமாக நின்று எங்கள் வாயைப் பார்த்துக்கொண்டு இருங்கோ. எங்கள் உச்சரிப்பு, உதடு அசைவு பார்த்து....

**த. கட்சிகள்:** ஸ்டைலு ஸ்டைலுதான் சூப்பர் ஸ்டைலுதான் எண்டு பாட வேணுமோ? அந்தக் காலத்திலே உது தானே நடந்தது. போராடுறவன்தான் பேசவேணும். பேசுறவன்தான் போராட வேணும். பேச ஒருத்தன் போராட ஒருத்தன் என்றால், இதென்ன கோர்ட்டோ, காசு கொடுத்து லோயர் வைத்துப் பேசுறதுக்கு?

**சீலன்:** ஏன் இந்தச் சண்டை? நீங்கள் இப்ப போராடுறியளோ, இல்லைத்தானே? எங்கள் ஸ்டைலைத்தானே ஃபொலோ பண்ணுறியள். எங்களுக்குள்ளே ஒரு உடன்பாட்டுக்கு வருவோம்.

**த.கட்சிகள்:** என்ன உடன்பாடு?

**சீலன்:** மானைப் புகழ்வோம். மானை வாழ்த்துவோம். இந்த மானின் பின் செல்வோம்.

**த. கட்சிகள்:** மானை நம்பித்தானே சீதையைப் பறிகொடுத்தவை.

**சபா.சிதம்பரம்:** பறிகொடுக்காட்டி இராமாயணம் என்ற சூப்பர் கதை கிடைச்சிருக்குமோ? ஒன்றை இழந்து தானே இன்னொன்றை பெறவேணும்!

**த. கட்சிகள்:** பறிகொடுத்துக் கொண்டு சண்டை பிடிக்கலாம் என்று சொல்லுறியளோ?

**சீலன்:** உங்களுக்கு பொயிண்ட் விளங்கேல்லை. பறிகொடுப்பது எங்கள் பணி. சண்டை பிடிச்சு பறித்தெடுப்பது அவர்கள் பணி.

**த. கட்சிகள்:** அவர்களும் பேச வரவேணும் என்றும் நீங்கள்தானே சொல்லுறியள்?

**சீலன்:** வரமாட்டினம் எண்டு தெரிஞ்சு தானே வரச்சொல்லுறம். ஹி.ஹி.ஹி. பயப்பிடாதேங்கோ, அவை வரமுன்னர் நாங்கள் பறிகொடுக்கிற பணியை சூப்பரா செய்து முடிச்சுப் போடுவம்!

**பம்மந்தர்:** அதனை நான் ஆமோதிக்கிறேன். அவை சண்டையை நிறுத்திப்போட்டு எங்கள் பக்கம் பார்க்கும்போது, நாங்கள் எல்லாவற்றையும் கொடுத்துப்போட்டு கோவணத்துடன் ஆண்டியாய்தானே நிற்போம். அவைக்கு இரக்கம்தான் வரும். கோபம்வராது.

**சீலன்:** குட் ஐடியா. சட்டப்படி ரைட்!

**த. கட்சிகள்:** பம்மந்தர் அண்ணரின் ஊரிலே மலை இருக்குது. பழனியாண்டிமாதிரி ஒடிப்போய் மலையிலே நிற்கலாம் எண்டு நினைக்கிறார். அந்த மலையும் மிஞ்சினாத்தானே அதில் ஏறிக் கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டு நிற்கலாம். இந்த மான் அந்த மலையையும் ஒரு பக்கத்தாலே மேய்ஞ்சு போடும் அண்ணே!



**சீலன்:** அஞ்சற்க, அஞ்சற்க. மான் ஓடும் அழகைப்பாருங்கோ. மான் ஓட, நாம் ஓட, மயிலும் ஆட, மையல் கொண்டு மக்கள் வாக்குப்போட, மறுபடி நமக்கே பதவி சேர, அதுக்குத் தோதாக கொஞ்ச நிலமும் சேர, அதுபோதும், மீண்டும் எலக்ஷனில் போட்டிபோட... ஓடி வாருங்கோ....

(எல்லோரும் மானின் பின்னால் ஓடுகிறார்கள். திடீரென்று மான் ஓநாயாக மாறுகிறது.)

**த.கட்சிகள்:** அண்ணே இது என்ன கொடுமை? மான் ஓநாயாகிவிட்டதே. நாம் தொலைந்தோம்.

**சீலன்:** ஆமாம் தொலைந்தோம். வாருங்கள், ஓரிடம் இருக்கிறது. அதுதான் ஏற்ற இடம். அதுதான் ஒரே இடம்.

(ஒரு கூட்டுக்குள் கொண்டுபோய் விடுகிறார். தமிழ்க்கட்சிகள் குந்தியிருக்கவும் இடமில்லாமல் முழிக்கிறார்கள். சீலன் புன்னகைக்கிறார்.)

**சபா. சிதம்பரம்:** ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா!

**த. கட்சிகள்:** உதென்ன உங்கள் பொதுக் குழுத் தீர்மானமோ? அல்லது அரசியல் குழுவின் ஆய்வறிக்கையோ?

**பம்மந்தர்:** எங்கள் சாணக்கியத்தின் பெருமையை பறை சாற்றுகிறார். கடைசியாக ஆறடி நிலமாவது கிடைக்கச் செய்து விட்டோம் அல்லவா. இந்தக் கட்டத்துக்கு உங்களையெல்லாம் கொண்டுவந்த பெருமையை எங்களிடம் இருந்து யாராவது பறிக்க முடியுமா? ரெல் மீ. ரெல் மீ! இதுக்குத்தான் சொல்லுறது பட்டப் படிப்பு கட்டாயம் வேணும். கேம்பிறிட்ஜின் இங்கிலீஸ் தெரிந்திருக்க வேணும் எண்டு.

**(அரச சபை நோக்கி ஓடுகிறார் சீலன் மானைக்காட்டி மதிமயக்கிய சூப்பர் மேன் என்ற விருது வழங்கப்படுகிறது. ஆட்டிலெறி பீரங்கிகள் சூழ்ந்த பாதுகாப்புடன் வீடு நோக்கிச் செல்கிறார் சீலன்.)**




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# செவ்வாயில் உலா



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


↓ ஐரோப்பாவில் கருங்கடலுக்கு வடக்கே-தற்போதைய உக்ரேன் மற்றும் முன்னாள் சோவியத் யூனியனைச் சேர்ந்த நாடுகளைக் கொண்ட ஒரு பகுதியாக ஸ்கித்தியா என்ற பிரதேசம் இருந்தது. இப்பகுதியில் வாழ்ந்த ஸ்கித்திய மக்கள் கிறிஸ்துவுக்கு முன் பல நூற்றாண்டுகள் வரை சிறப்புற்று வாழ்ந்தனர்.

எதற்கும் அஞ்சாத போர் வீரர்களாகவும் மிகக் கொடியவர்களாகவும் விளங்கிய இம்மக்கள் மிகச் செல்வம் படைத்தவர்களாகவும் உயர்தர வாழ்க்கையினை வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடப்பட்ட போதிலும், இவர்களுடைய கொடூரமான முரட்டு சுபாவத்தால், இவர்களை காட்டு மிராண்டிகள் என்றே வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

காலவெள்ளத்தால் ஸ்கித்தியா பல கூறுகளாகப் பிரிந்து போயிற்று. மக்களும் வெவ்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். இருப்பினும் அம்மக்களின் செல்வச் சிறப்புடன் கூடிய வாழ்க்கையைச் சித்தரிக்கும் கை வண்ணங்கள் அவர்களின் மேலான வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.


## தங்கக் கலை

'ஸ்கித்தியா' பிரதேசத்தில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சியின்போது பல சான்றுகள் கிடைத்தன. ஐரோப்பிய நாடுகளிலுள்ள அரும் பொருட் காட்சிச் சாலைகளில் அவை இடம்பிடித்துள்ளன.

படத்தில் இருப்பது தங்கத்தால் உருவாக்கப்பட்ட சிற்பம். மிகப் பிரமாண்டமான தோற்றம் கொண்டது. அந்தளவுக்கு தங்கம் அவர்களிடம் கொட்டிக் கிடந்திருக்கிறது. இதனைவிட மேலும் பல தங்கச் சிற்பங்களும், ஆபரணங்களும், கைவினைப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இரு வீரர்கள் தங்களுடைய ஆடையை வடிவமைப்பது போன்ற காட்சி இது. அவர்கள் அருகில் பாருங்கள், அம்பறாத் தூணிகள் காணப்படுகின்றன. எந்த நேரத்திலும் அம்புகளை உருவத் தயார் நிலையில் உள்ளனர். எப்போதும் போருக்குத் தயாராக இருந்த அக்கால வாழ்க்கையையும் பிரதிபலிக்கிறது அல்லவா?

வளமோடும், பலத்தோடும் வாழ்ந்த 'ஸ்கித்திய' மக்கள் தற்போது திசைக்கொன்றாகப் பிரிந்து கிடப்பதால் பலமின்றி, தனித்துவம் இன்றி வாழ்கின்றனர். 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்'. நிலத்தை இழந்து, ஒன்றுபட்ட பலத்தையும் இழந்ததால் விலாசம் இன்றிப் போன இனங்கள் பல உண்டு. வாழும் இனங்களுக்கு இது ஒரு பாடம். இல்லாவிட்டால் இன்றுள்ள பல இனங்களின் வரலாறும் தோண்டியெடுக்கப்படும் தடயங்கள் மூலம்தான் அறியப்படும்.





↑ விஞ்ஞான அற்புதங்களில் மிக சமீபத்திய அற்புதம் செவ்வாய் விஜயம். அமெரிக்க விஞ்ஞானிகள் தங்கள் மூளையைக் கசக்கி சாறு பிழிந்து கண்டுபிடித்த வாகனம்தான் 'சொஜேணர் மைக்ரோ றோவர்'.

பாதாளக் கிடங்கில் பயங்கர சைக்கிள் ஓட்டம் என்றதும் வாய் பிளந்து பார்த்தது ஒரு காலம். இப்போது செவ்வாய் கிரகத்தில் 'சொஜேணர்' வாகனம் குடு குடுவென்று ஓடுவதை தொலைக்காட்சிகள் காண்பிக்கின்றன.

செவ்வாய்க் கிரகத்துக்கு அதனை அனுப்ப முன்னர் விஞ்ஞானிகள் இறுதிக்கட்டமாக சரிபார்க்கும் காட்சிதான் படத்தில் உள்ளது. அமெரிக்காவில் பசடோனா என்ற இடத்தில் உள்ள உந்துவிசை ஆய்வுகூடத்தில்தான் இந்தப் பணிகள் நடந்தன. எத்தகைய கரடு முரடான தரைப்பகுதியிலும் தடங்கல் இல்லாமல் ஓடித்திரிந்து தகவல்களை சேகரித்து அனுப்பக் கூடியது 'சொஜேணர்'. சூரிய சக்தியால் இது இயங்குகிறது. தற்போது செவ்வாயில் குஷியாக ரவுண்ட் அடித்துக் கொண்டிருக்கிறது. செவ்வாய் எங்கிருக்கிறது தெரியுமா? அதாவது செவ்வாய்கிரகம் பூமியிலிருந்து சராசரியாக ஐந்தரைக்கோடி கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. செவ்வாயை யாரும் சுற்றுவதில்லை. தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும். அதற்கான நேரம் 24 மணி 37 நிமிடம் 23 நொடிகள். செவ்வாய் சூரியனைச் சுற்ற பிடிக்கும்நேரம் 687 நாட்கள்.

செவ்வாய் வாயுமண்டலம் பூமியில் இருப்பதைவிட அடர்த்தி குறைவானது. 0.005 தான் அங்குள்ள அடர்த்தி. செவ்வாயின் மேற்பரப்பில் பெரிய மலைகளும், பழைய குழிகளும், ஆழமான பள்ளங்களும் காணப்படுகின்றன. அதற்காக நம்ஊர் தெருக்களையெல்லாம் செவ்வாய்க் கிரகம் என்று நினைத்து விடக்கூடாது.

சூரிய குடும்பத்திலேயே மிகப் பெரிய எரிமலையான 'ஒலிம்பிக் மான்ஸ்' என்ற எரிமலை செவ்வாயில்தான் உண்டு. செவ்வாயோ செவ்வாய்!

இரண்டாவது படத்தில் இருக்கும் வாகனத்தை இனிமேல்தான் வெள்ளோட்டம் விடப்போகிறார்கள். இது சந்திர மண்டலத்துக்கு செல்லப்போகிறது. அங்கு ஊர்ந்து சென்று உலா நடத்த வசதியாக உருவாக்கி உள்ளனர். இதன் நீளம் ஆறு அடி. எதிர்வரும் காலத்தில் சந்திர மண்டலத்துக்கு செல்லும் வீரர்கள் இந்த வாகனத்தில் ஏறி ரவுண்ட் அடிப்பர். இதுவும் கரடு முரடான பாதைகளில் சவாரி செய்யும். இதன் சிறப்பு என்ன தெரியுமா? இதனை சரியாகக் கையாளத் தெரியாத எவராவது சாரதியாக ஏறினால் நிராகரித்துவிடும். உபயோகிக்கும் வித்தை தெரிந்தவர்களுக்கு மட்டும் அனுமதி தரும். எத்தனை புதுமையான தயாரிப்பு!

## 3வது பிறந்தநாள் வாழ்த்து



### பிரியங்கா

யாழ் மானிப்பாயை பிறப்பிடமாகவும் லெபனானில் வசிப்பவர்களுமான எம்.சிவா-ரீட்டா தம்பதியினரின் செல்வப் புதல்வி *பிரியங்கா* தனது மூன்றாவது பிறந்த நாளை 29-09-97 அன்று மாத்தளையில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக் கொண்டாடினார். இவரை லெபனானில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, யாழ் அப்பப்பா, அம்மம்மா, ஜேக்குமார் பெரியப்பா குடும்பத்தினர், ராதா மாமி குடும்பத்தினர், சவுதியில் வசிக்கும் கிளி, விசி சித்தப்பாமார், மாத்தளை அம்மப்பா, அம்மம்மா, மாமா குடும்பத்தினர், சேகர் மாமா, சித்தி குடும்பத்தினர், லெபனானில் வசிக்கும் டிக்சன் மாமா, அசோக்கா அன்ரி, ரவி மாமா, விஜி அன்ரி,மற்றும் மாமாமார், மாமிமார், நண்பர்கள், அனைவரும் ஆண்டவன் கிருபையால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.




## இனப்பெருக்கம்

↑ பெண்களின் வழவழப்பான கழுத்துகளுக்கு உதாரணமாகக் கூறப்படும் சங்குகள் மீதும் பலர் கண்வைத்ததால், சங்குத் தட்டுப்பாடு பயங்கரமாக ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாநிலத்தின் கடற்கரைகளில் காணப்படும் இத்தகைய அழகிய சங்குகள் (படத்தில் உள்ளது) மிக வேகமாக அருகி வருகின்றன. இவற்றின் அழகினால் கவரப்படுவோர் இவற்றை அதிகமாகப் பிடித்து தங்கள் இல்லங்களில் அலங்காரப் பொருட்களாக வைக்க ஆரம்பித்தனர்.

இதனால் மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் காரணமாகவும் இவை அழிந்து வருகின்றன. இதனால் ஃபுளோரிடா மாநில அரசு 1985ம் ஆண்டில் இத்தகைய சங்குகளையும், இதே வகைச் சிப்பிவகைகளையும் பிடிப்பதைத் தடைசெய்துவிட்டது. ஃபுளோரிடாவிலுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு இலாகா இந்தச் சங்குகளின் இனம் முற்று முழுதாக அழிந்து போகாதிருக்க மற்றுமொரு ஏற்பாட்டையும் செய்தது. இவ்வினச் சங்குகளைச் சேகரித்து அவற்றைப் பிறிதோரிடத்தில் இனவிருத்தி செய்து, மொத்தம் 5000 குஞ்சுகளை கடற்கரையில் விட்டுவிட்டனர்.

இவற்றை வேறு பெரிய ஜந்துக்கள் உணவாக்கி விடாமல் கூடுமான பாதுகாப்புகளையும் செய்தனர். இவற்றின் நடமாட்டங்களை அவதானிப்பதற்காக, இவற்றில் அலுமினிய அடையாளங்களைப் பொறித்து விட்டுள்ளனர். அடிக்கடி சுழியோடிகளின் உதவியுடன் இந்த அடையாளங்கள் (இலக்கங்கள்) பரிசீலனை செய்யப்பட்டு குறிப்புகளும் சேகரிக்கப் படுகின்றன.

சங்கினத்தை காப்பாற்ற அமெரிக்காவில் உள்ள மாநில அரசு காட்டும் அக்கறையை, மனித இனங்களைக் காப்பதிலும் அமெரிக்கா காண்பித்தால் எத்தனை உபகாரமாக இருக்கும்.


படிப்பகம்